பிறை

ஆசிரியர் : ஏ. எம். மீரான்

பிறை 1 | துல்கஃதா 1376 ஜூன் 1957 | [illegible] 6

சென்னை-600 008 148305

பொருளடக்கம் பக்கம்

மலரும் மணமும் 2
வருங்காலம் (தலையங்கம்) 3
பிறைக் கதிர் 4
பேனுமன்னர் தேவன் —மகரம் 6
அன்புக் குரல் 7
தித்திக்கும் திருமறை—எம். அப்துல் வஹ்ஹாப் எம்.ஏ.,பி.டி.எச். 10
சிப்பிக்குள்... 13
அன்புப் பிணைப்பு —எம். ஸி. எம். ஸுபைர் 14
கொடை வள்ளல் —மௌலவீ எம். எப். ஜமாலுத்தீன் 16
திருமணம் —கே. எஸ். மகுதூம் முஹ்யித்தீன் பி. ஏ., 17
நன்னெறி —"ஸித்தீக்" 21
ரோஜா முள் (தொடர் கதை) 'மகுதூம்' 22
உலக மதம் —அர்ஸலான் 31
காகிதக் கப்பல் (அட்டைப்படக் கதை) —ஏ. எம். மீரான் 34
கள்ளனும் காவலனும் (நாடகம்) 'ஹஸன்' 44
புறங் கூறுமை "ஷேக்கோ" 50
கைம்மாறு —முஹம்மது ஹஸன் 51
எறும்பு —அ. அப்துர்ரஹீம் 53
கந்தல் உடையில் காவலன்! 55
சீர்திருத்தப் பொக்கிஷம் —டி, எம். பீர்முஹம்மது 56
புத்தக விமர்சனம் 58
கேள்வி? பதில்! 62

'பிறை'யில் இடம் பெறும் கதைகளிலுள்ள பெயர்கள் யாவும் கற்பனைதான்!

உள் நாடு விலை 40 காசு :: வெளி நாடு விலை 50 காசு (8 அணா)

மலரும் மணமும்

அன்புக் கடலாம் ஆண்டவனுக்கே புகழனைத்தும்!

பெருநாள் மலரைப் பாராட்டிக் கடிதங்கள் எழுதிய நண்பர்களுக்கும், பாராட்டுரை நேரிலேயே வழங்கிய அன்பர்களுக்கும் எம் அகங்கனிந்த நன்றி. கதைகளை, கட்டுரைகளை, கவிதைகளைத் தனித் தனியே அலசி ஆராய்ந்து அவற்றின் சிறப்பையெல்லாம் விரிவாக எழுதியனுப்பிய நண்பர்களின் கடிதங்களைக் காணுந்தோறும், மலரை உருவாக்க நாம் பட்ட சிரமங்களெல்லாம் மனதை விட்டு மறைந்தன. மிகக் குறுகிய காலத்தில் வாசகர்களின் அளப்பரிய ஆதரவுக்குப் பாத்திரமாகிவிட்ட 'பிறை' யின் ஒளி, நாள் தோறும் பரவ நல்ல நாயன் துணை செய்வானாக!

இந்த இதழிலிருந்து தமிழ் நாட்டில் புகழ் பெற்று விளங்கும் சமுதாயச் சிறு கதைச் செல்வர் ஒவ்வொருவரின் சிறு கதையை—அவரே தேர்ந்தெடுத்ததைப் பிரசுரிக்கத் துவங்கியுள்ளோம். இவ்வரிசையின் முதல் கதையாக ஆசிரியரின் "காகிதக் கப்பல்" வெளியாகிறது. 'ஜலீல்' எழுதும் "கள்ளனும் காவலனும்" என்னும் நாடகம் ஸ்பெயினில் இஸ்லாம் ஆட்சி செலுத்திய காலத்தை நினைவூட்டுகிறது.

இஸ்லாமியத் திருமணத்தின் சிறப்பினை விவரிக்கிறது ஜனாப் மகுதூம் முஹைதீனின் கட்டுரை. 'குத்பா'வைத் தாய் மொழியிலே ஓதலாமா — என்னும் கேள்விக்கு ஆராய்ச்சி முடிவைத் தருகிறது கேள்வி—பதில் பகுதி. ஆரம்ப எழுத்தாளர்களுக்கென ஒரு புதிய பகுதியைத் துவக்கியிருக்கிறோம். இன்னும் உங்கள் மனதை மகிழ்விக்க இருக்கும் பல அம்சங்களையும் உங்கள் பார்வைக்கு விடுத்து, அடுத்த இதழுக்கு வருவோம்.

ஜூலை இதழ் ஹஜ் மலராக அதிகப் பக்கங்களில் சாதாரண விலைக்கே வெளியிடப்படும். சிறந்த சிறு கதைகளையும், சீரிய கட்டுரைகளையும் இப்பொழுதிருந்தே தயாரித்து வருகிறோம். 'எம். ஏ' யின் சுவை மிக்க ஒரு வரலாற்றுக் கட்டுரையை ஹஜ் மலரில் வெளியிட இருக்கிறோம். இமாம் கஸ்ஸாலீயின் இஹ்யாவிலிருந்து ஒரு மொழி பெயர்ப்புக் கட்டுரை மலரில் துவங்குகிறது. இன்னும் உங்களை பிரமிக்க வைக்கும் சில புத்தம் புது அம்சங்களையும் மலரில் சேர்க்க எண்ணியுள்ளோம் (இன்ஷா அல்லாஹ்.)

உங்கள் அன்புக்கும் ஆசிக்கும் எங்கள் நெஞ்சம் நிறைந்த நன்றி.

வஸ்ஸலாம்

பிறை

வருங்காலம்

விலைகள் பெருகுகின்றன; வாழ்க்கைத் தரம் உயர்கிறது. இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களாலும் வேலையில்லாக் கொடுமையை ஒழிக்க முடியவில்லை. ஒரு வருஷம் பூமி வரண்டு பயிர் பச்சைகள் கருகினால், மறு வருஷம் வெள்ளம் பெருக் கெடுத்து நிலபுலங்களை அழித்து விடுகின்றது. இவற்றின் விளைவாக வருவாய் சுருங்குகிறது; விலைவாசி ஏறுகிறது. இந்த நம் அவதியிலும், கடல் கடந்து வாழும் நம் சோதரர்களைப் பற்றிய கவலை ஏற்படுகிறது.

பர்மா, மலாயா, இலங்கை போன்ற நாடுகளில் தமிழகத்திலிருந்து தொழிலுக்காகச் சென்ற ஏராளமான முஸ்லிம்கள் வதிகிறார்கள். ஒரு காலத்தில் உழைப்புக்கேற்ற ஊதியம் இவர்களுக்குக் கிடைத்து வந்தது. தாங்கள் தேடிய சம்பாத்தியத்தில் கணிசமான அளவு தாய்நாட்டுக்கும் இவர்கள் அனுப்பி வந்தனர். நாளாவட்டத்தில் இந்நாடுகளில் பிறநாட்டவர்க்குக் கிடைத்து வந்த சலுகைகள் குறையலாயின. மேலும் மக்கள் தங்கள் நாட்டுக்கு வராமற் செய்ய அங்கே சட்டங்கள் இயற்றப்பட்டன. இப்பொழுது அங்கே வாழ்பவர்களும் செலாவணிக் கட்டுப்பாடுகளினால் தங்கள் குடும்பங்களின் பராமரிப்புக்கே போதிய அளவு பணம் அனுப்ப முடியாது, கஷ்டப்படுகின்றனர்.

பல்லாண்டுகளாக இந்த நாடுகளில் தொழில் செய்து வரும் எண்ணற்ற மக்களை பிறந்த நாட்டுக்குத் திருப்பியனுப்ப முயற்சிகள் செய்யப்படுகின்றன. ஏறத்தாழ இன்னும் பத்தாண்டுகளில் கடல் கடந்து வாழும் முஸ்லிம்களில் பலர் இங்கே திரும்பி வருவார்கள். இவர்களில் பெரும்பாலானோர் பணவசதியற்றவர்கள்.

தாய்த்திரு நாட்டிற்குத் திரும்பிவரப் போகும் இச்சோதரர்களின் நிலை என்ன? இதில் நாம் இப்பொழுதே கவனம் செலுத்தக் கடமைப்பட்டவர்கள்.

தமிழ் நாட்டிலே ஆங்காங்கே வாழும் செல்வர்கள் இம்முஸ்லிம்களின் துயர் துடைக்க முன்வரவேண்டும். முடங்கிக் கிடக்கும் தங்கள் மூலதனங்களை வைத்து ஆலைகளும், தொழிற்சாலைகளும் நிறுவ இவர்கள் வழி செய்யவேண்டும். தொழில் நுணுக்கக் கல்வி கற்க ஆர்வங்கொண்டு நிற்கும் முஸ்லிம் இளைஞர்களை ஊக்குவிக்க வேண்டும்.

இத்துறையிலே முஸ்லிம் செல்வந்தர்களின் கவனத்தைத் திருப்புமாறு சமுதாயத் தலைவர்களைக் கேட்டுக் கொள்கிறோம்

பிறைக் கதிர்

மத்திய சர்க்காரின் புதிய வரிகள்

சில நாட்களுக்கு முன்பு அகில இந்திய காங்கிரஸின் பொதுக் காரியதரிசி காங்கிரஸ்காரர்களுக்கு ஒரு யோசனை கூறினார். "எதிர்க் கட்சியினர் அரசாங்கத்தினரின் குற்றங்குறைகளை எடுத்துக் காட்டி பொதுமக்களின் ஆதரவைத் தட்டிக்கொண்டு போகிறார்கள். நீங்களும் பயமின்றிப் பேசுங்கள்" என்று அவர் கூறியிருப்பதிலிருந்து மக்களுடைய நன்மையைக் கருதி அவர் அவ்வாறு பேசவில்லை என்பதும் எதிர்க் கட்சியினருக்குக் கிடைக்கும் நல்லபெயர் தம் கட்சிக்குக் கிடைக்க வேண்டுமென்ற ஆத்திரத்திலேதான் அவர் அவ்வாறு சொல்ல நேர்ந்ததென்பதும் தெளிவாகிறது. ஆட்சிபீடத்தில் அமர்ந்திருப்பவர்கள் அவருடைய கருத்தை எவ்வளவுதூரம் வரவேற்பார்கள் என்பது சந்தேகத்துக்குரிய விஷயம். ஆனாலும் ஓரளவுக்கு இந்தயோசனை பயன் தந்துள்ளது என்றே தெரிகிறது. பார்லிமெண்டில் காங்கிரஸ் அங்கத்தினர்களும் மாஜி மந்திரிகளும் கூட சர்க்காரின் வரிவிதிப்புகளைக் கண்டித்துப் பேசும் துணிவு பெற்றிருக்கிறார்கள். ஜனநாயகம் வெற்றியோடு நடந்தேறுவதற்கு உகந்த மாற்றம் இது என்ற முறையில் இதைக் கண்டு மகிழ்கிறோம். பண மூட்டைகளை மாத்திரமே பாதிக்கக் கூடிய சர்க்காரின் வரிவிதிப்புக்களை இல்லாமற் செய்வதற்கு இந்த சுதந்திரத்தைப் பயன் படுத்தாமல், ஏழை மக்களின் முதுகெலும்பை முறிக்கும் வரிகளை நீக்க காங்கிரஸ் கட்சி அங்கத்தினர்கள் முயல வேண்டும்.

மத்திய அரசாங்கத்தின், வரவு செலவுத் திட்டங்களுள் நடுத்தர வகுப்பினரையும் ஏழை மக்களையும் கடுமையாகப் பாதிக்கும் பல அம்சங்கள் காணப்படுகின்றன. நல்லவேளையாக, பத்திரிகைக் காகித வரியும் மண்ணெண்ணெய் வரியும் வாபஸ் பெறப்பட்டு விட்டன. அதுபோலவே, சர்க்கரை, தேயிலை, காப்பி, தீப்பெட்டி முதலியவற்றின் மீதுள்ள வரிகளும் வாபஸ் பெறப்பட்டால் பொது மக்களின் செலவுச்சுமை குறையும். அதோடு தபால்கார்டின் விலையை அதிகரிப்பது அநியாயமான செயலாகும். சென்ற ஏப்ரலுக்கு முன் 4½ காசு (முக்காலணா) ஆக இருந்த கார்டின் விலையை 6 காசு என்று, 33 சத விகிதமாக உயர்த்துவது எளியவர்களின் மீது விதிக்கும் தண்டனையே ஆகும். முன்பொரு தடவை கார்டின் விலையை உயர்த்த விரும்பிய போது தபால் இலகா மந்திரி தபால்-கார்டினால் இலாகாவுக்கு நஷ்டமே ஏற்படுவதாகவும் விற்கும் விலையை விட கார்டின் அடக்க விலை அதிகம் என்றும் கூறினார். விசித்திரமான இந்தக் காரணம், உண்மையாக இருந்தால் இது உடனடியாக விசாரிக்கப்பட வேண்டிய விஷயமாகும். கடைகளில் காலணாவுக்கு இரண்டு வெற்றுக் கார்டு கிடைக்கிறது. தபால் இலாகா விற்கும் விலை மட்டும் அவ்வளவு கூடுதலாக இருப்பதேன்? தபால்கார்டு தயாரிப்பதற்காக உபயோகிக்கும் அட்டையின் தரத்தைச் சிறிது குறைத்தேனும் கார்டை பழைய விலைக்கே கிடைக்க சர்க்கார் ஏற்பாடு செய்ய மக்கள் சார்பாகக் கோருகிறோம்.

ரயில்வேப் பிரயாணிகளுக்கு விதிக்கப்பட விருக்கும் 'பிரயாணவரி' யும் மிகவும் அநியாயமானதாகும். மூன்றாம் வகுப்பு பிரயாணிகளுடைய கஷ்டங்கள் நாளுக்கு நாள் கூடுகின்றனவே தவிர குறையும் வழியைக் காணோம். கூட்ஸ் வண்டி நிறைய சாமான்களை அடுக்குவது போலத்தான் இன்னும் பிரயாணிகள் வண்டிகளில் திணிந்து செல்ல வேண்டியிருக்கிறது. வண்டிகளில் விளக்குகளையும் மின்சார விசிறிகளையும் அதிகரிப்பதால் மட்டும் மூன்றாம் வகுப்புப் பிரயாணிகளுடைய தொல்லைகள் தீர்ந்து விடுவதில்லை. பகலில் வசதியாக அமர்ந்து செல்லவும் இரவில் படுத்துத் தூங்கிய வண்ணம் பிரயாணம் செய்யவும் எல்லோருக்கும் வசதி செய்து கொடுத்து பிரயாணக் கட்டணங்களைக் கூட்டுவதானால் யாரும் ஆட்சேபிப்பதற்கில்லை. ஆனால் நிலைமை இதற்கு நேர்மாறாக இருப்பதால் இந்தப் புதிய வரியை வன்மையாக எதிர்க்கிறோம். இரண்டாவது திட்டத்தை நிறைவேற்றுவதற்கும், பொது ஜனங்களிடம் உள்ள மிஞ்சிய பணத்தை உறிஞ்சி பணவீக்கத்தைத் தடுப்பதற்கும், என்றெல்லாம் நொண்டிச் சமாதானங்கள் காட்டி விகிதங்களை ஏற்றிக் கொண்டே வருகிறார்கள். இக்காலத்தில் யாரும் உல்லாசத்துக்காகப் பிரயாணம் செய்வதில்லை. பொருளாதார நிலை அந்த அளவுக்கு இடந்தருவதாக இல்லை. தவிர்க்க முடியாத காரணங்களுக்காகவே ரயில் ஏறுகிறார்கள் அவர்கள். அவர்களை இவ்விதம் தண்டிப்பது முறையல்ல, நேர்மையல்ல, என்று சர்க்காருக்கு எச்சரிக்கை செய்கிறோம்.

இப்பொழுதே பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் இருந்ததை விட நாலு மடங்கு விலைவாசிகள் அதிகரித்திருப்பதாக அரசாங்கத்தின் புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன. (நடைமுறையில் இதற்கும் மேலாகவே விலைவாசிகள் ஏறியிருக்கின்றன) ஆனால் இந்த விலை ஏற்றத்துக்கு ஈடுசெய்யும் வகையிலே மக்களின் வருவாய் உயர்ந்திருக்கிறதா? இல்லை. இன்னும் வரிகளைச் சுமத்திக் கொண்டே போனால், மக்கள் எப்படிக் கொடுப்பார்கள்.

பார்லிமெண்டில் நிதி மந்திரி புது வரிகள் பற்றி 'பட்ஜெட்' பிரசங்கத்தில் குறிப்பிட்டு வருகையில், "கூரை இடிந்து விழுந்திருந்தால் கூட இதுவும் புது வரிகளில் ஒன்று போலும் என்று பார்லிமெண்ட் அங்கத்தினர்கள் செயலற்று இருந்திருப்பார்கள்," என்று நம் சகோதரப்பத்திரிகை ஒன்று எழுதியிருந்தது. அந்த அளவுக்கு மக்களின் பிரதிநிதிகளைச் செய்திருக்கின்றன இப்புது வரிகள் என்பதில் சந்தேகமில்லை. இவ்வரிகளில் பலவற்றை நீக்கி, மக்களின் சுமையைக் குறைக்கவேண்டியது பார்லிமெண்ட அங்கத்தினர்களின் கடமை என்பதை அவர்களுக்கு நினைவூட்டுகிறோம்.

The New College

Madras-14

The College re-opens on monday, the 24th June 1957. Copies of prospectus and application form for admission to the pre-University course and B. A. and B Sc. (new regulations), subject to grant of affiliation by the University in Degree course can be had from the College office by sending a self-addressed stamped envelope. Non-vegetarian Hostel accommodation available. There is provision for National cadet corps in the College.

Principal:

New College

MADRAS-14

பேனா மன்னர் தேவன்

✻

மகரம்

பேராசிரியர் "கல்கி"க்குப் பிறகு பத்திரிகை உலகில் முடிசூடா மன்னராக விளங்கிய "தேவன்" காலமானார் என்ற செய்தி கேட்டதும் தமிழ் உலகே திடுக்கிட்டது. தூமகேது தோன்றினால் மன்னர்களுக்கு ஆபத்து என்று ஒரு நம்பிக்கை உண்டு. சென்ற ஏப்ரல் மாத இறுதியில் தமிழ் நாட்டில் சில இடங்களில் தூமகேது தெரிந்ததாகப் பத்திரிகைகளில் படித்தோம். மன்னர்களின் தொகை உலகில் குறைந்து வருவதால், இனிமேல் தூமகேதுகளுக்கு வேலையே இல்லை என்று நாம் நினைத்துக்கொண்டு அசட்டையாக இருந்த சமயம் தேவனின் பிரிவுச் செய்தி வந்து நம்மைத் தாக்கியுள்ளது. மூட நம்பிக்கைகளிலும் பொருள் இருக்கிறதோ என்று நம்மைத் திகைக்க வைத்து விட்டது பேனாமன்னர் தேவனின் அகால மரணம்.

தேவன் அவர்களுடன் நான் 1944 முதல் நெருங்கிப் பழகி இருக்கிறேன். அனைவருடனும் அவர் இதமாகப் பழகுவார். எவ்வளவோ வேலைத் தொந்தரவுகள் இருந்த போதிலும், உடம்பில் எவ்வளவோ அசதி இருந்தபோதிலும் உள்ளத்தில் எத்தனையோ வேதனைகள் இருந்தபோதிலும் அவருடைய முகம் மலர்ந்து தான் காணப்படும். நண்பர்களை இன் முகத்துடன் வரவேற்று நெடுநேரம் பேசிக் கொண்டிருப்பார். பிறருடைய மனம் புண்படாமல் உரையாடுவதில் அவர் வல்லவர். ஆனால் பலர் அவருடைய மனத்தைப் புண்படுத்தி இருக்கிறார்கள்.

தேவன் அடக்கமே உருவானவர். பத்து நாவல்களையும், நூற்றுக் கணக்கான கட்டுரையும், கிட்டத்தட்ட ஐந்நூறு கதைகளையும் அவர் எழுதி இருக்கிறார். தமிழ் நாட்டின் மிகப் பிரபலமான பத்திரிகையின் ஆசிரிய பீடத்தில் பதினைந்து வருஷகாலம் அமர்ந்திருக்கிறார். அப்படி இருந்தும் அவர் கர்வமற்றிருந்தார். வசதியும் ஆற்றலும் குறைந்த மற்ற எழுத்தாளர்களைப் பற்றிக் குறைவாகப் பேசவோ எழுதவோ அவருக்குத் தெரியாது. இத்தகைய உயர்ந்த குணங்கள் தாம் அவரைத் தமிழ் எழுத்தாளர் சங்கத்துத் தலைமைப் பதவியில் கொண்டு அமர்த்தின.

இளம் எழுத்தாளர்களை எப்படி எல்லாம் ஊக்குவிக்க வேண்டுமென்பதை அவர் நன்கு அறிந்திருந்தார். கல்கி அவர்கள் தனக்கு வழி காட்டியாக இருந்தது போல தான் பலருக்கு உதவ வேண்டுமென்ற ஆவல் அவரிடம் நிறைந்திருந்தது. அவருடைய காரியாலயத்துக்கு அனுப்பப்பட்ட அத்தனை கையெழுத்துப் பிரதிகளையும் அவரே படித்து முடிவு காண்பார். பிரசுரத்துக்கு யோக்யமானவைகளை உடனே பிரசுரிப்பார். அடித்தோ திருத்தியோ சற்று மாற்றியோ பிரசுரிக்க நேர்ந்தால் அதை வெகு நாசூக்காகச் செய்யும் திறமை அவரிடமிருந்தது.

முஸ்லிம்களுடைய வாழ்க்கையைச் சரியானபடி பிரதிபலிக்கும் நல்ல கதைகளை அடிக்கடி வெளியிட வேண்டும் என்ற ஆர்வம் அவருக்கு இருந்தது. முஸ்லிம் எழுத்தாளர்கள் 'பிராமணக் கதைகள்' எழுதுவதும், முஸ்லிம் அல்லாதவர்கள் முஸ்லிம் வாழ்க்கையை ஒட்டிக் கதை எழுதுவதாக நினைத்துக் கொண்டு எதை எதையோ எழுதுவதும் மாற வேண்டுமென்று அவர் விரும்பினார். இதன் பயனாக "எம். ஏ," ஆர். பி. மல்லாரி, "ஜமீலா," 'மகுதூம்' போன்ற முஸ்லிம் எழுத்தாளர்களே எழுதிய முஸ்லிம் சமூகக் கதைகள் பலவற்றையும் அவர் ஆனந்த விகடனில் பிரசுரித்திருக்கிறார்.

அவருடைய பெயரை வாழையடி வாழையாகத் தமிழ் மக்கள் ஞாபகம் வைத்துக்கொள்ளும் அளவுக்குப் பல கதைகளை அவர் எழுதியிருக்கிறார். அவற்றைப் புத்தக வடிவில் கொண்டு வந்து அவர் நினைவைப் பசுமையாக்குவோமாக!

★

அன்புக் குரல்

அன்புள்ள ஆசிரியருக்கு

"பிறை" பெருநாள் மலர் கதை, கட்டுரை, கவிதை, நாடகம், ஸஹாபாக்களின் ஜீவியம், விஞ்ஞானம் இன்னோரன்ன எல்லாவித அம்சங்களும் நிறைவுறப் பொருந்திய நன்மலராக நறுமணம் வீசுகிறது; மிகவும் மகிழ்ச்சி.

ஜே. எம். அபூபக்ர்
(இபுனு ஜமாலுத்தீன்)
நாகப்பட்டினம்

மலர்.........எழில் பூத்த மலரின் மணத்தைவிட அதிகமாக நல்லவர்களின் உள்ளங்களைத் தொடுகிறது. 'அறிவுலகப் பேரொளி'யும் "தித்திக்கும் திருமறை"யும் சிறுகதைச் செல்வர் தீட்டும் செந்தமிழ் நாவல் "ரோஜா முள்"ளும் தேன் மணக்கும் தெள்ளமுதமாக இனிக்கிறது.

ஜே. அக்பர்
மதுரை

பெருநாள் மலரில் வெளியான 'தங்கையே காப்பாற்று!' "வீரத்தின் விலை", "கனவு பலித்தது" என்ற மூன்று கதைகளையும் அவைகளை எழுதிய டி. எபி. துபாஷ், மஹதி, 'ஜமீலா' இவர்களையும் பாராட்டுகிறேன்.

எம். எஸ். ஏ. அஜீஸ்,
அத்திக்கடை.

'பிறை'யின் இனிய மணம் பல்லாண்டு காலம் பரந்து வீச இறைவனை வேண்டுகிறேன்; வாழ்த்துகிறேன்.

எம். ஏ. கபூர்
கட்டுகஸ் தொட்டை (இலங்கை)

'பிறை' பெருநாள் மலரில் வெளிவந்துள்ள கதைகள் அற்புதம். நான் ரசித்துப் படித்தேன்.

எஸ். ராமநாதன் ('ராசு')
சென்னை-24

"பிறை" சஞ்சிகையின் இதழ் இவ்விடம் வாங்கிப் பார்த்தேன். செந்தமிழ் நடையில், சிந்தனையைத் தூண்டக்கூடிய கட்டுரைகளும் நமது சமூக நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட அழகிய கதைகளும், இனிய கவிதைகளும்–ஒரு வகையில் நம்மனைவருடைய ஆர்வத்தையும் பூர்த்தி செய்யும் வகையில் அமைந்து–நிறைந்து காணப்படுவதால் மக்கள் விரும்பி வரவேற்பர் என்பதிலோ தமிழுலகில் நல்லதொரு செல்வாக்கைப் பெறும் என்பதிலோ கொஞ்சமும் ஐயங்கொள்ள வேண்டியதில்லை.

எம். எச். உதுமான் மரைக்காயர்
கோலாலம்பூர்

'பிறை'யின் அரசியல் தலையங்கங்கள் என்னைப் பெரிதும் கவர்ந்து வருகின்றன. ஆசிய நாடுகள் ஒருமித்து எதிர்த்து வரும் அணுகுண்டு சோதனையைப் பற்றிய ரமலான் மலரில் தங்கள் தலையங்கத்தை யார் தான் பாராட்டமாட்டார்கள்? சில பத்திரிகைகளில் கூறிவரும் வேடிக்கைப் பதில்களைப் போல் அல்லாமல் கேட்கப்படும் கேள்விகளுக்கு அறிவிற்குப் பொருத்தமாக, ஆதாரத்துடன் ஆணித்தரமாகத் தாங்கள் அளித்துவரும் பதில்கள்—அறிவுரை பெரிதும் உதவுகின்றன.

எம். செவுத்து மரைக்காயர்
பொனப்பேன்—கம்போடியா

ரமலான் மலர் கண்டு மட்டில்லா மகிழ்ச்சியுற்றேன். தித்திக்கும் திரு

சுவை மிக்க நாவல்கள் !

ஏ. எம். மீரான் எழுதியவை

அத்தனையும் துப்பறியும் நவீனங்கள் !

1. அபாயச் சீட்டு	விலை ரூ.	1.00
2. மர்ம மாளிகை		1.00
3. இவனைத் தெரிகிறதா ?		1.25
4. மர்மக் கடிதம்		1.50
5. இரண்டே நாள் !		1.00
6. இருளிலே ஓர் உருவம் !		1.00
7. பழி தீர்ந்தது !		1.00
8. குயில் பூங்கா மர்மம்		1.50
9. தங்கமாளிகை ரகசியம்		1.50
10. பணத்துக்கு ஓர் உயிர் !		1.25
11. நீலத்திரை மர்மம்		1.75
12. கண்ணாமூச்சி !		1.25
13. கண்ணம்மாவைக் காணவில்லை !		1.50
14. வெள்ளை நிழல் !		(அச்சில்)

கிடைக்குமிடம் :

பிறை நிலையம்

192, அங்கப்ப நாயக்கன் தெரு.

த. பெ. எண் 1688

சென்னை-1

மறையின் தெளிவுரை மனித உள்ளத்தைப் பண்படுத்தும் ஒரு தெவிட்டாத விருந்து. சிறுவிற்கு 'ஹஸன்' தரும் விரிவுரை மனசில் பதிகிறது. 'மகுதா' வின் உபமானங்கள் சிந்தனையைக் கிளறுகின்றன. இல்லாமியக் கலைச் செல்வத்தை வாரி, வாரி வழங்குவதோடு அல்லாமல் தனிப்பெரும் செம்மொழியாம் தமிழ் மொழியின் வளர்ச்சியிலும் 'பிறை' பெரிதும் ஈடுபட்டுள்ளது.

பி. எம். ஹுஸைன் மாலிம்
பி.ஏ. (ஆனர்ஸ்)
செய்கோன்-வியட்னும்

பெருநாள் 'பிறை' என் இதயத்திற்கு நிறைவையளித்தது. 'அறிவுலகப் பேரொளி' அழகு சொல் ஓவியம்.

முகவை, கு. மி. செய்யித் சித்தீக் சாகிப்
கடைத் தெருப் பள்ளி பேஷ் இமாம்
சிலாபம் (இலங்கை)

'எம்.ஏ.' யின் 'அறிவுலகப்பேரொளி' முடிவுற்றதைக் காணப்பெரிதும் ஏமாற்றமடைந்தேன். எனினும் தொடர்ந்தது, இமாம் கஸ்ஸாலீ அவர்களின் சொல்லோவியங்களை 'பிறை' யில் இடம் பெறச் செய்வீர்கள் என நம்புகிறேன்.

எப். கே. அப்துர் ரஸாக்
மதரூஸ் 1

'பிறை' யின் முதல் பெருநாள் மலர் இலக்கியச் சுவை தரும் இன்பக் காவியங்களைத் தாங்கி, குறைந்த விலையில் நல்ல அம்சங்களைக் கொண்டதாக இருந்தது.

எம். எம். ஜெய்னுலாபிதீன்
கொழும்பு-11

எம். அப்துல் வஹ்ஹாப் ஸாஹிப் எம். ஏ. பி. டி எச்., அவர்களின் 'வேதத்தின்பெருநாள்' என்ற விளக்கம் 'பிறை'க்குப் பேரணியாக அமைந்துவிட்டது. 'ஹஸன்' அவர்கள் 'மறையோன் கண்ட மதி வதனர்' என்ற தலைப்பில் தந்த சிறுவின்பம் கற்றவர்களுக்கு மட்டுமல்லாமல் பாமரர்களுக்கும் பெருநாள் விருந்தாகிவிட்டது. ஐந்தாம் பிறை பெருநாள் மலருடன் தந்த ஒளி அஞ்ஞானமெனும் இருளையகற்றி முழு நிலா தரும் பேரின்பமான பிரகாசத்தைப் 'பிறை' தந்துவிட்டது.

ஏ. எம். முஹம்மது ஹுஸைன்
நத்தம், அபிராமம்

அன்பும் அமுதும் ஒழுக, தன் மைந்தன் வாயிலிடும் ஓரன்னையைப் போல் பணியாற்றும் 'பிறை' யே அஸ்ஸலாமு அலைக்கும்.

யு. எஸ். எம். ஏ. ஸித்தீக்
ரத்னபுரா (இலங்கை)

'பிறை' யின் பெருநாள் மலர் வரப்பெற்று ஆனந்தம் அடைந்தேன். 50 காசுக்கு, அழகிய முறையில் 112 பக்கங்களைக் கொண்டதாய், 'பிறை' வெளிவர என்ன பாடுபட்டிருக்குமோ...

சமூகத்தைச் சீர்திருத்துவான் வேண்டி சிறந்த எழுத்தாளர்களைக் கொண்டு பணியாற்றி வரும் 'பிறை' பல்லாண்டு வாழ வல்லவன் துணை புரிவானாக !

தாஜ்-உத்-தீன்
மாபோலை (இலங்கை)

பெருநாள் மலரில் வெளியான 'தங்கையே காப்பாற்று !' என்னும் டி. ஸி. துபாஷ் அவர்களின் அற்புதப் படைப்பினைக் கண்டேன்; பெரு மகிழ்வெய்தினேன்.

ஏ. குடுமியான் கான்
மதுரை

அருமைக் கதைகள் கண்டேன்;
ஆய்வு மிகும் கட்டுரைகள் கண்டேன் !
இன் கவிதை தனையும் தாங்கி
இளம் பிறை வரவும் கண்டேன் !

கீழக்கரை ஏ. எம். ஏ. காசிம் ★

பாரசீக இலக்கியத்திலிருந்து......

உழைப்பு

இரண்டு சகோதரர்களில் பெரியவன் அரசசேவையில் பெரும் பொருளீட்டி சுகபோகங்களில் மூழ்கிக் கிடந்தான். இளையவனோ நெற்றி வேர்வை நிலத்தில் விழ உழைத்து அன்று கிடைத்த ஊதியம் கொண்டு உண்டு வாழ்ந்து வந்தான்.

"உழைப்பின் கொடுமையிலிருந்து விடுபட அரச சேவையில் சேருகிறாயா" என்று தன் தம்பியைக் கேட்டான் அண்ணன்.

அவனுக்குக் கிடைத்த பதில் :

"அண்ணா; அரண்மனைச் சேவகமானாலும் அடிமைத்தனம் தானே. இந்தக் கேவலத்திலிருந்து விடுபட நீயும் உழைத்துப் பிழைக்கக் கூடாதா ?

மேலும் "தன் உழைப்பினால் கிடைத்த ஒரு பிடி சோற்றைத் தின்று விட்டு உட்கார்ந்திருப்பது, தங்கத்தோடா மாட்டிக் கொண்டு ஒருவனுக்குக் கைகட்டி நிற்பதை விடச் சாலச்சிறந்தது. களிமண்ணைப் பிசைந்து பக்குவப்படுத்தி பானை வனையும் கைகள், நகத்திலே அழுக்குப் படாதவாறு பேணி மற்றவனுக்கு வணக்கம் செலுத்தும் கரங்களை விட எவ்வளவோ மேலானது. ஒரு சாண் வயிற்றுக்காக வாழ்க்கையையே நாம் வீணாக்குகிறோம். வெய்யில் காலத்தில் என்ன உடுத்துவது குளிர் காலத்தில் என்ன உண்பது என்பன போன்ற சிந்தனைகளே நம் மனதை ஆட்டி வைக்கின்றன. "பிடி சோறு போதும்," என்று திடம் வந்த அன்றே அடுத்தவனுக்கு அடிபணியும் எண்ணம் அழிந்து போகும்," என்று பக்குவமாக எடுத்துரைத்தான் தம்பி.

உழைப்பின் உயர்வை உணர்ந்த அண்ணன் அன்றே அரசபணியை உதறி விட்டு உழைப்பாளியானான்.

சிந்திக்கும் திருமறை

6

வேதத்தின் பெருநாள்

[புனிதமான ஒரு ரமலான் இரவிலே உலகினுக்கோர் ஒளி விளக்காய் திருமறை அருளப் பெற்றதையும், அதன் மூலமாக உலக ஆட்சி பீடமே கை மாறியதையும் பற்றிச் சென்ற இதழில் படித்தோம். உலகின் புதிய ஆட்சியாளர்களை இப்பொழுது பார்ப்போம்.]

எம்.அப்துல் வஹ்ஹாப்
எம்.ஏ., பி.டி.எச்.,

யஹூதிகள் என்னும் யூதர்கள் பொதுவே இஸ்ரவேலர்கள், இஸ்ராயீலின் சந்ததிகள் என்று அழைக்கப்படுகின்றனர். இப்ராஹீம் நபியின் திருமகனாரான இஸ்ஹாக் நபியவர்களின் குலக்கொழுந்து நபி யாகூப் (அலை) அவர்கள் "பன்னிரண்டு கோத்திரங்களின்" தந்தை எனச் சிறப்பிக்கப் பட்டவர்கள். 'இஸ்ராயீல்', (ஆண்டவனின் அடிமை) என்றும் இவர்களுக்கு ஒரு பெயர் உண்டு. இவர்களின் வம்ச வழி வந்தவர்களே யூதர்கள். ஆகவே தான் இவர்களுக்கு 'பனூ இஸ்ராயீல்' — அதாவது யாகூப்--நபியின் சந்ததிகள்; என்று பெயர் வழங்கலாயிற்று.

இறைவனின் ஆணைப்படி 2000 ஆண்டுகள் இஸ்ரவேலர்கள் உலக ஆட்சிக்கு உரிமையுடையோராய் விளங்கினர்; உலகத்தில் அவர்களுடைய ஆட்சிகளை, அரசுகளை, வம்சங்களை அல்லாஹ் மேன்மையுறச் செய்தான் :

"இஸ்ரவேலர்களே! நான் உங்கள் மீது பொழிந்த என் அருள் கொடைகளையும்; உலக மக்கள் அனைவரையும் விட உங்களை நான் மேன்மையுடையோர் ஆக்கியதையும், நினைத்துப் பாருங்கள்." [2 : 47] என்று இஸ்ரவேலர்களை விளித்து இறைவன் கூறினான்.

ஆனால், தங்களுக்கு இறைவன் அளித்த அருள் கொடைகளை மறந்து, இறையுணர்வையும் இழந்து; பெருமையும், குரோதமும் கொண்டலைந்தார்கள் இஸ்ரவேலர்கள், "வெற்றி வீரர்களாக, நீங்கள் ஜெரூஸலத்திலே பிரவேசிக்க வேண்டும்" என்று இறைவன் கட்டளையிட்டான். ஆனால் அவர்களோ 'எங்களுக்கு அத்தகைய சிரமங்கள் எதற்கு? நாங்கள் ஏதோ உழுது விதைத்து எங்கள் வயிற்றைக் காலிக் கொள்கிறோம்' என்ற குறுகிய நோக்கோடு இறைவனின் கட்டளையைப் புறக்கணித்தார்கள். தங்களுக்கு நேர் வழி காட்ட வந்த இறைவனின் திருத்தூதர்களை இழித்தார்கள், பழித்தார்கள். ஹலரத் மூஸா (மோஸஸ்); ஈஸா (ஏசு) ஆகியோரைக் கொடுமைப் படுத்தினார்கள். இறைவனின் பிரதிநிதிகளாக விளங்க வேண்டிய இஸ்ரவேலர்கள், ஆளவந்தோரின் அடிவருடிகளாக மாறி, ஆண்டவனின் அருள் செல்வர்களாம் நபிமார்களை அநியாயப்படுத்தினார்கள். அல்லாஹ்வின் அருள் வாக்குகளை அவமதித்தார்கள்.

அகங்காரமும், ஆணவமும் கொண்டு அநியாயத்தையும், அதர்மத்தையும் கடைப்பிடித்து; மறுமையை மறந்து. சுகபோக வாழ்வுக்காக கடமைகளையும் கொள்கைகளையும்புறக்கணித்து வாழத் தலைப்பட்ட இஸ்ரவேலர்களுக்குரிய தண்டனையை இறைவன் விதித்தான். உலக ஆட்சிப் பொறுப்பை அவர்களிடமிருந்து பிடுங்கிக் கொண்டான். அகதிகளாக, பலஹீனர்களாக, செல்வாக்கற்றவர்களாக அவர்கள் பூமியில் அலையலானார்கள். இறையின் தூதர்களும், மதத் தலைவர்களும், ஆள்வோருக்கு அமைச்சர்களாக விளங்கியோரும் நிறைந்திருந்த ஒரு சமூகம்; ஆதி கால சரித்திரத்தில் ஒரு சீர்பெற்ற சமுதாயமாகத் திகழ்ந்த யூதப் பெருங் குடி. மக்கள் தங்கள் புன் செயல்களால், தீச் செயல்களால் தங்களையே தாழ்த்திக் கொண்டனர். அவர்களுடைய இழிநிலைபற்றி இறைமறையாம் திருக்குர்ஆன் இயம்புவதைக் கேட்போம்.

"........மேலும் அவர்கள் மீது இழிவும் வீழ்ச்சியும் விதிக்கப்பட்டுவிட்டன இன்னும் அல்லாஹ்வின் கோபத்துக்கும் பாத்திரமானவர்களாகி விட்டார்கள்........" (2;61)

இப்படி இறைவனின் கோபத்துக்கு இலக்காகிவிட்ட இஸ்ரவேலர்களிடம் இருந்த ஆட்சி பறிக்கப்பட்டு, இஸ்லாமிய சமுதாயத்துக்கு அளிக்கப்பட்ட போது இறைவன் வாக்களிக்கிறான்.

"உங்களில் மெய்யாக ஈமான்கொண்டும் நற்செயல்கள் புரிந்தவர்களை, உங்களுக்கு முன்னர் (அவ்வாறு வாழ்ந்தவர்களை) அதிபதியாக்கிய முறையிலே இறைவன் (உலகுக்கு) அதிபதியாக்கி வைப்பான்......[24 : 55]

உலகை ஆளும் பொறுப்பேற்றுக் கொள்பவர்கள் நன்னம்பிக்கை கொண்டு நற்செயல்கள் புரிபவர்களாக இருத்தல் அவசியம் என்று ஆண்டவன் நிபந்தனை விதிக்கிறான்.

இஸ்ரவேலர்கள் இந்த நிபந்தனையை நிறைவேற்றத் தவறினார்கள். ஆண்டவன் அளித்த அருங்கொடைகளை, நிலையற்ற தம் மனங்கள் ஆசைப்பட்ட இழி பொருளுக்காக உதறித் தள்ளினார்கள்.

"........மேலானதற்குப் பதிலாகத், தாழ்ந்ததை மாற்றிப் பெற்றுக் கொள்கிறீர்களா————?" [2 . 61] என்று இறைவனே அவர்களிடத்தில் கேட்கின்றான்.

மனவளத்தை முற்றும் மறந்து மண்ணின் வளத்தையே பெரிதென மதித்த யூத சமுதாயம் செல்வாக்கிழந்து, இஸ்லாமிய சமுதாயம் ஆட்சிப் பொறுப்பு ஏற்பதற்கு முன்னர்,

"அவர்களுக்குப் பின்னர் நாம் உங்களை பூமியின் அதிபதிகளாக்கி, நீங்கள் எவ்வாறு செயல் புரிகிறீர்களென்றும் கவனித்து வருகிறோம்" [10 : 14] என்று அன்பு எச்சரிக்கை விடுத்துள்ளான்.

இவ்வாறு இறைவனின் ஆசியோடு இஸ்லாமிய சமுதாயம் ஆட்சிப் பொறுப்பேற்ற காலத்தின் முதல் பிறை தான் ஷவ்வால். ஆகவே தான் இதன் முதல் நாளை "ஈதுல் பித்ர்" என்னும் சமுதாயப் பெருவிழாவாக வைத்து தன் அருட் கொடைகளையும், தான் அருள் செய்த அரிய திருமறையின் பெருமையையும் என்றென்றைக்கும் இறைவன் நிலை நாட்டினான்.

' இன்னும் நீங்கள் பூமியில் பலஹீனமான மிகச் சிறு தொகையினராக இருந்து, உங்களைப் பிற மனிதர்கள் மிஞ்சிக்கொண்டு போய் விடுவார்களோ என்று அஞ்சியிருந்த காலத்தில் அவன் உங்களுக்குத் தங்கும் இடமளித்துத் தன் ஆதரவால் உங்களைப் பலப்படுத்தி, நல்ல பொருள்களை உங்களுக்கு ஆகாரங்களாக்கியதை எல்லாம் நினைத்துப் பாருங்கள்; நன்றி செலுத்துங்கள்"

[8 : 26] என்றும் அல்லாஹ் அறிவுறுத்துகிறான்.

இந்தப் பெருமை, உலக அதிபதிகளாக நாம் தலை நிமிர்ந்து நீதி வழி நின்று ஆண்ட காலம்; சிறப்புயர் செல்வர்களாக இஸ்லாத்தின் சிந்தை குளிர வாழ்ந்த கீர்த்தி-இவை யாவும் இன்று வரலாற்றுத் தாள்களிலே ஒரு பழங் கதையாக மாறி வருகிறது. இறைவனுக்கு அடிபணிந்து, அவன் அருள் கொடைகளுக்கு நன்றி செலுத்தி, அவன் தந்த பெருமையை நிலை நிறுத்த வேண்டிய நாம் மனோ இச்சைகளுக்கு அடிபணிந்து, இறைவனுக்கு மாறு செய்து சிறுமை வழி செல்லலானோம். பிற சமுதாயத்தின் பெருமையைக் காணவும், நம் தாழ்வு கண்டு கண்ணீர் விடவும் தாம் வாழ்கிறோமோ என்னவோ?

“இவர்களுக்குப் பின்னர் இவர்களுடைய இடத்தை அடைந்தவர்கள், உடல் இன்பங்களைப் (பெரிதெனப்) பின் பற்றி, வணக்கத்தைப் பாழாக்கியவர்கள். இவர்கள் தீமையையே சந்திப்பார்கள்.” [19 :59] என்ற இறைவனின் எச்சரிக்கையை நாம் மகிழும் பெருநாள்களிலே நினைவு கூர வேண்டும். நம் பெருமையை நினைவுபடுத்த வேண்டிய இப்பெருநாள், நம் தாழ்வை கவனத்திற்குக் கொண்டு வருகிறது.

“ஈமான் கொண்ட மக்களே! நீங்கள் இறைவனுக்கு அடிபணிந்து வாழ்வீர்களாயின், அவன் உங்களை மேன்மை பெறச் செய்வான்......” [8: 29] என்று அவன் வாக்களித்தான். அவன் கட்டளையை மறந்து பொருள்களுக்கு, பணத்துக்கு, அந்தஸ்துக்கு, பிற மனிதர்களுக்கு அடிபணிந்து வாழலானோம்.

“எவன் என்னுடைய குர்ஆனைப் புறக்கணிக்கின்றானோ, அவனுடைய வாழ்வு நிச்சயமாக நெருக்கடியானதாகவே யிருக்கும்.........” [20: 124] என்று ஆண்டவனின் எச்சரிக்கை உறுதிப்பட்டுக் கொண்டு வருகிறது

வேதத்தின் மாதத்தைக் கடந்து, விழாவினைக் கொண்டாடும் நாம் இறைவனின் எச்சரிக்கை பற்றிச் சிந்திக்க வேண்டாமா? நம் மார்க்க அறிஞர்கள் செய்யும் ‘குத்பா’ (சொற்பொழி) விலே, இச்சிந்தனை இடம் பெற வேண்டாமா?

புத்தாடை புனைந்து, புது மணம் வீசி நாம் மனம் மகிழும் நேரத்திலே துயர் தரும் சிந்தனைக்கு இடம் தரப் படுவதில்லை ஆனால் நாம் வாழ்க்கையின் போக்கையே மாற்ற வல்ல இச் சிந்தனைகள் இன்று நம் நெஞ்சிலே குடியேறினால்தான், நெடுநாளைக்கு அவற்றின் நினைவு அங்கே நிற்கும்.

மனிதர்களைப் போல் சமுதாயத்துக்கும் வளர்ச்சியுண்டு.

“அல்லாஹ் உங்களை பலஹீனமான நிலையில் படைக்கிறான்; அந்த பலஹீனத்திற்குப் பின்னர் அவனே (இளமையின்) வீரியத்தையும் கொடுக்கிறான். அந்த வீரியத்திற்குப் பின்னர் முதுமையையும் பலஹீனத்தையும் கொடுக்கிறான்......” [30: 54] என்று மனிதனைப் பற்றி இறைவன் கூறியது சமுதாயத்துக்கும் பொருந்தும். மறைந்து போன மக்கள் சமுதாயங்களோடு, நம்மை ஒப்பிட்டுப் பார்த்தால், நாம் இன்னும் இளமையிலேயே இருக்கிறோம்; இன்னும் எவ்வளவோ நாம் சாதிக்கவேண்டி யிருக்கிறது. இறையின் கட்டளைகளுக்கு, குர்ஆனின் விதி முறைகளுக்கு நாம் அடிபணிந்து நடந்தால், இன்னும் நாம் தழைத்தெழுந்து, கிளை பரப்பி வரண்ட நிலத்துக்கு நிழல் தர முடியும்.

“உங்களை அஞ்ச வைப்பதற்காகவும், (மீண்டும்) நம்பிக்கை கொள்ளச் செய்வதற்காகவும் அவன் உங்களுக்கு மின்னலைக் காண்பிப்பதும், வானத்திலிருந்து மழை பொழியச் செய்வதும், இறந்து (பாழான) பூமியை உயிர் (செழிக்கச்) செய்வதும் அவன் (வலிமையின்) சான்றுகளில் ஒன்றாகும். ஆராயும் திறம் படைத்தோர்க்கு இதில் நிச்சயமாக பல சான்றுகள் இருக்கின்றன. [30: 24].

பாழடைந்த மண்ணை பயிர் கொழிக்கச் செய்யும் படைத்த நாயன், தாழ்வடைந்த நம் சமுதாயத்தைத் தழைக்கச் செய்யமாட்டானா? மழைக்குப் பின் மாண்ட மண் செழும் பயிர் விடுவது போல் அவன் அருள்பெற்று நாமும் செழிப்படையவேண்டும். அவன் அருள் பெற ஓரே ஒரு வழி தானுண்டு. அவன் கட்டளைகளை-திருக் குர்ஆனிலே அவன் போதிக்கும் விதி முறைகளை-நாம் உணர்ந்து, நற் செயல் செய்ய-நல்லறம் புரிய-துணிவு கொள்வதுதான் அவ்வழி. (தொடரும்.)

சிப்பிக்குள்....

அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்......)

ஒரே கும்பல், அங்கிருந்தோர் எல்லோருடைய கண்ணோட்டமும் வான வீதியிலே வட்டமிட்டுக் கொண்டிருக்கிறது, அன்று ஷவ்வால் துவக்கம், விடிந்தால்...... ஒரு மாதம் இறைவனுக்குச் செய்த நற்செயலின் பயன்— ஈத் பெருநாள். “அதோ பிறை!” என்று ஒரு சாரார் சுட்டிக் காண்பித்தார்கள். அருகிலிருந்த மற்றொரு கூட்டம், ‘எங்கே பிறை?’ என்று காணும் ஆவலிலே ஓடோடி வந்தனர்; “இதோ பிறை!” என்று நிதானமாக ஒரு மாசிகையை நீட்டினார், இளைஞரொருவர். எல்லோருடைய முகத்திலும் புன்னகை பூத்தது! வானத்திலும் விண்மீன்கள் விளையாட அவை நடுவே “பிறை” நன்றாகப் பளிச்சிட்டது! தித்திக்கும் சேதியை சிந்தையிற் பாய்ச்சிய பிறை கொண்டுவந்த பிறையைப் புரட்டத் துவங்கினேன்...... சிப்பிக்குள்...... ஈத் பெருநாளின் சிறப்பு மலரோ, அல்லது இன்பத் தமிழ் கொஞ்சும் இலக்கியப் பேழையோ, கருத்துக் கருவூலமோ என எண்ணத் தூண்டிற்று. இஸ்லாமிய இளங் கவிஞர்கள் வரைந்துள்ள கவிக்கொத்து, மலருக்கு இருமடங்கு வெற்றி நல்குகிறது “தித்திக்கும் திருமறை”த் தொடரில் ரமலான் விளக்கம் விவேகிகளின் சிந்தனைக் குரியது! “தங்கையே காப்பாற்று” என்ற சிறுகதை மன்னர் டி. ஸி. துபாஷ் (சி. எஸ். தாஜுத்தீன்) அவர்களின் சிறுகதை சமுதாயத்தின் அப்பட்டமான படப்பிடிப்பு. உள்ளத்தை மட்டுமல்ல உடலையே மெய் சிலிர்க்கச் செய்கிறது. “வீரத்தின் விலை” நம்மவர் தீரத்துக் கோர் எடுத்துக்காட்டு. மொத்தத்தில் நெஞ்சையள்ளும் செஞ் சொல்லோவியக் களஞ்சியமாய்த் திகழும் பிறையின் முதல் மலர் முத்தமிழ் மணங்கமழ தித்திக்கும் சிறுகதை தந்து, கலையின் காவலனாய், நந்தமிழ் நாட்டில் சிந்து பாடப் புறப்பட்டுவிட்டது.

மலர் மாண்புடையது. பணி–பயனுடையது.

அன்பு,

டி. எம். எம். தாஜுத்தீன்,

அபிவிர்த்தீஸ்வரம்.

★ அன்புப் பிணைப்பு ★

[எம். ஸி எம். ஸுபைர்]

பெண்களுக்கு சொத்தில் உரிமை வழங்கிற்று இஸ்லாம். அவர்கள் வாணிபத்திலும் தடையின்றி ஈடுபடலாம் என்று தாராளமாக அனுமதி யளித்தது இஸ்லாம். இதற்குச் சிறந்த ஒரு சான்றாக விளங்குகிறார்கள் அன்னையார் கதீஜா நாச்சியார். இப்பெருமாட்டியிடமே கணக்கராக, வணிகப் பிரதிநிதியாக முதன் முதலில் தொழில் செய்தார்கள் நபிகள் பெருமானார்.

பொருளாதார ஏற்றத் தாழ்வால் பெண்களை அடிமைகள் போல ஆண்கள் நடத்த முற்பட்டுவிடக் கூடாது என்பதற்காகவே பெண்களுக்கு செல்வம் சேர்ப்பதிலும், செலவழிப்பதிலும் இஸ்லாம் சுதந்திரம் அளித்தது. திருமணத்திற்கு முன்னர், தான் வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக் கொள்ளப்போகும் மனைவிக்கு ஒரு தொகை மஹராக—வரதட்சிணையாக—மணவாளன் தரவேண்டும் என்றும் இஸ்லாமியத் திருவேதம் சட்டம் இயற்றியது.

பெண்ணை எப்படியாவது, எவன் கையிலாவது பிடித்துக் கொடுத்து விட்டால் போதும்; அதற்காக அவனுக்கு பணம்—கைக்கூலி—கொடுத்தாலும் சரியே என்ற பழக்கத்தை இஸ்லாம் இகழ்கிறது. பெண்ணுக்குத்தான் ஆண் மஹராகப் பொருள் தர வேண்டும் என்பதைக் கீழ்க்கண்ட நாயக வாக்கியம் ஆணித்தரமாக வலியுறுத்துகிறது.

"ஒரு பெண்ணை மஹர் கொடுக்கும் நோக்கம் இல்லாது, மணமுடிப்பவன் "ஸினா" செய்தவனாவான். [கூடா நட்புக் கொண்டவனாவான்.]

ஒரு பொருளைத் திருப்பிக் கொடுக்கும் எண்ணம் இல்லாது கடன் வாங்குபவன் அதைத் திருடியவனாவான்." [இப்னு மாஜா].

இவ்வளவு திட்டவட்டமாக, கண்டிப்பாக இஸ்லாம் விதி செய்திருந்தும் இன்றுள்ள திருமணங்களில் ஏதோ ஒப்புக்காக, ஒரு சடங்காக, "மஹர்" எழுதப்படுகிறது. மனைவியின் கைக்கு அது கிடைப்பதுமில்லை. ஆனால் கணவன் மனைவி இருவரும் ஒப்பி, அது பெறப்படாமல் இருந்தால் தவறில்லை. 'மஹர்' மனைவிக்குக் கொடுக்க வேண்டியதிருக்க, எத்தனையோ ஆடவர்கள் இந்த நாகரீக யுகத்தில் பெண்களிடமிருந்தே மஹர் வாங்க ஆரம்பித்துவிட்டார்கள். பெண்களிடமிருந்து பொருள் பெறுவதும், அதன் மூலம் உல்லாச வாழ்வு வாழ்வதும் இழி செயல்கள்—இஸ்லாத்தின் கண்டனத்துக்குக்குரிய ஆண்மையற்ற செயல்கள்.

திருமணத்தின் மூலம் ஆணுக்கும் பெண்ணுக்குமிடையே ஏற்படும் பந்தம் ஓர் அன்புப் பிணைப்பாக இருக்க வேண்டுமே தவிர, ரூபாய், 'நயே பைஸே' ஆகியவற்றால் ஏற்படும் ஒரு விலங்காக இருக்கக்கூடாது. இந்தக் கருத்தைக் கருவாக வைத்து உருவாகியிருக்கும் அன்பர் ஸுபைரின் கவிதை மீண்டும் மீண்டும் படிக்கத் தக்கது; பாராட்டத் தக்கது.

புத்துணர்வூட்டும் புதுப்பிறையே—புதுப்
புன்னகையள் குணக்குன்றனையள்
ஒத்த உளத்தினள் ஏழையென்னில்—மணம்
ஒப்பத் தகாதவள் என்பதுவோ ?

* * *

செல்வம், எழில், குணம் மூன்றிலுமே—உயர்
செல்வம் நற்குணம் ஒன்றினையே
இல்லாளுக் கேற்றமாய்க் கொண்டிடுக—எனும்
ஏந்தல் நபிமொழி ஏன் மறந்தார் ?

* * *

அன்பாளர்க் காசி அருள் பிறையே—'மஹர்'
ஈந்து பெண் கொள்க எனும் மறையில்
பண்பாளர் இன்றிலையோ ? பணம்—ஒன்றையே
கண்வைத்துப் பெண்ணை மதித்திடலேன் ?

* * *

அண்ணல் நபியவர், அன்புமகள்—'மஹர்'
தன்னையே பேசி மணமுடித்தார்
அன்னார் வழிவந்தோர் சீதனம்—என்னென்று
கேட்டல் சிரித்திடத் தக்கதன்றோ ?

* * *

சீதள உள்ளம் திகழ்பிறையே—கொஞ்சம்
சிந்தனைசெய் ! வழி கண்டுரைசெய் !
சீதனத்தாற் சிதைவா கிடும்—ஏழையர்
சிந்தும் கண்ணீர் தனை நீக்கிடச்செய் !

* * *

அன்னைக் குலத்தினர் கண்ணீர்—துடைத்திடு
அன்புள்ளம் ஒன்றையே போற்றிடச் செய் !
கண்ணைத் திறந்திடு ! கல்யாணம்—என்பது
அன்புப் பிணைப் பென்றுணர்ந்திடச்செய் !

கொடை வள்ளல்

(மௌலவீ எம். எப். ஜமாலுத்தீன்)

தபூக் யுத்தத்துக்கு முன்னர் தம் தோழர்களிடம் பொருளுதவி கோரினார்கள் மாநபி (ஸல்). அஹ்மது நபியின் (ஸல்) ஆணைகேட்டு ஆர்வத்தோடு எழுந்தார்கள் உமர் (ரலி). அன்று அவர்களிடம் ஆயிரக் கணக்கான வெள்ளிக் காசுகள் இருந்தன.

“இன்று திண்ணமாய் அபூபக்ர் ஸித்தீகை விட பதவியில் யான் முந்தித்தானுவேன்”—என்று மனதுக்குள் சொல்லிக்கொண்டார்கள் உமறுல் பாரூக்.

(விடு சென்று அங்கிருந்து ஓரளவு பொருள் கொண்டுவந்து திரு நபி அவர்களின் சமுகத்தில் வைத்தார்கள்.)

“உமர்! இவ்வளவு பொருள் கொண்டுவந்திருக்கிறீரே; மனதுக்கு நிம்மதி இருக்கிறதா? (நும் மனைவி மக்களுக்கென்று ஏதேனும் வைத்திருக்கிறீரா?)” என பெருமானார் வினவினார்கள்.

மனைவி மக்களுக்கென்று பாதி வைத்துவிட்டு பரிசுத்த தீனுல் இஸ்லாத்திற்கு மீதியைக் கொணர்ந்திருக்கிறேன்.” என்று பதிலிறுத்த உமறுல் பாரூக்கின் தொனியிலே பெருமிதம் ஒலித்தது.

இதற்குள் அஹ்மது ரஸூலின் அன்பராம் ஹலரத் அபூபக்ர் ஸித்தீக் ஓடோடி வந்தார்கள். தம்மிடமிருந்த பொருளை குவலயம் போற்றும் கோமான் முன் வைத்து பணிவோடு நின்றார்கள்.

“இவ்வளவையும் கொண்டு வந்திருக்கிறீர்களே; வீட்டிலே ஏதாவது… ……?—என்று ரஸூலுல்லாஹ் வினவ,

“அல்லாஹ்வையும் அவன் தூதரையும் என் குடும்பத்துக்காக வைத்து விட்டு இதர பொருள்கள் அனைத்தையும் கொண்டு வந்திருக்கிறேன், யா ரஸூலல்லாஹ்” என்று பதிலளித்தார்கள் ஸித்தீக்.

ரியா—பிறர் மெச்சும் நோக்கம்—இல்லா அப்பட்டமான காதல் பற்று பரிணமித்தது அவர்கள் தொனியில்!

இதைத்தான் அழகுபடச் சித்திரித்துக் காட்டுகிறார் அல்லாமா இக்பால்.

விளக்குப் பூச்சிக்கு விளக்குப் போதும்;

புல்புல் பறவைக்குப் புஷ்பமிருந்தால் போதும்;

(ஆயின்) இந்த ஸித்தீகிற்கோ இறைவனின் திருத்தூதர் மட்டுமே போதும்! (பாங்கே தரா)

திருமணம்

கே. எஸ். மகுதூம் முஹ்யித்தீன்
பி. ஏ.

★ ★ ★

ஸினய் பாலைவனத்தில், மத்யன் நகரின் வெளியில் நீரையும், நிழலையும் அளித்துக் கொண்டிருந்தது அப் பாலைவனச்சோலை. களைப்புடனும் தாகத்துடனும், வருங்காலம் எப்படி அமையுமோ என்ற சிந்தனையுடனும் அச் சோலையில் உள்ள கிணற்றின் அருகே வந்து சேர்ந்தார்கள் மூஸா-கலீமுல்லாஹ். அங்கு கிணற்றில் இருந்து நீர் இறைத்துத் தங்கள் ஆடு மாடுகளுக்கு ஊற்றிக் கொண்டிருந்தனர் கால் நடைகளை மேய்ப்பவர்கள். அவ்வமயம் அடக்கமான இரு பெண்கள் தங்கள் ஆட்டு மந்தையை வளைத்து, ஒதுங்கி நின்று கொண்டிருந்தார்கள். நிழலில் தங்கப்போன மூஸா நபியவர்கள் அப் பெண்களை நோக்கி “உங்கள் விஷயமென்ன ?” என்று கேட்டார்கள். அதற்கு அப் பெண்கள், “எங்கள் தந்தை முதியவர்” என்ற மூன்றே சொற்களில் தங்களது நிலைமையை நன்றாக விளக்கி விட்டார்கள்.

அப் பெண்களின் தந்தை ஒரு வயது முதிர்ந்த ஷேக். எனவே அவருடைய ஆட்டு மந்தைக்குத் தண்ணீர் இறைத்து ஊற்றும் பொறுப்பு அப் பெண்கள் மீது விழுந்தது. அந்தக் கால் நடைகளை மேய்ப்பவர்கள் தண்ணீர் இறைத்துவிட்டு விலகிய பின் தான் இவ்விரு பெண்களும் தண்ணீர் இறைக்க முடியும். இந்த நிலைமை மூஸா நபியின் வலிமையைத் தூண்டி விடவே, கிணற்றில் இருந்து நீரை இறைத்து அப் பெண்களின் ஆடுகளுக்கும் ஊற்றினார்கள். பின் மூஸா நபியவர்கள் நிழலில் அமர்ந்து நன்மையை நாடி நாயனை வேண்டினார்கள். அந்தப் பிரார்த்தனை வீண்போகவில்லை. அவர்களுக்கு நன்மையே காத்திருந்தது.

அகத்தில் நன்றியும், முகத்தில் மகிழ்வும்கொண்டு வீடு சேர்ந்தனர் அப் பெண்கள். தம் செல்விகளின் மகிழ்ச்சிக்குரிய காரணத்தை அறிந்த தந்தை மூஸா நபி அவர்களை அழைத்து வரும்படி மகளுக்குப் பணித்தார். மூஸா நபியிடம் முதலில் பேசியபோது அப் பெண்ணுக்கு நாணம் ஏற்படவில்லை. நபியை இரண்டாம் முறையாக அணுகி, தந்தையின் அழைப்பைச் சொல்லியபோது அவள் முகம் நாணத்தால் பொலிவுற்றிருந்தது. காரணம் மூஸா நபியவர்களின் பால் அப் பெண்ணின் உள்ளம் சென்றது. மூஸா நபியவர்கள் அப் பெண்ணின் தந்தையிடம் தன் வரலாற்றைக் கூறினார்கள். அதைக் கேட்ட பின்பும் அப் பெண்ணின் உள்ளம் மாறவில்லை. தன் உள்ளத்தில் நபிகள் பால் ஏற்பட்ட, வெளியில் சொல்ல முடியாத அன்பை, அருமையாகத் தந்தையிடம் சொல்லி முடித்தார் அந்தப் பெண்.

“என் தந்தையே! நம்பிக்கையும் பலமும் உள்ள இவரையே வேலைக்கு அமர்த்திக் கொள்வது மிக்க நல்லது” என்று சொன்னார். ஆணிடம் காணப்படும் அருமையான பண்புகளான நம்பிக்கையையும், பலத்தையும் தவிர வேறென்ன ஒரு பெண்ணுக்குத் தேவை. அதுவும் வயதான தந்

தைக்குப் பின் குடும்பத்திற்கு மூஸா நபியின், நம்பிக்கையும், வலிமையும், பெரிதும் உதவும் என்ற உண்மையை அந்தப் பெண் நன்றாக அறிந்து கொண்டு விட்டார். எனவே தான், மகளின் எண்ணத்தைப் புரிந்து கொண்ட தந்தையும், எட்டாண்டு அல்லது பத்தாண்டு தொண்டு புரிய வேண்டுமென்றும், அதன் பிறகு ஒரு மகளை மணம் செய்து தருவதாகவும் கூறுகிறார். மூஸா நபியவர்கள் உடன்படிக்கைப்படி தொண்டு செய்து, துணைவியை அழைத்துச் செல்கிறார்கள். (28 : 22—29).

ஆணும், பெண்ணும் ஒருவரை ஒருவர் விரும்புவது இயற்கை. பெண்ணை விரும்புவதை இறைவன் மனிதர்களுக்கு அழகாக்கி வைத்துள்ளான். (3: 14) மேலும் கணவன்-மனைவி இவர்களுக்கிடையில் அன்பையும்-நேசத்தையும் உண்டுபண்ணியிருக்கிறான். அந்த அன்பையும் நேசத்தையும் தன்னுடைய அத்தாட்சிகளில் ஒன்றாக அறிவித்துள்ளான். (30 : 21) நேற்று வரை அன்னியர்களாக இருந்த ஆணும்,பெண்ணும் கணவனும் மனைவியுமான அந்தக்கணத்திலேயே ஒருவரை ஒருவர் எவ்வளவோ காலமாக தெரிந்து கொண்டவர்களாக அன்புடன் உறவாட ஆரம்பித்து விடுகிறார்கள். எகிப்து நாட்டினின்றும் மீண்டு வந்த மூஸா நபியவர்களை மத்யன் நகரத்து மங்கை முன் பின் பார்த்ததில்லை. மூஸா நபியின் நம்பிக்கையிலும், பலத்திலும், நல்லெண்ணங் கொண்டுள்ள அந்த மங்கையின் அன்பும்-நேசமும் ஆண்டவனின் அத்தாட்சியாக விளங்குகின்றன! இத்தகைய, முறையில் இறைவனால் மேன்மைப் படுத்தப்பட்ட அன்பையும், நேசத்தையும், அழகு மயக்கம் என்ற சேற்றிலும், பணம் என்ற மணற் பரப்பிலும் கட்ட முயல்வது அறிவுடைமையாகாது. பெண்ணின் மடியிலே எதிர் காலத்தின் இனம் தவழ்ந்து கிடக்கிறது. அத்தகையவள் குடும்பத்தின் ஒளிவிளக்காக, சமுதாயத்தின் தூணாகத் திகழ்கிறாள். எனவே அவள் உள்ளம் அன்புக்காகவும், பண்புக்காகவும் ஆண் மகனை விரும்புவதே சிறந்ததாகும். வெறும் வெளி அழகுக்காகவும், படாடோபத்திற்காகவும், பணத்திற்காகவும் திருமணம் செய்து கொள்வதை இஸ்லாம் அனுமதிக்கவில்லை. 'அன்பும், நேசமும்' மிக உயர்ந்த பண்புகளான, நல்லொழுக்கம், நாணயம், கல்வி, நற்குணம் முதலியவற்றின் அடிப்படையில் அமைய வேண்டுமே ஒழிய, கீழ்த்தரமான எண்ணங்களாலும். ஆசைகளாலும், பகட்டாலும், கட்டப்படக் கூடாது என்பதே இஸ்லாமிய திருமணங்களின் குறிக் கோள் இந்த உண்மையை மூஸா நபியவர்களின் வரலாற்றிலிருந்தும் அறிகிறோம். மேலும், புற அழகினால் உந்தப்படும், அன்பும், நேசமும் தவறானது என்பதை "சரித்திரங்களில் மிக்க அழகான சரித்திரம்" ஒன்றின் மூலம் அறிவிக்கின்றான் ஆண்டவன்.

யூஸுஃப் நபியவர்களின் அறிவும், அழகும், தம் குடும்பத்திற்குப் பெருமையூட்டும் என்று கருதி, அவர்களைக் கண்ணியமாக நடத்த வேண்டுமென்று தம் மனைவி ஜுலைகாவிடம் கூறினார் அஜீஸ், மேலும் யூஸுஃப் நபியை ஸ்வீகார மகனாக்கிக் கொள்ளலாம் என்ற எண்ணமும் அவருக்கு உண்டு. ஆனால் ஜுலைகாவோ, நபியவர்களின் புற அழகையே விரும்பித் தன் ஆசைக் கனவுகளின் சிகரமாக அவர்களை வரித்துக் கொண்டாள். இறைவன் யூஸுஃப் நபியவர்களுக்கு அளித்த ஞானத்தையும், கல்வியையும், ஜுலைகா விரும்பவில்லை. ஜுலைகா தன் விருப்பத்தை யூஸுஃப் நபி அவர்களிடம் வெளியிட்டபோது. யூஸுஃப் நபி மறுத்து விட்டார்கள். அவர்களைக் காதலிப்பதில் உறுதி கொண்டு விட்டாள் ஜுலைகா காதலுக்குக் கண் இல்லை என்பது அவளைப் பொருத்தமட்டில் உண்மையாகி விட்டது. 'அக்கிரமக்காரர்கள் நலம் பெற மாட்டார்கள்' என்பதை யூஸுஃப் நபி எச்சரித்தும் ஜுலைகா தன் விருப்பத்தில் பிடிவாதமாகவே இருந்தாள். அவள் குற்றத்தைக் கணவர் கண்டு கொண்டதும், குற்றமற்ற யூஸுஃப் நபியின் மீது பழி சுமத்தினாள். உண்மை வெளிப் பட்டதும், மன்னிப்புத் தேடிக் கொள்ளும்படி அஜீஸ் மனைவியிடம் கூறியும்

பயனில்லை. காரணம், மோகம் ஜுலைகாவுக்கு அறிவை இழக்கச் செய்தது. அவளது குற்றம் வெளிப்பட்டதும், அந்நகரத்திலுள்ள ஏனைய பெண்கள் அவளைப்பற்றி இழிவாகப் பேசலானார்கள். அந்தப் பெண்களுக்காக ஒரு விருந்தை ஏற்பாடு செய்தாள் ஜுலைகா. விருந்தில் கலந்து கொண்ட ஒவ்வொரு பெண்ணுக்கும் ஒரு கனியும், அதை அறுத்துப் புசிக்க ஒரு கத்தியும் கொடுத்தாள். யூஸுஃப் நபியவர்களை அந்தப் பெண்கள் முன் கொண்டுவரவும், அவர்களின் அழகில் அப்பெண்கள் மயங்கி விடுகின்றனர். கனி அறுப்பதற்குப் பதிலாகக் கையை அறுத்துக் கொள்கின்றனர்.

'சிறையிலிட்டுச் சிறுமைப் படுத்துவேன்' என்று ஜுலைகா யூஸுஃப் நபியை எச்சரித்தும் யூஸுஃப் நபியவர்கள் பணியவில்லை. தனியொருத்தி ஜுலைகாவின் சூழ்ச்சி என்ற நிலை மாறி அங்குள்ள 'பெண்களின் சூழ்ச்சியாக' உருவாகி விட்டது. தன்னால் சமூக வாழ்விலே தொல்லை விளைவதை தவிர்ப்பதற்காக யூஸுஃப் நபியவர்கள் சிறை செல்லவும் தயாராக இருந்தார்கள். சிறிதுகாலம் அவர்கள் சிறையிலேயே இருந்தார்கள். நேர்மையற்ற முறையில் அழகை மோகிப்பதால் ஏற்படும் தீய விளைவுகளை யூஸுஃப்-ஜுலைகா வரலாற்றிலே காண்கிறோம். தனது சுயநல இச்சையினால் தனக்கும், கண்ணியமான தன் கணவருக்கும், நிரபராதியான யூஸுஃப் நபியவர்களுக்கும், தன்னைப் போன்ற பெண்களுக்கும். இழிவையும், பழிச் சொல்லையும், தேடிக் கொடுத்தது ஜுலைகாவின் செயல். எனவே இறைவனால் உயர்வாகச் சொல்லப்படும் அன்பும் நேசமும், புற அழகின்–மோகத்தின்–அடிப்படைகளில் உருவாகக் கூடாது என்பதைக் காணலாம்.

ஆதரவற்ற நிலையில் மூஸா நபியவர்களுக்கு, மத்யன் நகரில் சந்தித்த

பெண்ணின் நேசம் உதவியதுபோல, பெருமானார் அவர்களுடைய வாழ்விலும் இத்தகைய உயர்வான ஒரு சம்பவம் காணக் கிடக்கிறது. பெருமானார் அவர்களின் நாணயமும், உண்மையும் அவர்களுக்கு அரபிகளிடம் பெருமையைத் தேடித் தந்தன. 'அல்-அமீன்'-நாணயம் மிக்கவர்- என்று மக்காவாசிகள் பெருமானார் அவர்களை நபித்துவத்திற்கு முன்பே பாராட்டினார்கள். சீலமும் செல்வமும் வாய்ந்த கதீஜா நாயகி அவர்களின் காதுகளில் பெருமானாரின் பெருமை பற்றிய உண்மை பட்டது. தம்முடைய சிரியா நாட்டு வாணிபப் பொறுப்பை பெருமானாரிடம் ஒப்படைத்தார் கதீஜா நாயகி அவர்கள். அந்த வாணிபப் பொறுப்பை மிக்க நாணயமாகவும், திறமையாகவும் நிறைவேற்றிக் கொடுத்தார்கள் நபிபணியவர்கள். ஆகவே கதீஜா நாயகியுடைய உள்ளம் நபிபணியின் பால் சென்றதில் வியப்பில்லை. குலப்பெருமையும், செல்வமும் வாய்ந்த விதவையான அந்த அம்மையாரை மணந்து கொள்ள எத்தனையோ பேர் காத்திருந்தார்கள். ஆனால் அவர்களின் உள்ளம் ஓர் ஏழையின் மீது, அனாதையின் மீது அன்பு செலுத்தியது. அதற்குக் காரணம்...? அவர்களே பெருமானாரை அழைத்துச் சொல்லுவதைப் பார்க்கலாம்.

“சிறிய தந்தை மகனாரே! நம்முடைய உறவுக்காகவும் உமக்கு மக்கள் மத்தியிலுள்ள செல்வாக்குக்காகவும், உம்முடைய நம்பிக்கைக்காவும், நல்லொழுக்கத்திற்காகவும், சத்தியத்திற்காகவும் உம்மை நேசிக்கிறேன்.”

" இவ்விதமாக பெருமானாரவர்களிடம் சொல்லிய பின் அவர்களை மணந்து கொள்ளவும் கதீஜா நாயகியவர்கள் முன் வந்தார்கள். கதீஜா நாயகி அவர்கள் நபிபணியின் மீது கொண்ட அன்பும், நேசமும், பெருமானாரவர்களின் நல்லொழுக்கம், நாணயம், நற்குணம், உண்மை முதலிய உன்னதப் பண்புகளால் தூண்டப்பட்டவை யாகும். தம் கணவரின் சத்தியவாக்கின்மீது கதீஜா நாயகி அவர்களுக்குத் திடமான, உறுதி இருந்தது. எனவேதான் இறைவனுடைய 'வஹீ'யை பெருமானார் தெரிவித்த போது தம் கணவரிடம் ஒளிவிட்ட நபித்துவத்தை மறுக்காது தயங்காது முதன் முதலாக ஏற்றுக் கொண்டார்கள் கதீஜா நாச்சியார்.

“அந்த அம்மையார் மூலமாக இறைவன் தன் தூதரின் பளுவை எளிதாக்கினான். அந்த அம்மையார் பெருமானாருடைய சொல்லை மறுதளிக்கவில்லை. பொய்யெனக் குற்றஞ்சாட்டி அவர்கள் மனதிற்கு வேதனை உண்டு பண்ணவில்லை. பெருமானார் வீட்டுக்கு வரும்போது அவர்களுக்கு இறைவன் அந்த அம்மையார் மூலமாக ஆறுதல் அளித்தான். அவர்கள் நபிகளுக்குத் தைரியமூட்டினார்கள்; அவர்களின் பொறுப்பைக் குறைத்தார்கள்: அவர்கள் போதித்த சத்தியத்தைப் பகிரங்கப்படுத்தினார்கள்; மக்களின் எதிர்ப்பைக் குறைத்தார்கள்; எல்லாம் வல்ல இறைவன் அந் நாயகியார்மீது நல்லருள் பாலிப்பானாக!” என்று போற்றி வாழ்த்துகிறார், ஆயிரம் ஆண்டுகளுக்குமுன் நாயக சரித்திரத்தை ஒழுங்கு படுத்தி எழுதிய வரலாற்றாசிரியர் இப்னு-ஹிஷாம். இத்தகைய உயர்வான இல்லாளையும், திருமணத்தையும் இறைவன் தன் திருமறையில் குறிப்பால் பெருமானாருக்கு உணர்த்துகிறான்.

“முடை பெற்றவராக உம்மைக் கண்ட அவன் (உம்மைத்)தனவந்தராக ஆக்கி வைத்தான் அல்லவா?” 93-8 என்று திருமறையில் கூறுகிறான்.

கதீஜா நாயகியவர்கள் காலமாகும் வரை நபிபணி அவர்கள் மறுவிவாகமே செய்து கொண்டதில்லை. அவர்களுடைய இல்லறம் அன்பும். பண்பும் கொண்ட நல்லறமாக விளங்கியது.

திருமணத்தின் அடிப்படையையும், இலட்சியத்தையும், மேலே குறிப்பிட்ட சம்பவங்கள் தெளிவாக உணர்த்துகின்றன. இல்லற வாழ்க்கையின் ஆதாரங்களாக விளங்கும் அன்பும், நேசமும், உயர்ந்த எண்ணங்களையும், பண்புகளையும் கொண்டதாக விளங்க வேண்டும். திருமறையும், நபி வாழ்வும் அந்தத் துறையில் சிறந்த நெறியை வலியுறுத்தி, வகுத்துக் காட்டுகின்றன. ★

நன்னெறி

கணவன் எத்தகைய கொடியவனாயினும்; இழிகுணமுடையவனாயினும்; நோய்பிடித்தலைவோனாயினும் மனைவி அவன் கூடவே வாழவேண்டும்; வன் கொடுமைகளெல்லாம் சகித்துக் கொள்ள வேண்டும் என்று ஆதிகாலத்தில் பல மதங்கள் விதி செய்து கொண்டன. ஆனால் இவற்றில் பெரும்பாலான மதங்கள், எந்தக் காரணமில்லாமலும் தன் மனைவியைத் தள்ளிவைக்கவோ, “வாழாவெட்டியாக்கவோ,” விவாகரத்துச் செய்துகொள்ளவோ தாராளமாக அனுமதியளித்து வந்தன.

மணவாழ்வில் ஆணுக்கொரு நீதி, பெண்ணுக்கொரு நீதி என்ற நிலையை இஸ்லாம் மாற்றிற்று; இருபாலருக்கும் விவாகரத்துச் செய்யும் உரிமையை வழங்கிற்று.

தாபித் இப்னு கைஸ் என்பாரின் மனைவி ஜமீலா, நபி பெருமானாரிடம் வந்து தம் கணவரோடு விவாகரத்துச் செய்துகொள்ள அனுமதி கோரினார். “அவருடைய ஒழுக்கத்தையோ, அவருடைய நடத்தையையோ, அவருடைய மத உணர்வையோ, பற்றி நான் ஒன்றும் குறைகூறுவதற்கில்லை. ஆனால் அவர் கூட இருந்து வாழ என் மனம் இடங்கொடுக்கவில்லை” என்று அம் மாது கூறினார். இருவரும் அமைதியோடு வாழ்க்கை நடத்த மாட்டார்கள் என்று கண்ட நாயகமவர்கள் ஜமீலாவிடம் “உன் கணவன், உங்கள் திருமணத்தின் போது 'மஹர்” ஆகக் கொடுத்த தோட்டத்தை அவரிடம் திருப்பிக் கொடுத்துவிட்டு, நீ விவாகரத்துச் செய்து கொள்ளலாம்,” என்று அனுமதியளித்தார்கள்.

ஆனால் இருசாராரும் ஆறஅமர யோசியாது விவாகரத்து என்று இறங்கிவிடக் கூடாது என்பதற்காக இஸ்லாம் எத்தனையோ கட்டுப்பாடுகளையும் வைத்திருக்கிறது. “நான் அனுமதித்தவற்றுள் வெறுப்புக்குரியது தலாக் (விவாகரத்து) ஆகும்” என்று ஆண்டவன் சொல்கிறான்.

ஆனால் கூடிவாழ முடியாது என்று அனுபவத்தில் கண்டு கொண்ட இருவரை ஒன்றாக வைத்து, அவர்களை வெந்துயரிலும், வேதனையிலும் ஆயுள் முழுதும் ஆழ்த்தி வைக்கக்கூடாது என்ற இரக்க சிந்தையோடு பதின்மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்னரே வழிமுறைகள் வகுத்துத் தந்தது இஸ்லாம். அந்த வழிமுறைகள் பல, இன்று பல்வேறு நாடுகளின் பாராளுமன்றங்களிலே சட்டங்களாக உருவாகிக்கொண்டு வருகின்றன.

இப்படி, மணவாழ்வு போன்ற எத்தனையோ துறைகளில் எல்லாக் காலத்துக்கும் ஏற்ற சட்டங்கள் இயற்றியருளிய இஸ்லாம், “உலக முழுவதுக்கும் பொது உடைமை; மாந்தர் அனைவருக்கும் நேர்வழி காட்டவந்த நன்னெறி” என்பதில் சந்தேகமில்லையல்லவா?

“ஸித்தீக்”

ரோஜா முள்

முன் கதை

இரவு முழுவதும் அப்துஸ்ஸலாமும், அவரது மனைவி ஜமீலாவும் குடும்ப சம்பந்தமாகவே, பேசிக்கொண்டிருந்தனர்கள். விடிந்தால் அப்துஸ்ஸலாம் பர்மாவுக்கு மறுபடியும் பயணம். எனவே பர்மாவில் மேலும் அப்துஸ்ஸலாம் சம்பளத்துக்கு வேலை பார்க்கக்கூடாதென்றும், அவர் சொந்தக் கடை வைத்து நடத்தவேண்டுமென்றும் ஜமீலா ஆலோசனை கூறினாள். அதற்காக வீட்டையும் அடுவைத்து, ஜைனுல் ஆபிதீனிடம் கடன் வாங்கினார் ஸலாம். அவர் குளித்துவிட்டு வீடு திரும்பியதும், மாடியில் தம் மகன் அப்துர்ரஸாக்கைக் காணவில்லை என்பதைக் கண்டு திகைத்தார். அவனோ ஜன்னல் வழியாக வெளியே நோக்கிக் கொண்டு நின்றான். தெருவில் தன் தாயாரிடம் எதிர்த்த வீட்டு ஜுபைதா தன் படிப்பு பற்றி ஏதோ கேட்டது, அப்துர் ரஸாக்கின் காதுகளிலும் விழுந்தது. அதன் காரணமாக ஜுபைதாவைப் பற்றிய பலவிதமாக எண்ணங்கள் அவன் மனத்தில் ஓடின. தன்னிடம் முன்பு அவள் பாடங் கேட்க அடிக்கடி தன் வீட்டிற்கு வருவதையும், ஜுபைதாவுக்கும் தன் தாயாருக்குமிடையில் நிலவிய அன்புப் பிணைப்பையும் எண்ணிப் பார்த்துக் கொண்டான் ரஸாக். ஒருவேளை அவளுக்குத் தன்மீது பிரியமுண்டோ என்றும் அவன் நினைத்ததுண்டு. ஜுபைதா ரஸாக்கை நேசிப்பதாகவே பாவித்தாள் ஜமீலா.

ரஸாக்கிடம் பாடக்குறிப்பை வாங்கிச் செல்ல வந்திருந்தான் ஹனீப். ஹனீபும், ரஸாக்கும் தெருவில் பேசிக்கொண்டு நிற்பதை, தன் வீட்டைப் பெருக்கியவாறே கவனித்தாள் ஜுபைதா. அப்போது தற்செயலாகவே ரஸாக்கின் கண்கள் எதிர் வீட்டில் சென்றன. ஜுபைதா அவன் உள்ளத்தில் இடம் பெற்றுவிட்டாள்.

ஹனீபின் தந்தை ஜைனுல் ஆபிதீன் கோபத்தோடு வீட்டினுள் நுழைந்தார். அவரது கோபத்துக்குக் காரணமாக அமைந்தது திருநெல்வேலி இந்துக் கல்லூரியில் நடந்த விழாதான்! அவ் விழாவில் அப்துர்ரஸாக்கிற்கு கவர்னர் இரண்டு பரிசுகள் அளித்து பெருமைப்படுத்தினர். கூட்டத்தினர் கைதட்டி ரஸாக்கைப் பாராட்டினார்கள். இந் நிகழ்ச்சிகளைக் கண்டு பொறுமைகொண்ட ஜைனுல் ஆபிதீன் கூட்டத்தை விட்டு வெளியேறுகிறார். ஹனீபும் பரிசு பெறாததற்காகக் கண்டித்தார் ஜைனுல் ஆபிதீன். தம்மிடம் கடன் வாங்கிய அப்துஸ்ஸலாமின் மகன் ரஸாக்குக்கா இவ்வளவு பாராட்டுக்கள் என்று அவர் மனம் புழுங்கியது. ஹனீப், ரஸாக்மீது ஆத்திரம் கொண்டான். இவ்வளவு தூரம் தன் தந்தை தன்னைத் தாழ்த்திக் கூறுவதற்குக் காரணம் ரஸாக் தானே ? இவ்வாறு எண்ணிய ஹனீப், ரஸாக்கைப் பழிவாங்கவும், அவமானப் படுத்தவும் திட்டமிட்டான். அதற்குத் துணையாக, ரஸாக்கின் பாடக் குறிப்பில் ஒரு தகவல் ஹனீபுக்குக் கிடைத்தது.

ரஸாக் ஒரு வம்பு தும்புக்கும் போகமாட்டான் ; அமைதியான ஆள் என்று போற்றுகிறார்கள். அதற்கு வேட்டுவைத்து விட்டால் ....அமைதியான ஆளா இவன்? அமைதியான குகைதான் பயங்கரமாக இருக்கிறது! அமைதியான ஏரிதான் ஆழமாகவும் இருக்கிறது. மயானத்தின் அமைதி, நள்ளிரவில் நடுக்க மூட்டவில்லையா? அவ்வளவு ஆழமானவனா, பயங்கரவாதியா ரஸாக்?

ஹனீபின் கண்கள் மீண்டும் அந்தப் புகைப்படத்தில் சென்றன. கத்தி முனை போன்ற கூரிய கண்கள் பாதாம் பருப்பு வடிவில் கருமையான வேலிப் புருவம்! புகைச்சுருள் போன்று குழையும் கூந்தல். நெற்றி அரங்கில் சிலிர்த்திடும் மயிர்க்கற்றைகள்.........ஆரஞ்சுத் தொலி போன்று தடித்த உதடுகளில் புன்னகையின் கீற்று! சீனிப்பாகு போன்று தோன்றும் கன்னங்கள்; அவள் சிவப்போ...கருப்போ? நேரில் பார்த்துத்தான் நிர்ணயிக்க முடியும்? கருப்பை வெளுப்பாக்கும் கலையை மலிவாகப் பயிலும் வாய்ப்பும், வசதிகளும் இருக்கும்போது, நேரில் கண்டு கூட நிறத்தைக் கணிக்க முடியாது. அந்தப் படத்தின் மீது அவன் கண்கள் குத்திட்டு நின்றன. அவன் விரல்கள் அதனைத் தொட்டுப் பார்த்துக் கொண்டன. அவன் கண்கள் அந்தப் படத்தில் எழுதப்பட்டுள்ள பெயரைக் கூர்ந்து நோக்கின. எவ்வளவு பொருத்தமான பேர்? என்ன நினைத்தானோ ஹனீப்? ரஸாக்கின் பாடக்குறிப்பின் இதயத்தில் மறைந்திருந்த அந்தப் படத்தைத் தன் மேஜை டிராயரில் வைத்துப் பூட்டினான். ஹனீபின் உள்ளப் பெட்டகத்திலும் அவள் நிழல் தங்கியது! ரஸாக்கின் அந்தரங்கத்தை ஹனீபு அம்பலமாக்கிக் கேவலப்படுத்தி விடுவான்!

மறுநாள் காலை ......மணி எட்டரை இருக்கும் ...தன்னைத் தட்டித் தெழுப்புவது, கதிரவனின் சுடும் கதிர்கள் தான் என்று எரிச்சலோடு சாளரக் கதவைச் சாத்த எழுந்தான் ஹனீபு. ஆனால் அவனைத் தட்டி எழுப்பியது, கதிரவனின் பொற்கதிர்களல்ல. கல்லூரி விழாவில் பரிசு வாங்கிய கை! கவர்னரிடம் கை குலுக்கிய கரம்!

'நீ எப்போ வந்தே ரஸாக்?'

'இப்போத்தான் வந்தேன்...உன்னை எங்கேன்னு கேட்டேன்.........உன் அத்தா அப்படியே என்னை ஒரு முறை பார்த்து முழிச்சுட்டு, உன்னறைக்குக் கொண்டுவந்து விட்டுப் போனாங்க...?

'நீ பரிசு வாங்கினது அவங்களுக்கு ரொம்ப மகிழ்ச்சி...நேத்து இரவு முழுதும் அதைப் பத்தியே தான் எங்க வீட்டிலே பேச்சு...?' என்று தூக்கக் கண்களைக் கசக்கிக் கொண்டே கூறினான் ஹனீப்.

பகைக்கு ஏற்பவே தான் பாவின் முறுக்கும் இருக்கும். தந்தைக்கு மிஞ்சியவனில்லை என்பதைக் காட்டியது ஹனீபின் பேச்சு.

முகத்தை அலம்பாமலே ரஸாக்குடன் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தான் ஹனீப்.

'நோட்ஸை எழுதி முடிச்சாச்சா ஹனீப்?'

'எழுதிட்டேன். நானே இன்னைக்கி கொண்டுவந்து தரணும்னு தான் இருந்தேன். ரொம்ப நன்றி...?'

'பரவாயில்லை. இன்று ஞாயிற்றுக்கிழமையல்லவா? அதனாலே வந்தேன்'

இப்படியே சிறிது நேரம் அவர்களிருவரும் உரையாடிக்கொண்டிருந்தனர். ஹனீபு முகத்தைக் கழுவ, அறையை விட்டும் வெளியே சென்று திரும்பினான். அவர்களிருவரின் பேச்சு எங்கெல்லாமோ சுற்றி வந்தது. அச்சமயம் திடீரென்று ஒரு வெடிகுண்டைத் தூக்கிப் போட்டான் ஹனீபு. அதைத் தாங்கும் சக்தி ரஸாக்குக் கிடையாது என்பதை அவன் மௌனம் காட்டிவிட்டது.

'உனக்குக் காதலில் நம்பிக்கை

மகுதூம்

இருக்கிறதா ரஸாக்?' என்பதே ஹனீபின் திடீர்க் கேள்வி.

அதைக் கேட்டு மலைத்து, மௌனமானான், ரஸாக். இதென்ன திடீரென்று கேட்கிறான்? ஒருவேளை அவன் உள்ளம் ஜமீலாவை நேசிப்பதை ஹனீபு அறிந்து கொண்டு விட்டானா? தன் எண்ணத்தை ரஸாக் யாரிடமும் கூற வில்லையே? அதுபற்றி அவனே ஒரு முடிவுக்குக் கூட வரவில்லை! ஒருவேளை அன்று ஹனீபு தன்னிடம் பாடக்குறிப்பை வாங்கிப்போக வந்திருக்கும்போது தான் ஜமீலாவைப் பார்த்ததை, ஹனீபு கண்டு கொண்டு விட்டானோ? இவ்வளவு சிந்தனைக் கேள்விகள் ரஸாக்கின உள்ளக்கரையில் மோதின!

'காதலைப் பற்றிய இலக்கியங்கள் உனக்கு மனப்பாடம், ஹனீபு; அது பற்றி என்னிடம் கேட்கிறாயே?' என சமாளித்தான் ரஸாக்.

'அதுபற்றி உனக்குத் தெரியாதா? நீ பரிசுவாங்கியவனாயிற்றே என்று கேட்டேன்' என்று, ரஸாக்கின் வெற்றியைக் குத்திக்காட்டினான் ஹனீபு. மேலும், 'உனக்கு அத்தகைய உணர்வே இதுவரை ஏற்பட்டதில்லையா?' என்றும் துழாவினான் ஹனீபு—ஆழம் பார்க்கும் நினைப்பில்.

''தர்ம சங்கடமான கேள்வி''—கடலுக்கும் நெருப்புக் குமிடையில் தவிப்பது போலத் தவித்தது ரஸாக்கின் சிந்தனை. 'இல்லை' என்று சொல்லுவோமா

அப்படியானால் அவன் ஜமீலாவுக்கு, உள்ளத்தில் இடம்பிடித்துக்கொண்ட அந்த உன்னதமான கன்னிக்கு துரோகம் செய்தவனாக மாட்டானா?

'காதல் உணர்வுதானே, வாழ்க்கையின் அடிப்படைத் தத்துவம்' என்று தட்டிக் கழிக்க முயன்றான் ரஸாக்.

'நீ என்னதான் ஏமாற்றினாலும், உன் இரகசியம் எனக்குத் தெரியாமற் போகாது, ரஸாக்?' எனச் சிரித்தான் ஹனீபு.

'இரகசியமா? என்னப்பா மிரட்டறே?' எனத் திகைத்துக் கேட்டான் ரஸாக்.

'மிரட்டல் அல்ல ரஸாக், சரியான ரோஜாவைத்தான் பிடித்திருக்கிறாய்? உன் இரகசியம் எனக்குத் தெரிந்து விட்டதென்று அஞ்சுகிறாயா?' என்று கேலி செய்தான் ஹனீபு.

'என்ன உளறுகிறாய், ஹனீபு?' என ஆவேசமாகவே பேசினான் ரஸாக். இல்லாத ஒன்றை தன்மீது சாட்டும் போது யாருக்கும் கோபம் வரத்தானே செய்யும்?

ஹனீபு மேஜை டிராயரைத் திறந்து அந்தப் 'போட்டோ'வை வெளியே எடுத்து ரஸாக்கிடம் நீட்டியவாறே, 'இது என்ன மிரட்டலா, உளறலா, அல்லது உன் இரகசியமா, ரஸாக்?' என்று கேட்டான் குறும்புச் சிரிப்புடன்!

அதைக் கண்டதும் ரஸாக்குக்கு ஒரு கணம் வியப்பு மேலிட்டது. மறு

கணம் வழக்கத்திற்கு மாறாக அவுட்டுச் சிரிப்பு ஒன்றை உதிர்த்து விட்டான்.

'என்னையா பயமுறுத்தப் பார்க்கிறே. இவளை நீ எங்கேப்பா பிடிச்சே?'

'எல்லாம் உன் நோட்ஸில் தான்'

'என்ன? என் நோட்ஸிலா கண்டெடுத்தே? ஆச்சரியமா இருக்கே? இதற்கும் எனக்கும் சிறிதும் சம்பந்தமில்லை, ஹனீபு!'

'யாரிடம் கதை விடுறே?'

'உண்மையாகச் சொல்கிறேன், ஹனீபு. உன்னைப் போல் எத்தனையோ பேரிடம் என் நோட்ஸ் சென்று திரும்புகிறது யாராவது மறந்து இதில் மறைத்து வைத்திருக்கலாம். ஒருவேளை நீயே இந்த நாடகத்தை.........' என்று ரஸாக் இழுத்தான்.

'அதெல்லாமில்லை......... ஒருவேளை நீயும்.........'

'இருந்திருந்து இந்த அழகையா மோகிப்பான், மனிதன்?,

'இவளுக்கென்ன ரஸாக்? வனப்பின் வனம், இந்த ரோஜா. அவள் பேரே ரோஜாதானே. 'ரோஸ்'

ரஸாக் அவளை, அந்த நிழலைப் பார்த்தான். மலரை யொத்தவள் தான்; ஆனால் மணமில்லாதவள். ரோஜாமலர் தான்; ஆனால் காகித ரோஜா!—முள்ளில்லாத ரோஜாவை எப்படி அழகு மலரோடு சேர்க்க முடியும்? அவள் புதுமையின் வெளிப்பகட்டை யுடுத்திய நாகரீகக் கன்னுடி! இவளும் ஒரு பெண்ணா? ஹனீபுக்குக் கவர்ச்சியாகப் பட்டவள், ரஸாக்கு விகாரமாகப் பட்டாள். சந்தனக் கட்டையை அரைத்துத் தயாரிக்கப்படும் சந்தனத்திற்கும், கடைவீதியில் கிடைக்கும் போலிச் சந்தனத்திற்கும் வேறுபாடு காணமுடியாதவாறு ஹனீபின் கண்களில் இளமையின் கருப்புத்திரை அழுத்தமாக விழுந்திருந்தது.

'அப்போ உனக்கும் இதற்கும் சம்பந்தமில்லை என்று சொல்கிறாயா, ரஸாக்?' அதனை தனக்கே உரிமையாக்கிக் கொள்ளும் எண்ணம் ஹனீபின் பேச்சில் வெளிப்பட்டது

'ஆமாம்...உனக்கு வேண்டுமானால் வைத்துக் கொள்.'

'அதற்குத்தான் கேட்கிறேன்.....' என்று சொல்லிவிட்டு நாக்கைக் கடித்துக் கொண்டான் ஹனீபு. அதைப் பார்த்து ரஸாக் நமுட்டுச் சிரிப்புச் சிரித்தான்.

'அப்படி யாராவது இதைக்கேட்டு வந்தால்...'

'என்னிடம் அனுப்பு...சமாளித்துக் கொள்கிறேன்...உனக்குப் பொய் சொல்லத் தெரியாது...பிறகு உண்மையை உளறி விடுவாய். உள்ளதும் போய்விடும்' என்றான் ஹனீபு.

அந்தப் படத்தை மீண்டும் பார்த்து விட்டு மேஜை டிராயரில் வைத்தான் ஹனீபு அதனை ரஸாக் எங்கே கேட்டு விடுவானோ என்று முதலில்

ஹனீபு அஞ்சினான். ரஸாக்கைப் பழி வாங்க அதனைப் பயன்படுத்த எண்ணினான் ஹனீபு. இறுதியில் அந்தப் படம் அவன் உள்ளத்தைத் திருடி அவனையே பழிவாங்கி விட்டது.

'நான் வருகிறேன், ஹனீபு' என எழுந்தான் ரஸாக்.

'உனக்கு ரொம்ப நன்றி,' என்று பதிலளித்தான் ஹனீபு.

அப்போது திடீரென்று உள்ளே நுழைந்த உருவத்தைக் கண்டதும் திகைத்தான் ரஸாக். கையிலே கோப்பையும், தட்டுமாக உள்ளே நுழைந்தாள் மும்தாஜ். அவள் ரஸாக்கைப் பார்த்தும், ஒருகணம் அசையாது நின்று விட்டாள். அவள் அவனை அங்கு சிறிதும் எதிர்பார்க்கவில்லை. 'சமூகத்துக்கே பாராட்டு' வாங்கித் தந்த ரஸாக்கல்லவா, அவள் முன் நிற்கிறான்! திரும்ப முயன்றாள்.

'காபி குடித்து விட்டுப்போ, ரஸாக்!'

'பரவாயில்லை'

'இந்தா மும்தாஜ்......ஓடிப்போய் இன்னொரு கப் காப்பி அனுப்பு...... இம்...' என்று பணித்தான் ஹனீபு.

ஊருக்கே உயர்வைத் தேடித் தந்தவருக்குத் தன் கையால் காபியைக் கொடுக்க அவள் எவ்வளவு பெரிய, மகத்தான பாக்கியம் செய்திருக்க வேண்டும்? அந்த மகிழ்ச்சி, அவள் நடையில் துள்ளிப் பாய்ந்தது.

ரஸாக்கின் சிந்தனையிலே புகைப்படத்தின் உருவமும், மும்தாஜின் தோற்றமும் எழுந்தன. இருவரையும் ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்டது அவன் உள்ளம்!

4. சோலியாப் பள்ளியில்...

மனிதன் வாழ்வில் எத்தனையோ விதமான கனவுகளைக் காண்கிறான். மனிதனின் வாழ்க்கையே, கனவுகள் எனும் பலவர்ண நூல்களால் நெய்யப்பட்ட ஆடைதானே? அக் கனவுகளை ஊடையும் பாவுமாக அமைத்து நனவாக நெய்ய வேண்டிய கடமையில் இருந்தார் அப்துல் ஸலாம்.

தம் எதிர்காலம் பற்றிய கனவுகளுடனும், திட்டங்களுடனும் ரங்கூன் துறைமுகத்தில் இறங்கினார் ஸலாம். அவர் ஊரைச் சேர்ந்த இரண்டொருவர், அவரை வரவேற்க கப்பலடிக்கு வந்திருந்தனர். அப்துஸ்ஸலாமைக் கண்டதும் அவர்கள் கண்களிலும், முகத்திலும் புதுமை பாய்ந்திருந்தது; தனி மகிழ்ச்சி சிரித்துக் கொண்டிருந்தது. பழைய நண்பர் மீண்டும் தங்களோடு வந்து சேர்ந்து விட்டார் என்ற காரணத்தால் அவர்களுக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது. மேலும் சொந்த ஊரிலிருந்து வருவோரிடம் தங்கள் குடும்பங்களைப் பற்றி நேரடியான தகவல்களைக் கேட்டுக் கொள்ளலாமல்லவா? கப்பலடிக்கு வந்த நண்பர்களில் ஒருவரின் கடையில் தங்கினார் அப்துஸ்ஸலாம்.

ஊரிலிருந்து வந்தவர்க்கு விருந்துகள் வைத்து மகிழ்ந்தார்கள். தொடர்ச்சியாகப் பத்துப் பதினைந்து நாட்களுக்கு, அப்துஸ்ஸலாமுக்கு சாப்பாட்டுப் பிரச்சினையே இல்லை. ஒருவேளை தம்மீதுள்ள அன்பு காரணமாக அத்தகைய விருந்துகளை நடத்தினார்களா, அல்லது விருந்தாளிகளைச் சாக்குவைத்து, தங்கள் விருப்பத்தையும், நாக்கின் தவிப்பையும் நிறைவேற்றிக் கொண்டார்களா என்று எண்ணலானார் ஸலாம். உண்மையிலேயே அவர்கள் அவர்மீது எந்த அளவு அன்பு கொண்டுள்ளார்களென்பதை பின்னால் தான் ஸலாம் புரிந்து கொள்ள முடிந்தது. பகட்டாகவும் மினுமினுப்பாகவும் இருக்கும் சேலையின் சாயம் கெட்டியா என்பது வாங்கும்போது தெரியாது. அதைச் சலவைக்குப் போட்ட பின்புதானே தெரியும்! அதேபோல ஸலாமுக்கு விருந்து கொடுத்தவர்களின் சாயம் பின்னால் வெளுத்து விட்டது!

வழக்கமாக வேலை பார்த்து வந்த கடைக்கு அப்துஸ்ஸலாம் மீண்டும் சம்பளத்துக்குப் போகாததால், மற்றவர்கள் அவரைத் தங்கள் கடைக்குக் கூப்பிட்டார்கள். அப்போது தான் நாணயத்துக்கும், நம்பிக்கைக்கும் எவ்வளவு வரவேற்பும், மதிப்பு மிருக்கின்றன என்பது ஸலாமுக்குப் புரிந்தது. மல்லிகைப் பூவுக்கு விளம்பரம் தேவையா என்ன? ஸலாமின் நாணயத்தையும், திறமையையும் கொண்டு தங்கள் வியாபாரங்களைப் பெருக்குவதற்காகத்தான் அவர் ஊர்க்காரர்கள் அழைத்தார்கள். அது ஸலாமுக்கு எந்த வகையிலும் நன்மை தருவதாயில்லை எனவே அவர்களிடமெல்லாம் தம் புதிய யோசனையை வெளியிட்டு உதவி வேண்டினார், அப்துஸ்ஸலாம். அவர்களும் பெரிதும் ஒத்தாசை புரிவதாகச் சொல்லத் தவறவில்லை. ஆனால் மாமரத்தில் பூத்திருக்கும் பூக்களெல்லாம் காய்த்து விட்டால், அவற்றை மரக்கிளைகளால் தாங்க முடியுமா? எல்லோருமே சொன்னபடி ஸலாமுக்கு ஒத்தாசை புரிந்து விட்டால், அவருக்குத் தாங்கும் சக்தி இருக்கவேண்டுமே?

ஒன்றிருவர் தங்கள் வியாபாரத்தில் ஸலாமை பங்குதாரராகச் சேர்த்துக் கொள்ள முன் வந்தார்கள். ஸலாம் முதலீடு கூடப் போடத் தேவையில்லை என்று ஆசைவார்த்தை காட்டினார்கள். எவ்விதமான நிபந்தனையும் விதிக்காமல், சிப்பந்திப் பங்குதாரராக மட்டும் ஸலாம் இருந்தால் போதும்; லாபத்தில் பங்கு கிடைக்கும்.—எவ்வளவு 'லேசா'கச் சொல்லி விட்டார்கள்! ஆனால் இதையெல்லாம் கேட்டு ஸலாம் மயங்கிவிடவில்லை!

ஏற்கனவேயே அப்துஸ்ஸலாமுக்கு இந்த வகையில் கொஞ்சம் விஷயம் தெரியும். திறமையான சிப்பந்திகளை லாபத்தில் நாலணா பங்கு தருவதாகச் சொல்லி கடைக்குக் கூப்பிடுவார்கள். நான்கு அல்லது ஐந்து வருஷங்கள் அந்த சிப்பந்திகள் மாடாய் உழைப்பார்கள். லாபத்தில் பங்கு சம்பந்தமாக 'எழுத்துக் குத்து' ஒன்றுமிருக்காது. எல்லாம் வாக்கு ஒப்பந்தம் தான்; சாட்சியமும் இராது! முடிவில் 'உடுத்ததற்கும், உண்டதற்கும், ஊருக்கு, அனுப்பியதற்கும் சரியாய்ப் போச்சு' என்று 'கணக்கு வழக்கு'களைப் பார்த்துச் சொல்லிவிடுவார்கள் கடைச் சொந்தக்காரர்கள்; சிப்பந்தி

நீரிழிவு

குணமாகும்

சிறுநீரில் சர்க்கரை இருப்பின் அது நீரிழிவு (DIABETES) என்று சொல்லப்படும். அபரிமிதமான தாகம், பசி, அடிக்கடி சிறுநீர் போதல், இளைப்பு ஆகியவை நீரிழிவு வியாதியின் அறிகுறிகளாகும் இப் பயங்கர வியாதி, தன்கோரப்பிடியினால் நோயாளியைக் கொஞ்சம் கொஞ்சமாக மரணத்துக்கு இழுத்துச் செல்கிறது. நீரிழிவுக்கு சிகிச்சையாக இஞ்ஜக்ஷன்கள் செய்யப்படுகின்றன. ஆனால் இஞ்ஜக்ஷன் மருந்து உள்ளவரைதான் சிறுநீரில் சர்க்கரை கட்டுப்படுத்தப்படுகிறது. எனவே, வாழ்நாள் முழுதும் இஞ்ஜக்ஷன் செய்துகொண்டேயிருக்கவேண்டும். இதனால் துன்பமும் செலவும் அதிகம். வியாதிக்குச் சிகிச்சை செய்யாவிட்டால், புண்கள், கண், வயிற்றுக் கோளாறுகள், இதயக் கெடுதல்கள் ஏற்படுகின்றன. *வீனஸ் சார்ம்* மாத்திரைகள் மூலம், சுலபமாகவும் செலவின்றியும் சிகிச்சை செய்து கொள்ளுங்கள். குணம் நிச்சயம்.

வீனஸ் சார்ம் புராதன யுனானி வைத்திய சாஸ்திரத்தில் சொல்லப்பட்டபடி மூலிகைகளாலும் சாறுகளாலும் விஞ்ஞான முறையில் தயாரிக்கப்படுகின்றது. நீரிழிவை அடியோடு நிவர்த்திக்கிறது இது. இஞ்ஜக்ஷனோ பத்தியமோ இன்றி பலர் குணமடைந்திருக்கிறார்கள். ஆயிரக்கணக்கானோர் மரணத்தினின்றும் தப்பியுள்ளார்கள். இம் மருந்தை உபயோகிக்கத் தொடங்கிய 2-வது அல்லது 3-வது நாளிலேயே சிறுநீரில் சர்க்கரை குறைவதுடன், அடிக்கடி சிறுநீர் போவதும் குறைகிறது. வேறுவிதப் பத்தியங்கள் தேவையில்லை. குணம் தெரியும். நன்கு விளக்கும் இலவச ஆங்கிலபுத்தகத்துக்கு எழுதிக் கேளுங்கள். 50 வில்லைகள்கொண்ட புட்டி 1க்கு ரூ.6-12-0 பாக்கிங், தபால் செலவு இனம்.

VENUS RESEARCH LABORATORY
(P.R.) POST BOX 587, Calcutta.

களோ ஏமாந்துபோய் உடுத்த துணியோடும், 'இரக்கப்பட்டு' முதலாளி கொடுத்த சிறு தொகையுடனும் ஊர் திரும்பி விடுவார்கள். இறுதியில் அவர்கள் பாடு, எட்டிக் காயை எலுமிச்சம் பழம் என்று நம்பி ஏமாந்த கதைதான்!

சொந்தக் கடை வைக்க வேண்டுமென்ற முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டார் அப்துஸ்ஸலாம். பிரேசர் வீதி, காந்தம், காலாபஸ்தி, கண்டோன்மென்ட், அஃலோன், பசுமந்தான் முதலிய இடங்களுக்குச் சென்றார். அங்கு கடை வைத்து நடத்தும் தம்மூர்க்காரர்களிடம் உதவி தேடினார். ஒன்றிரண்டு பேர்கள். தங்கள் கடைகளை எழுதிக் கொடுத்து விட்டு ஊருக்குத் திரும்ப எண்ணினார்கள். அவர்களையும் அணுகிப் பார்த்தார் ஸலாம். அவர்கள் கேட்கும் தொகைக்கும், ஸலாமிடம் இருக்கும் தொகைக்கும், சரிக்கட்ட முடியாத ஏற்றத் தாழ்வு இருந்தது. அப்போது தான் ஸலாமுக்கு ஜைனுல் ஆபிதீன் சொன்னது நினைவுக்கு ஓடி வந்தது. ஐநூறு ரூபாய் காணாதே என்று ஜைனுல் ஆபிதீன் கூறியதும், அக்கரையில் புரட்டிக் கொள்வதாகச் சொன்னார் ஸலாம். மொகல் வீதியிலும், சூரத் பஜாரிலும் கடை வைத்து நடத்தும் தம் சொந்த ஊர்க்காரர்களிடம் கொஞ்சம் பணவுதவி, கடனாகத் தரும்படிக் கேட்டார் ஸலாம். ஆனால் அவர்களோ கைவசம் பணம் இல்லை என்று சொல்லவில்லை. அதற்குப் பதிலாக, 'பணம் மொத்தமாக இருக்கிறது: சில்லரையாக எடுத்துக் கடன் கொடுத்தால், பிறகு சில்லரையாகவே பூராப் பணமும் கரைந்து விடும்' என்று அவர்களுக்கே சொந்தமான தத்துவத்தைக் கூறி, ஸலாமை அனுப்பிவிட்டார்கள். அங்கும் ஸலாமுக்குத் தோல்வி! அப்போதெல்லாம் தாமும் பணம் சம்பாத்தியம் பண்ண வேண்டுமென்று ஆசைப்படுவதால் இவ்வளவு சோதனைகள் வருகின்றனவோ என எண்ணுவார் ஸலாம். சில சமயம் எங்காவது ஒரு கடையில் சம்பளத்துக்கு வேலை பார்க்கச் சென்று விடலாமா என்றும் யோசிப்பார். அப்போது, ரங்கூனுக்குப் புறப்படுவதற்கு முதல் நாளிரவு அவர் ஜமீலாவுக்குக் கொடுத்த வாக்கு நினைவுக்கு ஓடிவந்து, அவரின் அலையாடும் உள்ளத்துக்கு உறுதி கொடுக்கும். 'சுயமாகச் சம்பாதிச்சு நாலு காசோடு வீடு திரும்புவேன்' என்று அவளிடம் அவர் வாக்குக் கொடுத்திருப்பதை, எப்படி மீற முடியும்? எப்படி மறந்து செயல்பட முடியும்? ஸலாம் தனக்கு ஏற்பட்ட தோல்விகளையும் ஏமாற்றத்தையும் கண்டு மனம் உடைந்து விடவில்லை. அவர் சமையற் கட்டிலிருந்து சம்பளக்

கோபால் பல்பொடி

பல் வலி, பல் அரணை, வாய்நாற்றம் பல்களில் இரத்தம் வடிதல் முதலிய பல் வியாதிகளை குணப்படுத்தி பல்களுக்கு வெண்மையும் பலத்தையும் தருகிறது.

தயாரிப்பவர்கள்: எஸ்.பி.எஸ்.ஜெயம் அன் கோ.,
25, கீழ நாப்பாளையத் தெரு, மதுரை.

காரராக உயர்ந்து விடவில்லையா? எல்லாம் முயற்சியால் தானே! தான் எடுத்துக்கொண்ட முயற்சிகள் வீண் போகாது என்ற நம்பிக்கை அவருக்கிருந்தது. கிணறு தோண்டும்போது, பாறைகள் காணப்படுவதுண்டு. அவற்றைத் தகர்த்து மேலும் தோண்டினால் தண்ணீர் தென்படாது. பதினைந்து அடி தோண்டியும் தண்ணீர் வரவில்லை. பதினாறாவது அடிவெட்டியதும், தண்ணீர் 'குபு, குபு' வெனக் கொப்பளிக்கிறது. அப்படியானால் முதல் பதினைந்து அடிகள் வரை தோண்டியது வீண் முயற்சிகளா? அந்த அடிகள் ஒவ்வொன்றும், வெற்றி என்னும் பதினாறாவது அடியை நோக்கிச் செல்லும் படிகள்! உள்ளூரில் வெட்டப்பட்ட கிணறு ஒன்றின் நினைவு ஸலாமின் மனத்தில் எழுந்து, தெம்பைக் கொடுத்தது. ஆனால் அவருக்கு வருத்தமெல்லாம், அவரது ஊர்க்காரர்களைப் பற்றித்தான்.

அவர்கள், அவருக்கு ஒத்தாசை புரியும் எண்ணமுடையவர்களாகக் காட்டிக் கொண்டார்கள். விருந்துகள் வைத்து மகிழ்ந்தார்கள். எவ்விதச் சலனமும், சுளிப்புமின்றி ஸலாமிடம் பேசிக் கொண்டார்கள். சொந்தக் கடை வைக்க விரும்புவதாக ஸலாம் சொன்னதும், சரியான யோசனை எனத் தட்டிக் கொடுத்து 'சபாஷ்' போட்டார்கள். ஆனால் கிட்டத்தில் நெருங்கும்போது, தங்கள் சுய ரூபத்தைக் காட்டி விட்டனர். ஒரு முறைக்கு இரு முறை அவர்களிடம் சென்றால், அவர்கள் ஸலாமிடம் சரியாக முகம் கொடுத்துப் பேச விரும்பவில்லை. 'தனிக் கடை வைக்கப் போகிறாராமே' என்று கேலியும், கிண்டலும் செய்தார்கள். பர்மியர்கள் இந்தியர்களை 'கல்லாக்' காரர்கள்—(அக்கரையிலிருந்து இக் கரை வந்தவர்கள்—நீந்தி வந்தவர்கள்) என்று இழிவாகப் பேசுவார்கள். இந்த இந்தியர்களோ, தங்களைச் சேர்ந்தவர்களையே தாழ்வாக மதிப்பது தான் ஸலாமுக்கு வேதனை மூட்டியது. அவருக்காக அலைந்து திரிந்தவர்கள் அவரை வரவேற்கக் கப்பலடிக்கு வந்தவர்கள். அவர்களிடமோ போதிய பொருளாதாரம் இல்லை. ஆனால் பொருளாதார வசதி படைத்தவர்கள் நடந்துகொண்ட முறையோ, ஸலாமுக்குப் பங்களாத் தோட்டத்தைத் தான் நினைவூட்டியது. அத்தகைய பங்களாத் தோட்டங்களை அவர் கண்டோன்மெண்டில் கண்டிருக்கிறார்.

பங்களாவைச் சுற்றிலும் பூக்கள் நூற்றுக்கணக்கில் பூத்திருக்கும். விதவிதமான பல வகை வர்ணப்பூக்கள், காட்சியளித்துக் கொண்டிருக்கும். பங்களாவின் அழகுக்கு அழகு செய்து கொண்டிருக்கும். அப் பூக்களில், கவர்ச்சியும், பகட்டுமிருக்கும்; ஆனால் மணமிருக்காது, காயும், கனியுமிருக்காது. பங்களா வாசிகளின் உள்ளப் பண்பையும், அவர்களின் வளமான பேச்சுக்களின் வரட்டுத் தன்மையையும், உணர்த்துவதற்கென்றே தோன்றிய ஜம்பச் செடிகள் அவை என எண்ணினார் ஸலாம். அவரூர்க்காரர்கள் பங்களாவில் வசிக்காவிட்டாலும், அத்தகைய ஜம்பச் செடிகள் தான் என்று எண்ணினார். இந்த உண்மை அவருக்குப் பெருத்த துக்கத்தை உண்டு பண்ணியது. ஏதாவது ஒரு சிறு 'கும்ட்டி' என்ற கீலிக்கடையாவது பார்த்து விட வேண்டுமென்று உறுதி பூண்டார் ஸலாம்.

மாதங்கள் இரண்டு கடை தேடும் முயற்சியிலேயே கழிந்துவிட்டன. தமக்கு ஏற்பட்ட ஏமாற்றங்களையும், தோல்விகளையும் விரிவாக ஜமீலாவுக்கு எழுதினார், ஸலாம். மேலும் முயன்று கொண்டிருப்பதாகவும், விரைவில் வெற்றி கிடைக்கும் என்ற நம்பிக்கை இருப்பதாகவும் தம்மனைவிக்குக் கடிதம் எழுதினார். அவள் கவலைப்படக் கூடாதென்பதற்காகவே தான் அவ்விதம் வரைந்தார். ஆனால் அப்துஸ்ஸலாமுக்கோ வெற்றி வெகு தொலைவில் இருப்பதாகப் பட்டது. சில சமயங்களில் அவர் நெஞ்சில் வேதனையும், துக்கமும் ஏற்படும். அப்போதெல்லாம் அவர் சோலியாப் பள்ளிக்குச் சென்று விடுவார். வழக்கமான தொழுகைகளைத் தவிர்த்து, மனச்சாந்திக்காக இறைவனைத் தொழுதும், குர்ஆன் ஓதியும் இரவைக் கழிப்பார்: தமது முயற்சிகள் வெற்றிபெற இவனிடம் 'துஆ'க் கேட்பார்.

இரவு சுமார் பதினோரு மணி. சோலியாப் பள்ளியினுள் மின்சார ஒளி இருளை விரட்டிக் கொண்டிருந்தது. உள்ளே ஒரு மூலையில் அப்துஸ்ஸலாம் இறைவனிடம் 'துஆ'க் கேட்டுக்கொண்டிருந்தார். சிறிது சிறிதாக அவர் குரல் உயர்ந்து கொண்டே இருந்தது. குரல் உயர உயர அதில் உருக்க மிருந்தது. அவர் கண்களினின்றும் கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது.

"யா அல்லாஹ்—ஏழைக்குச் சீக்கிரத்திலேயே ஒரு புகல் சொல்லு, ஆண்டவனே' என்று தமது 'துஆ'வை முடித்துவிட்டெழுந்தார் ஸலாம். அப்போது தான் பள்ளி வாசலில் மற்றோர் மூலையில், யாரோ ஒருவர் 'தஸ்பீஹ்' மணிகளை உருட்டிக்கொண்டு, தன்மையே நோக்கியதைக் கண்டார், ஸலாம்.

ஸலாம் வெளியே வந்ததும், அவரும் ஸலாமைப் பின் தொடர்ந்தார். ஸலாமின் கண்களில் மின்னிய கண்ணீர்த் திவலையைக் கண்டு கொண்டார், அந்த 'சேர்பாதி' (பர்மிய) முஸ்லிம். அவர் அப்துஸ்ஸலாமை நோக்கி, 'அஸ்ஸலாமு அலைக்கும்' என்றார். அப்துஸ்ஸலாமும் பதில் கூறினார்,

'உங்களிடம் ஒரு விஷயம் பேச வேண்டும்' என்றார் அந்த பர்மிய முஸ்லிம், பர்மிய மொழியில்!

ஸலாம் அதைக்கேட்டு ஒரு கணம் நின்று விட்டார்.

'நீங்கள் அல்லாஹ்விடம் கேட்டுக் கொண்டிருந்த 'துஆ'வைக் கேட்டேன். நீங்கள் ஆண்டவனிடம் கேட்டது என்ன என்று எனக்குப் புரியா விட்டாலும், உங்கள் முறையீட்டில் உருக்கம் இருந்தது. அந்த உருக்கம் என் உள்ளத்தைத் தொட்டுவிட்டது. உங்கள் பாஷை எனக்குத் தெரியாவிட்டாலென்ன? உள்ளத்தின் பாஷை உணர்ச்சிதானே? உங்கள் மனத்திலே ஏதோ கவலை இருப்பதாக உணர்கிறேன்——' என்று அவர் தொடர்ந்து பேசலானார்.

(தொடரும்)

அழகு பொருந்தியவர்களுக்கு நூதன காணிக்கை!

அசோகா ராயல் டால்க் பௌடர் டீலக்ஸ்

சர்மத்தை மிருதுவாகவும், பிரகாசமாகவும் செய்யக் கூடிய வஸ்துக்கள் இதில் சேர்க்கப்பட்டுள்ளன.



நாள் முழுவதும் சரீரத்தில் உற்சாகத்தை கொடுக்கக் கூடிய வாசனைத் திரவியங்கள் சேர்த்துத் தயாரிக்கப்பட்டது.

புதிய முறையில் தயாரித்த இந்த பௌடர்—உயர்ந்த வஸ்துக்களால் நிபுணர்கள் தயாரித்தது. நாள் முழுவதும் புதிய உற்சாகமும், மன அமைதியும், குளிர்ச்சியும் மிகுந்த பரிமளமும் உண்டாவதற்கு உங்களுக்கு உதவளிக்கிறது. இன்றே உபயோகியுங்கள்.

அழகுள்ள இரண்டு சைஸுகளுள்ள டப்பிகளில் கிடைக்கும். உடனே உங்கள் டீலர்களை விசாரிக்கவும்.

விஜயா கெமிகல்ஸ், சென்னை-7.

உலக மதம்

மூலம்: உர்தூ   தமிழாக்கம்: அர்ஸலான்

டாக்டர் ஷேமல் ஒரு ஜெர்மனியர். கெய்ரோ பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார். அவர் எழுதியுள்ள ஒரு கட்டுரையின் மொழி பெயர்ப்பு "தீன் துன்யா" என்னும் உர்தூ மாத சஞ்சிகையில் இடம் பெற்றிருக்கிறது. அதன் அழகிய தமிழாக்கம் தான் நீங்கள் படிக்கப் போகும் இக்கட்டுரை.

"உலகின்கண் தோன்றிய சமயங்களின் வரலாற்றை ஆராயும்போது ஓர் உண்மை புலனாகிறது. காலம் செல்லச் செல்ல எல்லாச்சமயங்களும் உருமாறிப் போயிருக்கின்றன. மக்கள் உள்ளங்களை ஈர்த்துப் பிணைக்கும் தன்மையை அவை படிப் படியாக இழந்தும் இருக்கின்றன. பதினான்கு நூற்றாண்டுகளாகியும் இப்பிணிக்கு இரையாகாது தொடக்கத்தில் காணப்பட்ட கவர்ச்சியும் ஆழமும் வன்மையும் குறையாது விளங்குவது இஸ்லாம் ஒன்றே. இதன் மகத்தான சக்தி நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே செல்வதையும் நாம் பார்க்கிறோம்.

இஸ்லாத்தின் அஸ்திவாரம் குர்ஆன், ஹதீது ஆகியவற்றில் அமைந்துள்ளது. அதன் சகல சட்டதிட்டங்களும் அவற்றின் அடிப்படையில்தான் ஆக்கப்பட்டிருக்கின்றன. தோன்றிய நாள்முதல் இஸ்லாமிய வேதமான திருக்குர்ஆன் எவ்விதமான இடைச் செருகலுக்கோ திருத்தங்களுக்கோ இடங் கொடாமல் இன்றுவரை உள்ளது. மற்றச் சமயங்களின் மறை நூல்களைப் பற்றி இப்படிச் சொல்ல முடியவில்லை. பதினான்கு நூற்றாண்டுகளாகியும் குர்ஆனில் ஓர் எழுத்தும், கூடியோ குறைந்தோ போகாமல் ஒரு புள்ளி மாற்றமும் இன்றி இருப்பதைக் காணுந்தோறும், அதன் தூய்மையைக் கண்டு ஆச்சரியப் படாமல் இருக்க முடியவில்லை. மற்ற சமய நூல்கள் ஒரு சில நூற்றாண்டுகளுக்குள் பல மாறுதல்களுக்கு இரையாகியுள்ளன. ஒரே நூலின் இரண்டு பிரதிகளுக்கிடையே வேற்றுமை காணப்படுகிறது. அந்த அளவுக்கு அவை தூய்மை இழந்துவிடுகின்றன.

குர்ஆனின் இந்தத் தனித் தன்மை தான் இஸ்லாத்திற்கு அழியாத புதுமையை அளித்து வருகிறது. அதன் ஒளி மங்கியோ மறைந்தோ போகாமல் எப்பொழுதும் போல் சுடர்விட்டுப் பிரகாசிக்கச் செய்கிறது மக்கள் உள்ளங்களைக் கவர்ந்து பாசத்தால் பிணைக்கும் அதன் சக்தியை நாளுக்கு நாள் வளர்த்துக் கொண்டே செல்கிறது அதன் வளர்ச்சியின் வேகத்தைப் பார்க்கும்போது மற்றெல்லா மதங்களையும் பின் தங்கச் செய்துவிட்டு சிறுகச் சிறுக உலகத்தையே இஸ்லாம் தன் வசப்படுத்திக் கொள்ளும் நாள் விரைந்து கொண்டிருக்கிறது என்ற எண்ணம் பிறக்கிறது.

விஞ்ஞானத்தின்வளர்ச்சியைக் கண்டு வெருண்ட சமயங்கள் அநேகம். முன்னேறும் உலகத்தோடு நடைபோட முடியாது திணறும் சமயங்கள் அநேகம். ஆனால் இஸ்லாம் விஞ்ஞானத்தை வளர்த்தது. உலகத்தை முன்னேற்றப் பாதையில் நடாத்திச் செல்வதற்கு விஞ்ஞானத்திற்கு உறுதுணையாகவும் நிற்கிறது மக்கள் முன்னேற்றத்திற்கு மற்றொரு காரணமாகிய ஜனநாயகம் இஸ்லாத்திற்குப் புதிதான ஒன்றல்ல. இஸ்லாம் தோன்றுவதற்கு முன் ஜனநாயகத்தைப் பற்றி உலகம் ஒன்றும் அறியாதிருந்தது. ஜனநாயகக் குரல் எழுப்பிய முதல் இயக்கம் இஸ்லாம் என்பதை யாரும் மறுக்க முடியாது. ஐரோப்பாவின் ஜனநாயகத்தை

வளர்த்த முதல் நாடு பிரான்சு. ஆனால் இப்பாடத்தை பிரான்சு அண்டை நாடான ஸ்பெயினிடமிருந்து கற்றுக் கொண்டது என்ற உண்மையைப் பலர் அறியார். இஸ்லாமிய ஆட்சியின்கீழ் ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகள் கலைகளின் கேந்திரமாகவும் விஞ்ஞானத்தின் பிறப்பிடமாகவும் ஸ்பெயின் திகழ்ந்திருக்கிறது. பிரெஞ்சு ஜனநாயக இயக்கத்தின் அடிப்படையாய் அமைந்தவை இஸ்லாமியக் கொள்கைகளேயன்றி வேறல்ல.

சமத்துவம்,சகோதரத்துவம்,அடிமைமுறை ஒழிப்பு, பெண்கள் விடுதலை, இவ்வாறாகக் கிளம்பிய சகல இயக்கங்களும் இஸ்லாமிய செல்வாக்கின் பயனே ஆகும். ஐரோப்பா என்ன, உலகின் எந்தப் பகுதியிலும், இஸ்லாம் பரவுவதற்கு முன்னர் சமத்துவம் என்பது நடைமுறையில் காணப்படாத ஒன்றாகவே இருந்தது. அடிமைகளை வைத்திருப்பது பெருமைக்குரிய விஷயமாகக் கருதப்பட்டு வந்தது. அதிக அடிமைகளை வைத்திருந்தவன் மிகப்பெரியவனாக மதிக்கப்பட்டு வந்தான். பெண்கள் எவ்வித உரிமைகளுமின்றி வாழ்ந்தனர். நாகரிகத்தின் உறைவிடம் என்று கருதப்படும் பழம்பெரும் கிரேக்க நாட்டில் ஒரு சிறு குற்றத்திற்காகவும் மனைவியைக் கொன்றுவிடும் உரிமை அவள் கணவனுக்கு இருந்தது. இன்றைய உலக நாகரிகத்திற்கும், முன்னேற்றத்திற்கும் உறுதுணையாய் இருந்தது இஸ்லாமியக் கொள்கைகளே என்பது தெளிவாகிறது.

இறைவணக்கத்தையும் மரணத்திற்குப் பிற்பட்ட நிகழ்ச்சிகளையும் சொல்வதோடு நின்றுவிடாமல் மக்களின் அன்றாட வாழ்க்கையில் சிரத்தை எடுத்து வழிகாட்டுகிறது இஸ்லாம். மறுமையைப் பற்றி போதிப்பதுபோல பிரச்னைகளுக்கும் தீர்வுகாண அது முயல்கிறது. ஆகவேதான் இவ்விஞ்ஞான காலத்தில் கூட ஒருவிதப் பிரச்சாரமும் இல்லாமல் இஸ்லாம் உலகின் நாலா பக்கங்களிலும் பரவிவருகிறது. ஐம்பது ஆண்டுகளுக்குமுன் இஸ்லாத்தின் பெயரையும் கேள்விப் பட்டிராத நாடுகளிலும் இன்று அது பரவியுள்ளது. எந்த பிரசாரகரும் அந்நாடுகளில் செயலாற்றியதாகக் காணோம். வாணிபத்தின் பொருட்டு, அங்கே குடியேறிய ஒரு சில முஸ்லிம்களின் ஒழுக்கமும் சீரான நடத்தையும் அம்மக்களைக் கவர்ந்திருக்க வேண்டும்.

பிரான்ஸையும் ஜெர்மெனியையும் பாருங்கள். இரண்டாம் உலகப் போருக்கு முன் மிகச் சில முஸ்லிம்களே அங்கே காணப்பட்டனர். போரின் போது, கீழ் நாடுகளிலிருந்து பலபோர் வீரர்கள் மேற்கத்திய நாடுகளுக்குச் சென்றனர். அந்நாட்டுப் போர் வீரர்களும் ஆசிய நாடுகளுக்கு வந்தபோது முஸ்லிம்களைக் கண்டு பேசியும் உள்ளனர். இந்த நேரடித் தொடர்பின் விளைவாக இஸ்லாம் அவர்கள் உள்ளங்களில் இடம்பெற தொடங்கிற்று. ஐரோப்பிய பெண்மணிகள் பலர் முஸ்லிம் இளைஞர்களை மணந்து கொண்டனர். ஆகவே இன்று அங்கே போருக்குமுன்னிருந்ததைவிடப் பத்து மடங்கு முஸ்லிம்களின் எண்ணிக்கை பெருகிவிட்டது. இப்பொழுது அங்கே பல முஸ்லிம் கழகங்கள் இயங்க ஆரம்பித்துவிட்டன. பள்ளிவாசல்கள் பல கட்டப்பட்டுள்ளன. இதே நிலை மற்ற மேலை நாடுகளிலும் உருவாகி வருகிறது.

இஸ்லாம் அமெரிக்காவையும் ஈர்த்து வருகிறது. மத்திய அமெரிக்காவிலும் அமெரிக்கத் தீவுகளிலும் அதன் முன்னேற்றம் வியக்கத்தக்கதாய் உள்ளது. பனாமாவில் அதன் வெற்றி மகத்தானது. மொத்த ஜனத்தொகையில் இருபத்தைந்து சதவீதம் அங்கு முஸ்லிம்களாக வாழ்கின்றனர். அர்ஜன்டைனாவில் ஏறக்குறைய பத்தாயிரம் பேர்கள் இஸ்லாமிய நெறியைக் கடைப்பிடிப்பவர்கள். இந்தப் பின்னணியில் ஆராயும் போது, இஸ்லாம் தன் வேகத்தைக் குறைத்துக் கொள்ளாமல் பரவிச் செல்லுமானால் ஒரு நாள் உலகத்தின் ஏக மதமாக விளங்கும் வாய்ப்பை அது பெற்றுவிடும் எனப் புலனாகிறது.

★

சிங்கப்பூர் அளிக்கும் சிந்தனை விருந்து!

"பிறைக் கொடி"

[இஸ்லாமிய மாத இதழ்]

மூடக் கொள்கைகளுக்கு முடிவு கூறும் முற்போக்குக் குரலாக, செயலார்வத்தினைத் தூண்டும் சிந்தனைத் தோழனாக நீங்கள் கொடுக்கும் விலையைவிடக் கூடுதல் மதிப்புடையதாக சிங்கப்பூரிலிருந்து வெளிவருகிறது!

விலை: தனிப் பிரதி 20 காசு   விற்பனைக் கழிவு: 25%

முன்பணம் கட்டக்கூடிய ஏஜெண்டுகள் தேவை.

விபரங்களுக்கு:

CRESCENT PUBLICATIONS,

P. O. BOX NO. 2548   SINGAPORE.

இன்றல்ல!   நேற்றல்ல!!

48 ஆண்டுகளாக புகழ் பெற்றது

ஆர். எஸ். பதி மருந்து

(REGD.)

தலைவலி, ஜலதோஷம் முதலிய அநேக வியாதிகளுக்கு கைகண்டது.

புட்டி 1-க்கு விலை 63 நயா பைசா.

விரிவான கேட்லாக் வேண்டுவோர் எழுதவும்.

தயாரிப்பவர்கள்:

ஆர். எஸ். பதி அண்டு கோ.,

(ஸ்தாபிதம்: 1909)

தபாற் பெட்டி நெ. 99, : : மதுரை.

சிறந்த சிறுகதை

மனிதனின் சிந்தனைகளும், கருத்துக்களும் காவிய வடிவிலே உருவாவது தான் சாலச் சிறந்தது என்று கருதப்பட்டு வந்த காலத்திலே முஸ்லிம் தமிழ் அறிஞர்கள் பலர் கவிதை இயற்றும் முறையிலே பேரும் புகழும் பெற்று விளங்கினுர்கள். சீருப் புராணம், திருமணிமாலை, இராச நாயகம், குத்பு நாயக மான்மியம் சொர்க்கநீதி போன்ற கவிதைச் செல்வங்கள் இன்றும் சொல்லழகும், கருத்துச் செறிவும் கொண்டு திகழ்கின்றன.

வசன நடை வளம் பெற்று மக்கள் உள்ளங்களிலே இடம் பெற ஆரம்பித்ததும், அதிலும் முஸ்லிம் எழுத்தாளர்கள் தரமான பணியாற்றினுர்கள். சிறப்பாக சிறுகதைத் துறையிலே அவர்கள் தம் சீரிய பணி சிந்தைக்கு ஒரு நல்விருந்தாகும்.

இத்தகைய சிறு கதைச் செல்வர்களின் சிறந்த கதைகளை இறையருள் கொண்டு பிறையில் தொடர்ந்து வெளியிட எண்ணியுள்ளோம். தாங்கள் எழுதியவற்றுள் சிறந்த சிறுகதையை அவ்வாசிரியரே தேர்ந்தெடுத்துத் தரக் கோரியிருக்கிறோம். இவ்வகையில் கீழ்க்காணும் பன்னிரண்டு சிறு கதையாசிரியர்களின் கதைச் செல்வத்தைப் பிரசுரிக்கும் பேறு பிறைக்குக் கிடைக்கும்.

ஏ. எம். மீரான். (ஆசிரியர், பிறை) ''ஹஸன்,'' ''மகனீ'' மகுதூம், துபாஷ், கவுஸ், ஆர். பி. மல்லாரி, ஜேயெம். சீதக்காதி, ''மஹதீ'' ''ஜமீலா,'' எம். ஏ.''

சிறுகதைத் துறையிலே இன்னும் சிறந்த பல முஸ்லிம் எழுத்தாளர்கள் இருக்கிறுர்கள் என்பதை உணர்கிறோம். அவர்களின் அனுமதி பெற்று, அவர் தம் சிறந்த சிறுகதைகளை இரண்டாவது வரிசையிலே இடம் பெறச் செய்கிறோம்.

இவ்வரிசையில் முதல் கதையாக ஆசிரியரின், ''காகிதக் கப்பல்'' என்ற சிறுகதை பிரசுரமாகிறது. முதன் முதல் இது திரு. அரு. ராமநாதன் அவர்களின் ''காதல்'' பத்திரிகையில் வெளியாயிற்று. மீண்டும் இக்கதையைப் பயன் படுத்திக் கொள்ள அனுமதி தந்த அரு. ராமநாதன் அவர்களுக்கு நம் நன்றி உரித்தாகிறது.

காகிதக் கப்பல்

ஏ. எம். மீரான்

❋

''ஜமீலா......!'' என்று நீட்டி முழக்கி ராகத்தோடு அழைத்துக் கொண்டே வீட்டுக்குள் நுழைந்தான் கமால். கணவனின் குரலைக் கேட்டுத் துள்ளி யெழுந்து வாசலுக்கு ஓடிவந்தாள் ஜமீலா.

''என்ன ஜமீலா இது? பேராசிரியர் கவிதையா? ஒரேயடியா மூழ்கிட்டே போலிருக்கே!'' என்று கேட்டுக் கொண்டே அன்பொழுக அவள் கரங்களைப் பற்றினுன் கமால்.

''படிக்கப் படிக்கத் தெவிட்டலை. படிச்சுக்கிட்டே யிருக்கிறேன்.''

''எங்கே; எனக்கு ஒரு பாடலைப் படிச்சுக்காட்டு பார்க்கலாம்.''

''முதல்லே உங்கள் வேஷத்தையெல்லாம் கலைச்சுட்டு வாங்க. காபி சாப்பிட்டுட்டு சாவதானமாகப் படிக்கலாம்!'' என்று சொல்லிவிட்டு அடுப்பங்கரைக்குச் சென்று விட்டாள் ஜமீலா.

கமால் முகத்தை யெல்லாம் அலம்பிக்கொண்டு தன் அறையில் வந்து நின்று கொண்டிருந்தான். சிறிது நேரத்தில் காபியுடன் வந்த ஜமீலா கலர் லுங்கியைக் கட்டிக்கொண்டிருந்த கமாலைக் கண்டதும் சிரித்து விட்டாள்.

''என்ன ஜமீலா சிரிக்கிறே?'' என்று புரியாமல் கேட்டான் அவன்.

''இதெல்லாம் என்ன கோலம்? சிங்கப்பூர்க் கப்பலிலிருந்து இப்பதான் இறங்கிவந்த மாதிரியில்ல இருக்குது?'' என்று சிரித்துக்கொண்டே சொன்னுள் ஜமீலா.

''ஏன் உனக்குப் பிடிக்கலையா? மதராஸுக்கு வந்த பிறகு தானே கூட்டும் கோட்டுப் போடப் படிச்சிக்கிட்டோம். ஊரிலிருக்கும்போது அசல் கம்பாயம் தானே! நீ கூட என்னவாம்? சுங்குடிச் சேலை ஒண்ணைக் கட்டிக்கிட்டு புறங்கையை மறைக்கும்படி சட்டை ஒண்ணையும் போட்டுக்கிட்டு 'ஙொய்' யிண்ணு இருப்பே. இப்ப நீ வந்து என்னைக் கேலி செய்யவந்துட்டியாக்கும்?' என்று விஷமமாகச் சிரித்துக்கொண்டே சொன்னுன் கமால்.

''ஆமா. ஆரம்பிச்சாச்சு சண்டலை. என்னமோ நல்லதுக்குச் சொன்னு—'' —சிணுங்க ஆரம்பித்து விட்டாள் ஜமீலா.

''பாத்தியா, பாத்தியா. அழத் தொடங்கிட்டியே? இந்தா பார்—— பார்க்கமாட்டே. சரி நானும் இந்தப் பக்கம் திரும்பிக்கிறேன். இப்படியே இருப்போம்'' என்று சொல்லிவிட்டு மறு புறம் திரும்பியிருந்து கொண்டான் கமால்.

கணவனின் சிறு குழந்தை விளையாட்டைக் கண்டதும் ஜமீலாவுக்குச் சிரிப்பு வந்து விட்டது; இருந்தாலும் தன் பிடியை விட்டுக் கொடுக்காமலே ''அப்படியேயிருந்தா காபி ஆறிப் போகும், குடிச்சிட்டு வேணும்னு மூஞ்சியைத் தூக்கிக்கிட்டு இருங்க'' என்றுள்.

''முடியாது. குடிக்க முடியாது. நீ சிரிச்சாத்தான் காபியைக் குடிப்பேன்'' என்று சொல்லிவிட்டு வெடுக்கென்று அவள் கையைப்பிடித்துக்கொண்டான்.

''சே! என்ன இது சமயா சந்தர்ப்பம் தெரியாம! வேலைக்காரப் பெண் வந்துட்டுண்ணு என்ன ஆகிறது? எப்பவும் பச்சைக் குழந்தை மாதிரிதான்'' என்று வெட்கத்துடன் சொன்னுள் ஜமீலா.

"பச்சைக் குழந்தை தானே! அப்படியானால் வேலைக்காரப் பெண் தப்பாக நினைக்காது" என்று சொல்லிக்கொண்டே அவள் கையைப் பிடித்துத் தன் கையில் வைத்துக் கொண்டான் ஆவலோடு. ஜமீலா தன்னை மறந்து ஆனந்தக் கிளு கிளுப்பில் சொக்கி நின்றாள்.

"ஜமீலா! அம்மாவும் அக்காவும் பிள்ளை பிள்ளைன்னு அடிச்சிக்கிறாங்களே; அப்படி நமக்கு ஒரு பிள்ளை இருந்தானா நாம் இவ்வளவு சுதந்திரமாக, உல்லாசமாயிருக்க முடியுமா? உன்னுடன் தான் இப்படி அடிக்கடி வம்பிழுத்துக் கொண்டிருக்க முடியுமா?" என்று தாபத்துடன் கேட்டான் கமால். ஜமீலாவினால் ஒன்றுமே பேச முடியவில்லை. கணவனின் அன்புப் பிடியில் அவள் ஊமையாகி விட்டாள்.

"என்ன ஜமீலா பேசவே மாட்டேங்கிறே?" என்று கேட்டான். இப்போதும் பேசாமலே நின்று கொண்டிருந்தாள் ஜமீலா.

"அவங்களுக்குப் பயப்படுறே இல்லியா? நாளை தான் இதை ஒரு முடிவுக்குக் கொண்டுவரப் போறேன். அவங்க ரெண்டு பேரு முன்னாலேயும் கண்டிப்பாய்ச் சொல்லிடப் போறேன்" என்று உணர்ச்சி வசப்பட்டுப் பேசினான் அவன்.

"என்ன, நாளை பேசப் போறீங்களா? அப்படியானா நாளை அக்காவும் மாமியும் வரப் போறாங்களா என்ன?" என்று பதறியபடி கேட்டாள் ஜமீலா. அவள் முகம் பேயறைந்தது போலாகி விட்டது.

"ஆமா. லெட்டர் எழுதியிருக்காங்க?" என்று வெறுப்புத் தொனிக்கக் கூறிவிட்டுத் தரையைப் பார்த்துக் கொண்டிருந்தான் கமால். ஜமீலாவும் அதிர்ந்துபோய் நின்று கொண்டிருந்தாள்.

கல கலவென்றிருந்த வீடு, நாளை முதல் போர்க்களம் போலக் காட்சியளிக்கப் போகிறது என்று எண்ணிய கமாலுக்கு உடலெல்லாம் என்னவோ செய்தது. தன்னந்தனியளாக ஜமீலா திண்டாடுவாளே என்று அவன் மனம் துடித்தது. மூன்று வருடங்களாக அவர்கள் கண்களில் படாமல் மறைத்து வைத்துவிட்டான். ஆனால் இப்போது அவர்களே நேரில் வரும்போது?

தம்பதிகளிடையே மௌனம் நிலவியது. இருவரும் இரு கோணங்களில் சிந்தித்துக் கொண்டிருந்தார்கள்.

காமலின் எண்ணத் திரையிலே கடந்துவிட்ட மூன்றாண்டு நிகழ்ச்சிகள் ஒன்றன்பின் ஒன்றாக மின்னி மறைந்தன.

பி. ஏ. பரீட்சை எழுதி முடித்துவிட்டு விடுமுறையைக் கழிக்க அக்கா ஊருக்குச் சென்றிருந்தானே, அந்தக் கோடை காலம் அவன் வாழ்வில் வசந்தகாலம் தான். அவன் வாழ்க்கையின் புதிய சகாப்தமே அப்போது தான் ஆரம்பமாயிற்று என்று கூடச் சொல்லலாம். அக்கா கதீஜா, தம்பியைக் கண்டதும் தடபுடலாக வரவேற்று, விருந்து அது இது என்று கமாலை உச்சி குளிரச் செய்து கொண்டிருந்தாள். அவனுடைய பொழுது கழிய கதீஜாவின் வாண்டுக் குழந்தைகளே போதும்போலிருந்தது. கமாலுக்குக் குழந்தைகளென்றால் போதும்; அவனும் ஒரு குழந்தையாகி விடுவான்.

இப்படிப்பட்ட கோலாகலமான இன்ப நாள் ஒன்றில்...

மாலை மயங்கிக்கொண்டு வந்தது. அக்காவீட்டு முற்றத்தில் அவள் குழந்தைகளுடன் கமால் விளையாடிக் கொண்டிருந்தான். கால்பந்து ஒன்றைப்போட்டு மாமனும் மருமக்களுமாக உதைத்துத் தள்ளிக் கொண்டிருந்தார்கள். அடுத்த வீட்டைப் பிரிக்கும் சுவர் ஒரு "கட்டமண்" ரூபத்தில் நின்று கொண்டிருந்ததால் வாண்டு மருமகன் அப்துல்லாவுக்கு அதிகச் சிரமமாகி விட்டது. அந்தக் குட்டிச் சுவரைத் தாண்டிப் பக்கத்து வீட்டுக்குள் அடிக்கடி விழுந்து கொண்டிருந்த பந்தை எடுத்துக்கொண்டு வருவது அவனுடைய முக்கிய வேலையாகி விட்டது.

கமாலுக்கு விளையாட்டில் ஜோர் கிளம்பி விட்டதுபோலிருக்கிறது; தன் முழு பலத்தையும் கொண்டு பந்தை உதைத்தான். அது பக்கத்து வீட்டுக் குட்டிச் சுவரையும் தாண்டிக்கொண்டு விர்ரென்று சென்று விட்டது. பந்து 'தொப்'பென்று விழுந்த சப்தத்தை அடித்து மடக்கிக்கொண்டு இன்னொரு சப்தம் கேட்டது. இதைக் கேட்டதும் கமாலின் இதயம் ஒரு கணம் நின்று விட்டது போலிருந்தது. ஓடிப்போய்க் குட்டிச் சுவரினருகில் நின்றுகொண்டு அடுத்த வீட்டு முற்றத்தைப் பார்த்தான். அங்கு ஓர் இளம் பெண் குனிந்து, உடைந்த வயல்களைப் பொறுக்கிக் கொண்டிருந்தாள். கமால் வந்த சந்தடியைக் கேட்டதும் 'வெடுக்'கென்று ஏறிட்டுப் பார்த்தாள். அவ்வளவுதான்; அவள் முகமெல்லாம் குங்குமம் போல் சிவந்து விட்டது. கண்ணிமைக்கும் நேரத்துக்குள் அவள் 'விருட்'டென்று வீட்டுக்குள் சென்று மறைந்துவிட்டாள். கமால் ஆடாமல் அசையாமல் அப்படியே நின்று கொண்டிருந்தான். அவள்--அந்த அழகுப் பொக்கிஷம்-இருந்தஇடத்தில்கண்ணாடி வளையல்கள் நொறுங்கிக் கிடந்தன. சிறிது அருகில் கால்பந்து ஆதரவற்றுக் கிடந்தது; கண நேரத்தில் நடந்த இந்தச் சம்பவம் கமாலை என்னென்னவெல்லாமோ செய்து விட்டது.

"நான் அப்பவே சொன்னேன்-நிக்காதே, பந்து மேலே வந்து விழுமென்று. கேட்டால்தானே? விளையாட்டைப் பார்த்த ஜோர்லே போச்சு எல்லா வளையலும்" என்று சொல்லிக் கொண்டே பந்தை எடுக்க மண்ணேறிப் பாய்ந்தான் அப்துல்லா. அவள் ரொம்ப நேரமாக நின்று கொண்டிருக்திருக்கிறாளென்று இப்போது தான் கமாலுக்குப் புரிந்தது. பந்து விளையாட்டை அப்படியே மறந்து விட்டு வீட்டை விட்டு வெளியேறினான்.

கதீஜா காபியைப் போட்டுவைத்துக் கொண்டு தம்பியைத்தேடி முற்றத்துக்கு வந்தாள். அவள் அருமைச் செல்வங்கள் நடந்தவற்றை ஒன்று விடாமல் ஒப்புவித்து விட்டார்கள். அவ்வளவுதான். கதீஜாவுக்கு ஆத்திரம் பொங்கிக்கொண்டு வந்தது.

"கொஞ்சமாவது அடக்கமிருந்தால் தானே? கை நிமிர்ந்த ஆண்பிள்ளை இருக்கானேன்னு நெஞ்சிலே பயமிருந்தாத்தானே!" என்று பொரிந்து தட்டிக் கொண்டிருந்தாள்.

கடைத்தெருவுக்குச் சென்று கொண்டிருந்த கமாலுக்கு வழியெல்லாம் ஒரே சிந்தனை. அவன் எண்ணமெல்லாம் பக்கத்து வீட்டுப் பெண்ணைப் பற்றித் தான். இப்படியும் ஓர் அழகி யிருப்பாளா என்று எண்ணியெண்ணி வியந்துகொண்டே நடந்து சென்றான்.

வளையல் கடைக்குள் சென்று அடுக்கி வைக்கப்பட்டிருந்த அழகழகான வளையல்களையெல்லாம் நோட்டமிட்டான்; அவள் கையின் அளவு தெரியாதே என்று அவன் மலைக்கவில்லை. மனசுக்குப் பிடித்தவளாயிருந்தால்—அவளைக் கணநேரம் பார்த்தால் கூட அவளுக்கு இந்த அளவுதான் பொருத்தமாயிருக்கும் என்று தெரியாதா என்ன?

போட்டோ கல்வி

தெரியுமா?

மூன்றே மாதங்களில் தபால் மூலமாக உங்கள் இடத்தில் இருந்துகொண்டே எமது தமிழ்ப் பாடங்களைப் படித்து ஓர் சிறந்த காமரா நிபுணராகலாம்.

விபரங்களுக்கு 2 அணா ஸ்டாம்புடன் எழுதுக.

Manager,

Veksam Photographic Dept.

No. 60, West Tower Street,

P. B. No. 89 MADURAI (S. I)

பொறுமை

நபிகள் பிரான் கூறினார்கள் :

இருவர் தவிர மற்றெவர் மீதும் பொறாமை கொள்ளக்கூடாது :

எவனொருவன் இறைவனின் அருளால் குர்ஆனைக் கற்றிருக்கின்றானோ அவன் பொறாமைப்படத் தக்கவன். அத்தகைய மனிதன் இரவு பகலாக இறைவனின் திருவேதத்தை ஓதுபவன். அவன் ஓதுவதைக் கேட்கும் அண்டை வீட்டுக்காரன், "எனக்கும் அ(வ்வேதத்)தில் இம்மனிதனுக்கு இருக்கும் அளவுக்கு ஈடுபாடு இருந்தால், அவனைப் போலவே நற்செய்கைகளைச் செய்வேனே!" என்று சொல்வான்.

எவனொருவன் இறையருளால் செல்வமுள்ளவனாக இருந்து, தன் செல்வத்தை ஆண்டவனின் வழியால் செலவழிக்கின்றானோ அவனும் பொறாமைப் படத் தக்கவன். அத்தகைய மனிதனைப் பார்த்து, மற்றவன், "எனக்கும் இம்மனிதனைப்போல் பணமிருந்தால், அவன் செய்வதைப் போல நல்ல வழியில் செலவழிப்பேனே" என்று சொல்வான்.

[மிஷ்காத் ஷரீப்]

ஸ்டாண்டில் மாட்டப் பட்டிருந்த குறிப்பிட்ட அளவு வளையல்களை கடைக்காரன் சொன்ன விலைகொடுத்து வாங்கினான். அது கண்ணாடி வளையல் தானென்றாலும் அவளுக்குப் பொருத்தமாயிருக்கும் என்று பட்டது; வாங்கி விட்டான்!

வீட்டுக்குள் நுழைவதற்குமுன் காலைச் சுற்றிக்கொண்டு வந்த அக்காள் குழந்தைகளை விலக்கிக்கொண்டு அக்காவிடம் சென்றான். அவள் இவனைக் கண்டதும் வசைபுராணத்தை ஆரம்பிக்கப் பார்த்தாள். ஆனால் கமால் முந்திக் கொண்டான்.

"அக்கா. இதைக்கொண்டுபோய்ப் பக்கத்து வீட்டுப் பெண்ணிடம் கொடுத்துவிட்டு வா" என்றான்.

"ஏன்? அவள் செய்த குற்றத்துக்கு நீயா அபராதம் கொடுக்கணும்?,' என்று வரிந்து கட்டிக்கொண்டு பேசி கதீஜா.

"என்னது? அவள் குற்றம் செய்தாளா?" என்று திகைத்துப் போய்க் கேட்டான் கமால்.

"அவள் மட்டும் செய்யலே. அவளைப் பெற்று வளர்த்தவங்களும் சேர்ந்து செய்த தப்பு. கை நிமிர்ந்த பெண் இருக்குங்கிற எண்ணமிருந்தா அந்தக் கட்ட மண்ணை உயர்த்தியிருக்க மாட்டாங்க? அது தான் போகட்டும். அந்த மூதிக்குத்தான் உணர்வு இருந்துதா? கட்ட மண்ணை எட்டிப் பார்க்கிறதுன்னா என்ன துணிச்சல் இருக்கணும்?" என்று பொரிந்து தட்டினாள் கதீஜா.

கமால் ஒன்றும் பேசாமல் நின்று கொண்டிருந்தான். கதீஜாவின் முரட்டு பேச்சு நின்ற பாடாயில்லை. கமாலுக்கே பொறுமை யிழந்து விட்டது. "அக்கா. அது நான் செய்த தப்பு. உன்னாலே இந்த வளையலைக் கொடுக்க முடியுமா, முடியாதா?" என்று தீர்க்கமாகக் கேட்டான்.

"கொடுக்கலைன்னா தலையை வாங்கிடுவியோ? இப்போ இதைக் கொண்டுக் கொடுத்தா நாளையே அந்த மூதியை உன் தலையிலே வைச்சுக் கட்டிடு வாங்க" என்றாள் கதீஜா.

"அடடே! அப்படிக் கூட செய்துடு வாங்களா என்ன? அப்படின்னா இப்பவே கொண்டு கொடு அக்கா" என்று சிரித்துக்கொண்டே சொன்னான் கமால்.

கதீஜாவின் கோபம் இன்னும் அதிகமாகிவிட்டது. கண்மண் தெரியாமல் பேசிக்கொண்டிருந்தாள். கமாலும் உணர்ச்சியை அடக்க முடியாதவனாக, "அக்கா, உன்னால் முடியலைன்னா சொல்லிடு. எதற்காக, பாவம் அந்தப் பெண்ணைத் திட்டுறே. இந்தா பார், அவளைக் கல்யாணம் செய்து இந்த வளையல்களை உன் கண் முன்னாலேயே போடுறேன் பார்" என்று சொல்லி விட்டு, பெட்டி படுக்கைகளைத் தூக்கிக்கொண்டு ஊருக்கு நடையைக் கட்டி விட்டான்.

இதன் பிறகு நான்கு மாதங்கள் ஓடி மறைந்து விட்டன. கமாலின் அதிர்ஷ்டம் பரீட்சை பாஸ்செய்த மறுமாதமே சென்னையில் சர்க்கார் உத்தியோகம் ஒன்று கிடைத்து விட்டது கை நிறையச் சம்பளம் வாங்கக் கூடிய உயர்ந்த உத்தியோகம்.

அக்கா வீட்டின் பக்கத்து வீட்டுப் பெண் மட்டும் இத்தனை மாதங்களாக ஒரு கணங்கூட அவன் இதயத்தை விட்டு நீங்காமல் நிலை கொண்டிருந்தாள். அம்மாவிடம் சாமர்த்தியமாகப் பேசித் திருமணத்துக்கு ஏற்பாடு செய்து விட்டான். அக்கா கதீஜா தன்னால் ஆனமட்டும் எதிர்த்துப் பார்த்தாள். கமால் தன் பிடியைத் தளர்த்திக் கொள்பவனாகத் தெரியவில்லை. அவனுடைய திருமணத்தன்று ஏதோ நேர்ச்சை செலுத்த வேண்டுமென்று கூறிவிட்டு குழந்தைகளுடன் பொட்டல் புதூர் தர்காவுக்குச் சென்று விட்டாள் கதீஜா. அவள் கணவர் ஒருவாயில்லாப் பூச்சி; மூச்சுப் பேச்சுக்காட்டாமல் மனைவியைத் தொடர்ந்து சென்றார்.

ஆயிற்று. திருமணம் முடிந்ததும் ஆசை ஜமீலாவை அழைத்துக்கொண்டு "பாடு பார்க்கும்" ஊருக்குச் சென்று விட்டான். அம்மாவையும் உடனழைத்துக் கொள்ள, விரும்பினான். ஊரிலுள்ள நில புலன்களைப் பார்த்துக் கொண்டு சொந்த மண்ணிலேயே கண்ணை மூடிவிட விரும்பினாள் அந்தக் கிழவி.

ஜமீலாவைக் கைப்பிடித்து வருடங்கள் இரண்டு கடந்து விட்டன. இதற்கிடையே எத்தனையோ மாறுதல்கள். அக்காள் கதீஜா, அடிக்கடி தாயை வந்து பார்த்துக் கொண்டிருந்தாள். தம்பி கமாலின் மீதிருந்த கோபமெல்லாம் தணிந்து விட்டது போலிருந்தது.



அவள் அவனுக்கு எழுதிய கடிதங்களில் உள்ள வாசகங்கள் இதை எடுத்துக் காட்டின. ஆனால் ஜமீலாவைப் பற்றி ஒரு வரிகூட எழுதமாட்டாள். அவள் மீது உள்ள வெறுப்பு மட்டும் நீங்காமலிருந்தது. ஜமீலா மட்டும் கதீஜாவினருகிலிருந்திருப்பாளானால் தன் வசைமொழிகளினாலே அவளைக்கொன்றிருப்பாள்; அவ்வளவு ஆத்திரம் பேதை ஜமீலா மீது. அவளைப் பழி வாங்கச் சரியான பிடியொன்று கதீஜாவுக்குக் கிடைத்து விட்டது. தம்பிக்கு மணமாகி இரண்டாண்டுகளாகியும் குழந்தை பிறக்காமலிருப்பது அவளுக்குச் சந்தோஷமாய்த் தானிருந்தது. தாயிடம் தூபம் போட்டாள். 'கண்ணை மூடும் வயதில் மகன் வயிற்றுப் பிள்ளையை அவள் பார்க்காமல் செல்ல வேண்டி வருகிறதே' என்று தனக்குத் தானே தாய்க்குத் தெரியும்படி அடிக்கடி நொந்து கொண்டாள்! கிழவிக்கு இது ஒரு பெரிய ஆற்றாமையாகி விட்டது. தன் கடைசிகால ஆசையைக் கடிதங்கள் மூலம் தெரிவித்துக் கொண்டேயிருந்தாள். அக்காளும் தன் தம்பியின் நலனை நாடுவது போல 'ஜமீலாவு மிருக்கட்டும். குழந்தைக்காக இன்னொரு மணம் செய்து கொள்' என்று பொடி வைத்துக் கடிதங்கள் எழுதினாள். இப்படி ஒரு வருடமாக தாயும் மகளும் எழுதிய கடிதங்களுக்கெல்லாம் மழுப்பலாகவே பதிலெழுதிக் கொண்டிருந்த கமாலைச் சரிப்படுத்த, ஒரு பெரிய ஏற்பாட்டை முடித்துக்கொண்டு அவனைக் காணச் சென்னைக்கே வருவதாகத் தெரிவித்திருந்தார்கள் தாயும் மகளும்.

விடிந்தால் அம்மாவும் அக்காவும் அவளுடைய அரை டஜன் குழந்தைகளும் கூடாரம் அடிக்கப் போகிறார்கள். அத்தனை கூட்டமும் கும்மாளமடித்துவிட்டுச் சென்றால் போதுமே; ஜமீலாவின் மென்மையான குழந்தை உள்ளத்தை வாட்டி வதக்கிவிடக் கூடாதே யென்று பயந்து கொண்டிருந்தான் கமால்.

காபி டம்ளர் தடாலென்று மேஜையிலிருந்து விழுந்தபோது தான் இருவருக்கும் உணர்வு வந்தது. திடுக்கிட்டுப் போய்க் கீழே குனிந்து பார்த்தார்கள். டம்ளரைக் கையிலெடுத்துக் கொண்டே "பார்த்தீங்களா? காபி ஆறிப்போனது மட்டுமில்லே. கொட்டியும் போச்சு" என்றாள் ஜமீலா.

கமால் திகைத்துப்போய் மணியைப் பார்த்தான்; ஏழரையாகி விட்டது.

"காலையில் நாலரை மணிக்கு அலாரம் வைச்சுடறேன். நீங்க ஸ்டேஷனுக்குப் போங்க" என்றாள் ஜமீலா.

கமாலின் உள்ளம் ஜமீலாவின் கள்ளமில்லாத பிஞ்சு நெஞ்சை எண்ணி வியந்து கொண்டேயிருந்தது. 'பாவம்; நாளை வருபவர்கள் இவள் வாழ்வையே பாழ்படுத்தும் ஒரு திட்டத்துடன் வந்தால் ஜமீலாவின் உள்ளம் என்ன பாடுபடும்...? சரி...என்ன வந்தாலும் சிறிதும் அசைந்து கொடுக்கக் கூடாது' என்று முடிவு செய்து கொண்டான்.

சிறிது நேரத்தில் சாப்பிட அழைத்தாள் அவன் அன்பு மனைவி.

படுக்கையில் புரண்டு புரண்டு படுத்துக் கொண்டிருந்தாள் ஜமீலா. கமாலைப் போலவே அவளும் சென்று மறைந்து விட்ட மூன்றாண்டுகளையே எண்ணி யெண்ணிப் பலவாறாகச் சிந்தித்துக் கொண்டிருந்தாள். கமாலின் அன்பு ஒன்றினால் தான் அவள் அத்தனை எதிர்ப்புக்கும் கடுஞ் சொற்களுக்கும் மத்தியில் கவலையின்றிக் கழிக்கிறாள். நாளையிலிருந்து சோதனை ஆரம்பமாகப் போகிறது. இப்போதுதான் பொறுமையோடிருக்க வேண்டும் என்று முடிவு செய்து கொண்டாள். தன்னால் என்று ஒரு தவறு கூட வரக் கூடாது என்று கங்கணங் கட்டிக் கொண்டாள்.

ஜமீலாவைப் போலவே கமாலும் தூக்கம் பிடிக்காமல் 'வெட் வெட்' டென்று விழித்துக்கொண்டு கிடந்தான். அன்பு ஜமீலாவின் நிலைமை நாளை எப்படி யிருக்குமோ என்பதைப் பற்றித்தான் அவன் சிந்தனை யெல்லாம். "நாளை என்று ஒன்று இல்லாவிட்டால் என்ன? இந்த இரவு இப்படியே நீடித்து நான்கு நாட்களுக்குப் பிறகு விடிந்தால் என்ன?"—ஜமீலாவின் மீது கொண்டுள்ள அவனுடைய கொள்ளை அன்பு! இப்படி யெல்லாம் அற்புதமான கற்பனைகளைச் செய்யத் தூண்டியது போலும்!

வளர்ந்து கொண்டிருந்த நேரம் கமாலையும் ஜமீலாவையும் தூக்கத்திலாழ்த்தியும் விட்டது. ஜமீலாவின் முன்னேற்பாட்டின்படி காலையில் நாலரை மணிக்கெல்லாம் அலாரம் அலறியது. பதறியடித்துக்கொண்டு எழுந்தான் கமால். அவனுக்கு முன்னாலேயே ஜமீலா எழுந்து கண்ணைக் கசக்கிக் கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

முகத்தை அலம்பிவிட்டு உடைகளை உடுத்திக் கொண்டிருந்தான் கமால். இதற்குள் ஜமீலா, சுடச் சுட காபியை கொண்டுவந்து கொடுத்தாள் மடக் மடக்கென்று குடித்துவிட்டு வெளியே செல்ல தயாரானான். ஜமீலா எதையோ நினைத்துக் கொண்டவளைப் போல அவனை நிற்கச் சொல்லிவிட்டுப் பக்கத்து அறைக்குள் ஓடினாள். சிறிது நேரத்தில் கையில் ஒரு டம்ளருடன் வெளியே வந்தாள்.

"இதெல்லாம் எதற்கு ஜமீலா?" என்று புரியாமல் கேட்டான் கமால்.

ஜமீலா அந்த டம்ளரைத் தானே தன் கணவனின் கழுத்தைச் சுற்றிக் கட்டிவிட்டு, "ஆமா—இப்போ ஏன் எதற்குன்னு கேப்பீங்க. நாளை லேசா ஜுரம் வந்துட்டாக் கூட ஐயோ அப்பான்னு சிறு குழந்தைமாதிரி என் உசிரை வாங்குவீங்க" என்றாள்.

இதைக்கேட்டதும் கடகட வென்று சிரித்து விட்டான் கமால். "ஜமீலா! நீ வர வரப் பெரிய மனுஷியாகிக்கிட்டே வர்றே. நான் உன் முன்னாலே சிறு குழந்தையா மாறிக்கிட்டே வர்றேன்" என்று சிரித்துக்கொண்டே அவள் தாடியைப் பிடித்து ஏந்தினான். ஜமீலாவை வெட்கம் பிடுங்கித் தின்றது.

"ஐயோ போதுமே, உங்க கிண்டல். சீக்கிரம் போங்க. ரயில் வந்துடப் போவுது. அப்புறம் அவுங்க வந்து திண்டாடாமெ" என்று வேறு பக்கம் திரும்பிக்கொண்டே சொல்லிவிட்டுப் படுக்கையைச் சுற்றிவைக்கச் சென்று விட்டாள்.

அடுப்பில் இரண்டு அண்டாக்களில் வெந்நீரைப் போட்டுவிட்டு வீட்டையெல்லாம் சுத்தமாகப் பெருக்கினாள் அழுக்குத் துணி யெல்லாம் ஒரு மூட்டையாகக் கட்டிப் போட்டாள். 'மனசுக்குப் பிடிக்காத பெண்டாட்டி தும்மினாலும் தப்பு' என்ற பொதுவான கொள்கைப்படி, வருபவர்களும் நினைத்து விடக் கூடாதே யென்று தான் ஒவ்வொன்றையும் கவனமாகப் பார்த்தாள்.

வாசலில் மோட்டார் சப்தம் கேட்டது. தலையில் முக்காட்டைப் போட்டுக்கொண்டு தலைவாசல் கதவருகில் சென்று அடக்க ஒடுக்கமாக நின்றாள் ஜமீலா. மாமியார், நாத்தனார், அவள் குழந்தைப் பட்டாளம், அவள் கணவன் எல்லோரும் இரண்டு டாக்ஸிகளை அமர்த்திக்கொண்டு வந்து இறங்கினார்கள். வந்தவர்களை மிக மரியாதையாக "வாங்க மாமி" "வாங்க மதினி" என்று வாய் நிறைய வரவேற்றாள். கதீஜா ஒப்புக்காகத் தலையை ஆட்டிவிட்டு வீட்டுக்குள் சென்று விட்டாள். அவள் இடுப்பிலிருந்த அவளுடைய கடைசிக் குழந்தை ஜமீலாவைக் கவர்ந்துவிட்டது. ஓடிப்போய் வாங்கிக்கொண்டாள். மற்றக் குழந்தைகளெல்லாம் 'மாமி' 'மாமி' என்று அவள் காலைக் கட்டிக் கொண்டு நின்றன.

ஜமீலாவின் மீது அம்மாவும் அக்காவும் ஏதாவது தவறாகப்புள்ளி போட்டு விடக் கூடாதே யென்று, அவளுக்கு ஒத்தாசை செய்து கொண்டிருந்தான் கமால். ஜமீலா சிற்றுண்டி தயாரிப்பதில் மும்முரமாக ஈடுபட்டிருந்தாள். அடுப்பங்கரையில் அமர்க்களப் படுத்திக் கொண்டிருந்த குழந்தைகளை அதட்டாமல் பொறுமையாக வேலை செய்து கொண்டேயிருந்தாள்.

குளித்துவிட்டுத் தலையைக் கோதிக் கொண்டே வந்த கதீஜா, தாயிடம் பேசிக் கொண்டிருந்தாள். ஜமீலாவுக்கும் கமாலுக்கும் கேட்கும்படி உரக்கவே பேசினாள்.

"பெண்டாட்டி ஆட்டிவைச்சபடி ஆடறவன் நம்மை பேச்சை எங்கே அம்மா கேட்கப் போறான்? பாரேன். அவன் ஒரு ஆம்பிளைங்கிறதையும் மறந்து ஓடி ஓடி வேலை செய்றானே" என்றாள்.

கமாலுக்கு ஆத்திரம் பொத்துக் கொண்டு வந்தது. அக்காள் வசை மொழியை ஆரம்பித்தாளானால் அதனால் தாக்கப்படுபவர்கள் மனமொடிந்து ஓடும்வரை விடமாட்டாள் என்பது அவனுக்கு நன்ருகத் தெரியும். ஏதேதோ வேறு விஷயங்களைப் பேசி மழுப்பிவிட்டான். கதீஜா சொன்ன வார்த்தைகளை ஜமீலாவும் கவனிக்காமலில்லை. என்றுமில்லாமல் இன்று மட்டும் ஏன் கமால் அப்படி நாலு வேலைகளையும் இழுத்துப் போட்டுக்கொண்டு செய்ய வேண்டுமென்று தான் அவளுக்குப்புரியவில்லை. கமாலின்மீது அவளுக்கு கோபம் கோபமாக வந்தது.

ஒரு மாதிரியாகச் சாப்பாட்டுக் கடையை முடித்துக் கொண்டார்கள் எல்லோரும். கமால் ஆபீஸுக்குக் கிளம்பி விட்டான். ஜமீலா எல்லா எல்லா வேலைகளையும் முடித்துக் கொண்டு, குளிக்கும் அறையில் கதீஜா நனைத்து வைத்திருந்த புடவையைத் துவைத்து உலர்த்தினுள். இதை ஜாடையாகக் கவனித்த கதீஜா ஒன்றும் சொல்லாமல் வேறு பக்கம் திரும்பிக்கொண்டாள்.

கதீஜாவிடம் "மதினி! உங்க தம்பியைச் சீக்கிரம் வரச்சொல்லியிருக்கிறேன். எல்லாருமாகக் கடற்கரைக்குப் போகலாம்" என்று பவ்யமாகக் கூறினுள் ஜமீலா. இதற்குப் ஒன்றும் பேசாமலிருந்து விட்டாள் கதீஜா. அடம் பண்ணிக் கொண்டிருந்த அவளுடைய கைக்குழந்தையை தொட்டிலில் போட்டுத் தாலாட்டினுள் ஜமீலா. எல்லாக் குழந்தைகளுக்கும் நீராட்டி விட்டாள். இப்படியாக விருந்தினர்களை உபசரிப்பதிலேயே கண்ணுங் கருத்துமாய் இருந்தாள்.

மாலை நாலு மணிக்கெல்லாம் இரண்டு டாக்ஸிகளுடன் வந்தான் கமால். வீட்டில் அடைந்து கிடந்த 'படைகளை'த் திரட்டிக்கொண்டு மெரினு பீச்சை நோக்கிப் புறப்பட்டது கார்.

ஜமீலா குழந்தைகளுடன் கடல் மணலில் சிறு குழந்தைபோல விளையாடிக் கொண்டிருந்தாள். கமாலும் கதீஜாவும் தாயின் அருகில் ஓர் இடத்தில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். கதீஜா எதை எதையோ பேசிக் கொண்டிருந்தாள். கிழவி தன் மகளின் வாயையே பார்த்துக்கொண்டிருந்தாள். மகளின் பேச்சு எப்போது விஷயத்துக்கு வருகிறதோ என்று ஆவலோடு கவனித்துக் கொண்டேயிருந்தாள். ஆனல் என்ன ஏமாற்றம்! இவர்கள் முடிவு செய்த விஷயத்தைப் பற்றி அவள் கமாலிடம் ஒரு வார்த்தை கூடச் சொல்லாமலே நேரத்தை வளர்த்திக் கொண்டிருந்தாள்.

இதற்குள் நன்ருக இருட்டி விட்டது. எல்லோருமாக நடையைக் கட்டினார்கள். கடைத் தெருவுக்குள் சென்றதும் ஜமீலா துணிக்கடைக்குள் புகுந்தாள். கமாலுக்கு ஒன்றும் புரியவில்லை. ஜமீலா கணவனைக் கூடக் கேட்காமல் எல்லாக் குழந்தைகளுக்கும் பட்டுத் துணியாக வாங்கிக் குவித்துக் கொண்டிருந்தாள். பில்லையும் நூற்றையும்பது ரூபாயையும் கணவனிடம் கொடுத்தாள். இயந்திரம் போல அவற்றை வாங்கிக் கடைக்காரனிடம் கொடுத்துவிட்டு கமால் ஒன்றும் பேசாமல் கடையை விட்டு வெளியே வந்தான். கதீஜா ஒன்றுமே சொல்லவில்லை.

ஜமீலாவும் கமாலும் இப்போது தான் தனியாகச் சந்தித்தார்கள். ஜமீலா துணி வாங்கிய அதிசயம் இன்னும் அவனை விட்டு அகலவில்லை.

"என்ன ஜமீலா; அப்படி நூற்றைம்பது ரூபாயைச் செலவழிச் நகை வாங்கணும்னு சேர்த்து வைச்சியே?" என்று கேட்டான்.

"குழந்தைகளுக்குத் தானே வாங்கினேம். நாளை பாருங்கள், அதுகளெல்லாம் எப்படி யிருக்கப்போகிறதென்று" என்று சிரித்துக்கொண்டே சொன்னுள் ஜமீலா.

காலையில் மழை பிடித்துக்கொண்டு கொட்கொட்டென்று கொட்டிக்கொண்டிருந்தது. ஜமீலா மட்டும் அடுப்பருகில் உட்கார்ந்து கொண்டிருந்தாள். அடுப்பங்கரைக்கு வெளியே மழையில் நனைந்து கொண்டு தண்ணீரில் காகிதக் கப்பல் விட்டுக் கொண்டிருந்த அப்துல்லாவை அதட்டிக்கொண்டே வந்த கதீஜா உள்ளே எட்டிப் பார்த்தாள்.

ஜமீலா புகைக்குள் கிடந்து அவதியுறுவது கண்டு அவள் மனம் நெகிழ்ந்து விட்டதோ என்னவோ; விறு விறுவென்று உள்ளே சென்று ஜமீலாவுக்கு உதவியாக அவளுடன் அமர்ந்து வேலைகளைச் செய்ய ஆரம்பித்தாள்.

திடீரென்று எழுந்து நின்ருள் ஜமீலா. அவள் விழிகளிரண்டும் நிலைகுத்துவதுபோல் நின்ற நிலையில் அப்படியே யிருந்தன. தொண்டையைப் பிடித்துக்கொண்டே விருட்டென்று வாசலுக்கு ஓடினுள். இதைக்கண்டு பயந்துவிட்ட கதீஜா ஓடிப்போய் அவளருகில் நின்று கொண்டாள். வாசலைப் பிடித்துக் கொண்டிருந்த ஜமீலா 'கொளக்'கென்று வாந்தியெடுத்து விட்டாள். அவளால் நிற்க முடியவில்லை. தலை சுற்றிக்கொண்டு வந்தது. இத்தனை காலத்துக்குப் பிறகு இப்போது தான் கதீஜா தன் தம்பி மனைவியைக் கரம்கொண்டு தொட்டிருக்கிருள். மீண்டும் ஒரு முறை வாந்தியெடுத்து விட்ட ஜமீலா மயக்கத்தோடு கதீஜாவின் தோளில் சாய்ந்து விட்டாள். கதீஜாவுக்கு நிலைமை புரிந்து விட்டது. ஜமீலாவை அணைத்தபடி வீட்டுக்குள் கூட்டிச் சென்ருள்.

கடைத் தெருவுக்குச் சென்று விட்டு அப்போதுதான் வீட்டுக்குள் நுழைந்துகொண்டிருந்த கமால், இதைக் கண்டதும் பதறி யடித்துக்கொண்டு ஓடி வந்தான். "என்ன? என்ன நடந்தது?" என்று நடுக்கத்தோடு கேட்டான். கதீஜா ஒன்றும் பேசாமல் ஜமீலாவைக் கட்டிலில் படுக்கவைத்தாள். கமாலின் துடிப்பு இன்னும் நிற்கவில்லை.

"பதருதே அப்பா உனக்கு ஒரு மகன் பிறக்கப் போருன்" என்று சொல்லி விட்டுக் குறும்பாக ஜமீலாவைப் பார்த்தாள் கதீஜா. சற்று உணர்வு வந்த ஜமீலா இதைக் கேட்டதும் வெட்கத்தோடு எழுந்திருக்க முயன்ருள். கதீஜா விட்டால் தானே! ஜமீலா ஓரக் கண்களால் கமாலைப் பார்த்தாள். அவன் குறும்புத் தனமாக தன்னைப் பார்த்துச் சிரிப்பதைக் கண்டதும் வெட்கத்தோடு தலையைக் குனிந்து கொண்டாள். கிழவி, பஞ்சடைந்த தன் கண்களால் இன்று தான் தன் மருமகளை ஆசையோடு பார்த்தாள்.

இதற்கிடையில் கதீஜா 'விருட்'டென்று அறையை விட்டு வெளியே சென்ருள். தன் டிரங்குப் பெட்டியைத் திறந்து ஒரு கத்தை மஞ்சள் காகிதத்தையை எடுத்துக்கொண்டு காகிதக்கப்பல் விட்டுக் கொண்டிருந்த தன் பிள்ளைகளிடம் சென்ருள். 'இந்தாங்கடா; இதையும் கப்பல் செய்து தண்ணீரிலே விடுங்க" என்று அவர்களிடம் கொடுத்தாள். இவற்றையெல்லாம் கவனித்தபடியே இருந்த கமால் வெளியே வந்து அந்த மஞ்சள் காகிதத்தில் ஒன்றை வாங்கிப் படித்தான். படித்து முடித்ததும் அவன் முகம் சினத்தால் மாறிவிட்டது. கோபத்தோடு "என்னக்கா இது?" என்று கேட்டான்.

"உனக்கு அடுத்தவாரம் கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்து கடுதாசியையும் அச்சடிச்சிக்கிட்டே வந்தோம். அதைத் தான் ஒரு நிமிஷத்திலே மாற்றிட்டானே உன் மகன்" என்ருள் கதீஜா.

'மகன்' என்று அவள் சொன்னதும் கமாலின் உடலில் இனம் புரியாத ஓர் இன்பக்குறுகுறுப்பு ஏற்பட்டுவிட்டது. விறுவிறுவென்று தன் அறைக்குள் சென்ருன். கதீஜா மீண்டும் ஜமீலாவினருகில் வந்து நின்ருள். இதற்குள் அங்கு வந்த கமால், "அக்கா இது என்ன வளையல் தெரியுமா? அன்று வாங்கினேனே கண்ணுடி வளையல்—அதுதான் நீ கொடுக்க மாட்டேன்னு சாதிச்சியே—அதே வளையல்தான்" என்று எதையோ பெரிய காரியத்தைச் சாதித்து விட்டவன் போல, ஜமீலாவின் கைகளில் அந்த வளையல்களை அணிந்து கொண்டிருந்தான். ஜமீலாவுக்கு வெட்கம் ஒரு புறம், மகிழ்ச்சி ஒருபுறம். தலையைக்குனிந்து கொண்டாள்.

"நீ தான் ஜெயிச்சே. என் கண்ணு இப்படிப்பட்ட தங்கக் கட்டினு எனக்கு தெரியாமப் போச்சு" என்று சொல்லிக்கொண்டே 'பிள்ளைத் தாச்சி' ஜமீலாவைக் குழந்தைபோல அணைத்துக் கொண்டாள் கதீஜா. ★

(Cover Block Courtesy by
KATHAL KARYALAYAM)

கள்ளனும் காவலனும்

"ஹஸன்"

காட்சி 1

[ஸ்பெயினில் முஸ்லிம்களின் ஆட்சிக் காலம். ஸெவில் ராஜ்யத் தலைநகரின் கோட்டை வாயிலிலிருந்து சற்றுத் தொலைவில் வாட்ட சாட்டமான ஒரு மனிதன் கழுமரத்தின் மீது இரும்புச் சங்கிலிகளால் பிணைக்கப்பட்டுக் கிடக்கிறான் நடுப்பகலில் வெயில் கடுமையாகக் காய்வதால் ஆள் நடமாட்டம் இல்லை. மரண தண்டனை விதிக்கப்பட்ட 'வெள்ளை வைரி' மார்ட்டினோ என்ற அக் கொடிய கொள்ளைக்காரனின் மனைவியும், மகளும், மகனும் கழுமரத்தைச் சுற்றி நின்று கதறுகின்றனர்.]

மார்ட்டினோ: மார்த்தா; நாளை விடியற் காலையில் என்னை சிரச்சேதம் செய்வார்கள். என் தீவினைக்குத் தகுந்த தண்டனையை நான் அனுபவிக்கிறேன். குழந்தைகளும் நீயும் எதற்காக இந்த வெயிலில் நின்று பொசுங்கவேண்டும்? என் வேதனையை இன்னும் அதிகமாக்காதீர்கள். போய் விடுங்கள்.

மார்த்தா: நீயின்றி எப்படி உயிர் வாழ்வேன் மார்ட்டினோ! இக் குழந்தைகளை வளர்த்து ஆளாக்க என்னிடம் என்ன வசதி இருக்கிறது? வீட்டில் ஒரு துரும்பு கூட இல்லாமல் எல்லாவற்றையும் பறிமுதல் செய்து விட்டதே, அரசாங்கம்!

மார்ட்: நான் செத்த பிறகு அரசன் மூத்தமித் இடமே சென்று முறையிடு. அவன் இரங்கிய உள்ளம் படைத்தவன். உங்கள் ஜீவனத்துக்கு ஏதாவது வகை செய்வான்.

மார்த்: எவரேனும் போய் அவனிடம் ஒரு பாட்டுப் பாடினால் பணத்தை அள்ளி அள்ளிக் கொடுப்பானாம். ஆனால் கொள்ளைக்காரன், அதிலும் கிறிஸ்தவன் என்றால் கொஞ்சங் கூட இரக்கம் ஏற்படாதாம் அவனுக்கு. என்ன செய்வேன்!

(அழுகிறாள். குழந்தைகளும் கூடவே அழுகின்றன.)

மார்ட்: குழந்தைகளின் முகத்தைப் பார்த்து அவன் இரங்கக் கூடும். எதற்கும் நாளையே போய்ப் பார்!

மார்த்தா: எனக்கு அதிலெல்லாம் நம்பிக்கையில்லை. குழந்தைகளை அழைத்துக்கொண்டு மலை உச்சிக்கு ஏறி அங்கிருந்து கீழே குதித்து உயிர்களை மாய்த்துக் கொள்வோம்.

மார்ட்: (பற்களை நற நற வென்று கடிக்கிறான்) முட்டாள் தனமாக

அகப்பட்டுக் கொண்டேன். என் வழக்கத்துக்கு விரோதமாக அன்று அவ்வளவு குடித்திருக்கவில்லை என்றால் இந்த மூர்கள் என் நிழலைக் கூடத் தீண்டியிருக்க முடியாதே!

(சிறிது தூரத்திலிருந்து பாட்டுச் சத்தம் வருவது கேட்டு நால்வரும் திரும்பிப் பார்க்கிறார்கள். ஒரு கோவேறு கழுதையின்மேல் பெரிய துணி மூட்டையை ஏற்றி அதைப் பற்றிக் கொண்டு, மற்றொரு கோவேறு கழுதை மேல் சவாரி செய்து வருகிறான் நாடு சுற்றும் பிரஞ்சு வியாபாரி ஒருவன்.)

மார்ட்: மார்த்தா, மூன்று பேரும் ஓடிப்போய் அந்த வியாபாரியை என்னருகில் அழைத்து வாருங்கள். சீக்கிரம்!

(வேண்டா வெறுப்பாக பிரஞ்சு வியாபாரி அருகில் வருகிறான். கைதியைப் பார்த்ததும் ஒரு கணம் அவனுடைய உடப்பு நடுங்குகிறது. சமாளித்துக் கொண்டு வாய்க்குள் "வெள்ளை வைரி" என்று முணு முணுக்கிறான்.)

மார்ட்: என்னைத் தெரியுமா உனக்கு?

வியாபாரி: ஏன் தெரியாது? அப்பா, உன்னை மறக்க முடியுமா?

மார்ட: என் நிலைமையைப்பார்த்து உனக்கு இரக்கம் வரவில்லையா?

வியா: இல்லவே இல்லை!

மார்ட்: இல்லையா! ஏனப்பா?

வியா: உனக்குத் தகுந்த தண்டனை தான் இது. உனக்கு நினைவிருக்காது. எனக்கு இப்பொழுது நினைத்தாலும் குலை நடுங்குகிறது.

மார்ட்: ஓ, ஸான் மோரினோ காட்டுப் பாதையில் நீ.......

வியா: ஆமாம்! சாமான்களையும் கொள்ளை கொடுத்துவிட்டு உன்னிடமிருந்து உயிர் தப்பிச் செல்வதே பெரும் பாடாகப் போய் விட்டதே!

மார்ட்: ஆம், அதற்கெல்லாம் இப்போது உனக்கு ஈடு செய்ய விரும்புகிறேன்.

வியா: என்ன?

மார்ட்: மெய்யாகத்தான். ஒரு தடவை கொள்ளையில் எனக்குக் கிடைத்த ஆயிரம் பொற்காசுகள் கொண்ட பை ஒன்றை யாருக்கும் தெரியாத

ஓரிடத்தில் புதைத்து வைத்திருக்கிறேன்.

வியா: (ஆசை கொளிக்க) நிஜமாகவா?

மார்ட்: பின்னே, இந்த நிலையையில் கூடவா பொய் பேசுவேன்! அந்த இடமும் இங்கிருந்து சமீபத்தில் தான் இருக்கிறது.

வியா: எங்கிருக்கிறது? என்னை என்ன செய்யச் சொல்கிறாய்! சீக்கிரம் கூறு!

மார்ட்: பதறாதே! என் மனைவியும் மகளும் பெண்கள். எதுவும் செய்ய இயலாதவர்கள். என் மகனும் மிகச் சிறுவன்.

வியா: அதனால்?

மார்ட்: அதற்காகத்தான் உன்னைக் கூப்பிட்டேன். நான் சாவதற்கு முன்பாக அந்தப் பொருளில் ஒரு பகுதியாவது என் குடும்பத்துக்குக் கிடைத்து விட்டது என்று தெரிந்தால் நிம்மதியாக உயிர் விடுவேன்.

வியா: உம்.

மார்ட்: இந்த ஊர்க்காரர் யாரையும் அழைத்துச் சொன்னால் அரசாங்கத்துக்குத் தெரிந்துபோய் அந்தப் பொருளும் பறி முதலாகி விடும். அதற்கு இனி நேரமும் இல்லை.

வியா: அந்த இடத்தைச் சொல்!

மார்ட்: அந்த விஷயத்துக்குத் தானே நானும் வருகிறேன். முதலில் நீ எனக்கு சத்தியம் செய்து கொடு, அந்த ஆயிரம் பொன்னில் பாதியை என் மனைவி மக்களுக்குக் கொடுத்து விடுவேன் என்று. பாக்கி ஐநூறு பொன்னை நீ எடுத்துக்கொள். ஸான் மோரினோ காட்டில் நீ என்னிடம் பறி கொடுத்ததற்கு ஐந்து மடங்கு பொருளாகும் அது!

வியா: (சத்தியம் செய்கிறான்) சரி, இப்போது இடத்தைச் சொல்.

மார்ட்: சொல்கிறேன். அக்கம் பக்கத்தில் யாரும் வரவில்லையே? அதோ ஒரு பாழ் கிணறு தெரிகிறது பார்!

வியா: ஆமாம்!

மார்ட்: அதில் ஒரு சொட்டுத் தண்ணீர் கூடக் கிடையாது. உன் கோவேறு கழுதை மேலிருக்கும் கயிற்றை எடுத்துக்கொள். அருகில் இருக்கும் மரத்தில் ஒரு முனையைக் கட்டி விட்டு கயிற்றைப் பிடித்துக்கொண்டு கிணற்றுக்குள் இறங்கு. தரையில் கால் வைத்ததும் மரத்துக்கு நேர்ப் பக்கமாக கிணற்றின் உள் சுவரை உற்றுப் பார். சுண்ணாம்பினால் போடப்பட்ட ஒருசிலுவை அடையாளம் தென்படும். அதற்கு நேராக ஒரு அடி மண்ணைத் தோண்டினால் பை அகப்படும்.

வியா: அதுவரை என் மிருகங்களையும் சரக்கையும் யார் பார்த்துகொள்வது?

மார்ட்: அதற்கென்ன? என் மனைவி மக்கள் பார்த்துக் கொள்வார்கள். எடுத்துக்கொண்டு எங்கும் ஓடியா விடுவார்கள்?

வியா: சரி!

(கயிற்றை எடுத்துக் கொண்டு திரும்பித் திரும்பிப் பார்த்தவண்ணம் பாழ் கிணற்றை நோக்கிப் போகிறான். ஒரு முனையை மரத்தில் கட்டி விட்டு கயிற்றைப் பிடித்துக்கொண்டு கிணற்றில் இறங்குகிறான்).

மார்ட்: மார்த்தா!

மார்த்: ஏன்!

மார்ட்: அதோ அந்தத் துணி மூட்டைக்குள் ஒரு கத்தி நீட்டிக் கொண்டிருக்கிறது பார்த்தாயா?

மார்த்: ஆம்!

மார்ட்: அதை எடுத்துக் கொண்டு

ஓடிப்போய் மரத்தில் கட்டியிருக்கும் கயிற்றை ஓரே வெட்டாக வெட்டி விட்டு ஓடிவா. சீக்கிரம்!

(மார்த்தா அவ்விதமே செய்கிறாள். முட்செடிகள் மண்டிக் கிடந்த கிணற்றினுள் தட்டித் தடுமாறி இறங்கிக் கொண்டிருந்த வியாபாரி பொத்தென்று கிணற்றில் விழுந்து கூச்சல் போடுகிறான். மார்த்தா மார்ட்டினோவிடம் திரும்பி ஓடி வருகிறாள்.)

மார்ட்: அவ்வளவு தான் மார்த்தா. இதுதான் கடைசிச் சந்திப்பு. குழந்தைகளையும் ஏற்றிக்கொண்டு காஸ்டைலின் கிறிஸ்தவ ராஜ்யத்தை நோக்கி ஓடிவிடு. இந்த மூட்டை நிறைய பட்டுத் துணி இருக்கும். சீக்கிரம் ஓடுங்கள். ஒரு நிமிஷம் கூட தாமதிக்கக் கூடாது. உம்! (குரல் தழதழக்கிறது) கண்மணிகளா, செல்லுங்கள்!

(மார்த்தாவும் அவளுடைய மக்களும் கோவேறு கழுதைகளின் மீது ஏறிக் கொண்டு அவற்றை முடுக்கி விடுகிறார்கள். கிணற்றுக் குள்ளிருந்து வியாபாரியின் பரிதாபமான அலறல் கேட்கிறது. மார்ட்டினோவை வாயில் வந்தவாறு திட்டுகிறான்; சபிக்கிறான்.)

காட்சி 2

[ஸெவில் மன்னர் மூத்தமிதின் அரசவை. பிற்பகல் நேரம். இளைஞரான அரசருக் கருகில் அவருடைய பிரதம மந்திரியும் பிரசித்தி பெற்ற அரபிக் கவிஞருமான இப்னு அம்மாரும் ஏனைய மந்திரி, பிரதானிகளும் வீற்றிருக்கின்றனர். அரசருக்கு எதிரில் வெள்ளியினாலான ஒரு சிறு முக்காலியின் மீது சிறந்த வேலைப் பாடுகளுடன் கூடிய, முத்து, ரத்தினங் கள் பதித்த தங்க ஒட்டகச் சிலை ஒன்று காட்சி யளிக்கிறது.]

அரசர்: ஸிஸிலியிலிருந்து வந்திருக்கும் கவிஞரை அழைத்து வாருங்கள்.

(சிறிது நேரத்தில் கவிஞர் அரசவைக்குள் பிரவேசிக்கிறார். அரசரின் காலடியை அணுகி ஸலாம் கூறி நிற்கிறார். ஒட்டகச் சிலையின் அழகைக் கண்டு பிரமித்து நின்ற கவிஞரை அமரச் சொல்கிறார் மன்னர்).

அரசர்: கவிஞரே, உம்முடைய நாமம்?

கவிஞர்: அபூ ஸயீத்!

அரசர்: அபூ ஸயீத், ஸிஸிலியை விட்டு ஏன் கிளம்பி வந்தீர்?

கவி: வேந்தே, தங்கள் ரசிகத் தன்மையைப் பற்றிக் கேள்வியுற்ற நாள் முதலாய் உங்கள் சமுகத்தையடைந்து கவிபாடி உங்களை மகிழ்விக்க வேண்டும் என்ற ஆசை மிகுந்திருந்தது. அந்த ஆசையை நிறைவேற்ற உதவுவான்போல நார்மண்டி அரசன் ரோஜர், ஸிஸிலியின் மீது படையெடுத்து ஸுல்தானை விரட்டி தீவை ஆக்கிரமித்துக் கொண்டு விட்டான். இந்நாட்டு முஸ்லிம் மன்னர்களை அணுகி ஆதரவு பெறும் நோக்கோடு அந்தலூஸியா வந்திறங்கி இப்பொழுது தங்கள் சமுகத்தை அடைந்திருக்கிறேன்!

அரசர்: சரி, இன்பரசம் பொதிந்த பாட்டொன்று பாடும், கேட்போம்!

கவிஞர்: அப்படியே! (பாடுகிறார்).

நாணித் தலை
கவிழ்த்து
நகத்தால்
நிலம் கீறிக்
கோணிக் குறுகி
நிற்கும்
கோதாய் கேள்,
சத்தியமாய்,

வீணில் நின் விழிநோக்கும்
வெறுந் தரைக்கு மேலான
ஆணில் அழகன் நான்;
அகங் குளிர வென்னைப் பார்!

அரசர்: மர்ஹபா! மர்ஹபா
(அவையினர் எல்லோரும் தலையசைத்து அரசரின் பாராட்டுதலை ஆமோதிக்கின்றனர்.)

கவிஞர்: (தலை தாழ்த்தி) தங்கள் ஆதரவுக்கு என் நன்றி, அரசே!

அரசர்: ஆம், இது உம்முடைய சொந்தக் கவிதைதானே?

கவிஞர்: (பதறிப் போய்) ஆம் மன்னரே, இப்போதே, இதே விநாடியில் இயற்றியதுதான்!

அரசர்: (குறும்புச் சிரிப்போடு) பயப்படாதீர்! நானே இந்தப் பாட்டை எப்போதாவது இயற்றியிருப்பேனோ என்று சந்தேகம் வந்தது. ஒருதரம் கேட்டவுடன் அந்த அளவுக்கு ஆழமாக என் மனசில் பதிந்து விட்டது, உமது பாட்டு!

கவிஞர்: இதைவிடப் பன்னூறு மடங்கு அழகிய கவிதைகள் புனைய வல்லவர் தாங்கள் என்பதை நான் அறிவேன், அரசர் பெருமானே!

அரசர்: சரி, நம்முடைய பிரதம மந்திரி ஒரு பாட்டின் முதலடியைச் சொல்வார். நீர் அடுத்த அடியைச் சொல்லி அதைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

கவிஞர்: உத்தரவு மன்னரே.

இப்னு அம்மார்: ஈடில்லா இன்பமுறும் தருணமொன்று தான், கேண்மின்,

கவிஞர்: ஊடல் ஒழித்துஇரு உளமொன்றாய்க் கலப்பதுவாம்!

அரசர்: வல்லாஹ், பிரமாதம்! இதோ நான் ஓரடி சொல்கிறேன்.
காலன், என் உயிரைப் போர்க்
களத்திடையே கவர்தற்கு

கவிஞர்: நீலவிழி இரண்டென்னை
நிலைகுலையப் பண்ணிடுவான்!

(சபையில் ஒரே குதூகலம். இச்சமயம் கையில் இருபைகளுடன் நிதி மந்திரி சபைக்குள் பிரவேசித்து. அரசனை நெருங்குகிறார்.)

நிதி மந்திரி: அரசே, தங்கள் உத்தரவுப்படி புதிய அச்சில் அடிக்கப்பட்ட தங்க நாணயங்கள் தயாராகி விட்டன. முதன் முதலில் தயாரான இரண்டாயிரம் பொற்காசுகளை தங்களுக்குக் காணிக்கையாகக் கொண்டு வந்துள்ளேன்.

(நிதியமைச்சர் பைகளை நீட்டுகிறார். வாங்கிய அரசர் தங்க நாணயங்களைக் கையில் அள்ளிப் பார்க்கிறார்.)

அரசர்: நாம் விரும்பியபடியே அழகாக அமைந்திருக்கிறது இந்த அச்சு. இப் புதிய நாணயம் இரண்டாயிரத்தையும் நம்மை இன்று மகிழ்வித்த ஸிஸிலிக் கவிஞர் அபூஸயீதுக்குப் பரிசாக அளிக்கிறோம். பெற்றுக் கொள்ளும், கவிஞரே!

அபூ: (ஆச்சரியத்தால் கண்கள் அகல விரிய, உணர்ச்சிப் பெருக்கால் நாத் தழுதழுக்க) நன்றி. அரசர் பெருமானே, நன்றி!

(இருகரங்களையும் ஏந்தி நாணயப் பைகளைப் பெற்றுக் கொள்கிறார்.)

அரசர்: திருப்தி தானே, அபூஸயீத்?

அபூ: ஏழைக்குத் திருப்தி யில்லாமல் என்ன, மன்னர் பெருமானே. (கண்களில் ஆசை மேலும் சுடர் விடுகிறது) ஆனால் ஒரே யொரு விண்ணப்பம்!

அர: என்ன, சொல்லும். நிறைவேற்றுவோம்!

அபூ: என்னால் சுமந்து செல்ல முடியாத இரு தங்க மூட்டைகளைத் தந்து விட்டீர்கள். இவற்றை ஏற்றிச் செல்வதற்கு ஓர் ஒட்டகமும் அளித்தருள வேண்டும்.

(கவிஞருடைய கண்கள் மணிகள் பதித்த தங்க ஒட்டகச் சிலையின் மீது சென்று லயிக்கின்றன.)

அரசர்; (கவிஞரின் ஆசையை உணர்ந்தவராய்) இந்த ஒட்டகத்தை உமக்கு அளிக்கிறோம்!

கவிஞர்: உங்கள் திருநாமம் என்றும் மங்காப் புகழோடு விளங்குவதாக!

காட்சி 3

(மன்னர் மூத்தமிதின் அரசவை. மாலை நேரம். அரசரும் மந்திரி பிரதானிகளும் வீற்றிருக்கின்றனர்.)

சட்ட மந்திரி: நீதி வேந்தே. தங்கள் உத்தரவுப்படி 'வெள்ளை வைரி' மார்ட்டினோவை இங்கு கொண்டுவரச் செய்திருக்கிறேன். சபையில் ஆஜர் படுத்தச் சொல்வோமா?

அரசர்: ஆம். அந்த அதிசயமான நெஞ்சுரம் படைத்த மனிதனைப் பார்க்கத்தான் வேண்டும்.

(சற்று நேரம் கழித்து உடல் முழுதும் சங்கிலிகளால் பிணைக்கப்பட்டு பல காவலாளிகள் புடை சூழ கம்பீரமாய் அரசவைக்குள் பிரவேசிக்கிறான் 'வெள்ளை வைரி,' மார்ட்டினோ.)

அரசர்: (பிரதம மந்திரியிடம் தாழ்ந்த குரலில்) நல்ல வீரனாகத் தோன்றுகிறான். (உரத்த குரலில்) அடே கொள்ளைக்காரா, பொல்லாத பாதகனாக இருக்கிறாயே, நீ. மரணம் நெருங்கி வந்து கொண்டிருக்கும் போது கூட, ஏழை ஒருவனை பாழுங் கிணற்றில் தள்ளச் சதி செய்தாயே!

மார்ட்: யாராயிருந்தாலும் மனைவி மக்களைக் காப்பதற்கு நான் செய்ததையே செய்திருப்பார்கள்.

அரசர்: உன் மனைவி மக்கள் மீது உனக்கு உண்மையில் அபிமானம் இருந்திருந்தால் இவ்விதமான கொலை பாதகத் தொழிலைச் செய்து வந்திருப்பாயா, நீ? சரி, நீ ஏன் இந்தக் கொள்ளைத் தொழிலில் ஈடுபட்டாய்?

மார்ட்: அரசே, வழிப்பறிக் கொள்ளையில் நான் பெறும் இன்பம் இப்படிப்பட்டதென்று உமக்குத் தெரிந்திருந்தால் நீர் உம்முடைய அரச பதவியையும் காற்றில் பறக்க விட்டு விட்டு என்னுடன் வந்து சேர்ந்திருப்பீர்.

அரசர்: (சிரிக்கிறார்) திமிர் பிடித்த திருடா, பெரிய கோமாளியாகவும் இருப்பாய் போலத் தோன்றுகிறதே! நீ எப்படிக் கொள்ளைக்காரன் ஆனாய் என்று கேட்டேன்.

மார்ட்: சொல்ல வேண்டுமென்றால் சொல்லுகிறேன். கேளும். நான் வாழ்க்கையில் போலீஸ் அதிகாரியாக வேண்டுமென்று குழந்தைப் பருவ முதலே கனவு கண்டு கொண்டிருந்தேன்.

அரசர்; அப்புறம்!

மார்ட்: சுமார் பத்து வருடங்களுக்கு முன், உம் தந்தை ஆண்ட காலத்தில் ஸெவில் நகர போலீஸ் அதிகாரி பதவி காலியானபோது அப் பதவிக்கு மனுச் செய்தேன். நிச்சயம் கிடைக்கும் என்று நம்பியிருந்தேன். ஏமாந்தேன். சற்றும் தகுதியில்லாத ஒருவன் அப் பதவிக்கு அமர்த்தப் பட்டான்

அரரர்; அதற்காக!

மார்ட்: அப் பதவிக்கு அமர்த்தப் பட்ட மற்றவர்கள் யாவரும் தகுதியற்றவர்கள். போலீஸ் வேலைக்கு லாயக்கற்ற கோழைகள் என்று நிரூபித்து பழிவாங்க விரும்பி கொள்ளைக்காரனாக மாறினேன். என்னைப் பிடிக்கச் சக்தியற்றிருந்ததனால் எத்தனையோ அதிகாரிகள் தொடர்ந்து வேலை இழந்து வந்தார்கள். இதனால் எல்லாம் நான் அளவற்ற திருப்தி அடைந்து வந்தேன்.

(பேசிவிட்டு தலை குனிந்து நிற்கிறான். மன்னர் சிறிது நேரம் யோசனையில் ஆழ்கிறார்.)

அரசர்: நான் உன்னை மன்னித்து விடுதலையளிப்பதானால் திருந்தி ஒழுங்காக வாழ்வதாக உறுதிமொழி கொடுப்பாயா?

மார்ட்: பாதி இழந்த உயிரை மீண்டும் பெறுவதற்காக மனிதன் எந்த விதமான நிபந்தனைக்குத் தான் உடன்பட மாட்டான். தங்களுக்கு எவ்வகையிலும் அதிருப்தி ஏற்படாதவாறு இனி நான் வாழ்க்கை நடத்துவேன், இது சத்தியம்.

அரசர்; அப்படியானால் நல்லது; உன்னை மன்னித்து விடுதலை அளிக்கிறோம். அதோடு நாளை முதல் உன்னை ஸெவில் நகரப் பகுதியின் போலீஸ் அதிகாரியாகவும் நியமனம் செய்கிறோம்!

மார்ட்: அரசே, நீங்கள் வாழ்க! உங்கள் நீதி வாழ்க!

(திரை விழுகிறது.) ★

புறங்கூறுமை

"ஷேக்கோ"

ஒரு சமயம், நாயகம் (ஸல்) அவர்களிடம் ஒரு மனிதர் வந்து, "நாயகமே நான் பிறரைப்பற்றி அவதூறு பேசிப்பேசி மிகவும் கொடியவனாகிவிட்டேன். அப்படிப் புறம் பேசுவதில் நின்றும் நான் நீங்கிக்கொள்ள என்ன செய்யவேண்டும் ?"— என்று, மிகவும் வினயமாகக்கேட்டு நின்றார்.

அது கேட்ட பெருமானார் சிறிதுநேரம் சிந்தனையிலாழ்ந்திருந்தார்கள். பின்னர் "நீங்கள் போய், வாத்துகளிலிருந்து கொஞ்சம் இறகுகள் சேகரித்துக் கொண்டு வாருங்கள்" என்று அவரைப் பணித்தார்கள்.

அதன்படியே, அந்த மனிதர் வாத்துகளின் இறகுகள் கொஞ்சம் சேகரித்துக் கொண்டுவந்தார்.

" சரி. இந்த இறகுகளையெல்லாம், இங்குள்ள வீடுகளின் வெளிக்கதவு இடுக்குகளில், சொருகி வைத்து விட்டு வாருங்கள்." என்றார்கள் நபி (ஸல்) அவர்கள்.

அதன்படியே, அன்று இரவு, அந்த இறகுகளையெல்லாம் அங்குள்ள வீடுகளின் கதவிடுக்குகளில் சொருகி வைத்து விட்டு, மறு நாள், அந்த மனிதர் நாயகத்திடம் வந்தார்.

"நேற்று இரவு இறகுகளையெல்லாம் சொருகி வைத்து விட்டீர்களல்லவா? சரி, இன்று போய், அந்த இறகுகளையெல்லாம் மறுபடியும் ஒன்று விடாமல் சேகரித்துக் கொண்டு வந்து விடுங்கள்" என்று அவரிடம் கூறினார்கள் பெருமானார்.

அதைக் கேட்ட அம்மனிதர் பிரமித்து விட்டார். "இறையின் திருத்தூதரே! நேற்றுஇரவு அடித்த கொடுங்காற்றிலே, அந்த இறகுகளெல்லாம் எங்கெங்கு அடித்துக் கொண்டு போகப்பட்டு விட்டனவோ! அவற்றை நான் எப்படி, இப்போது சேகரிக்க முடியும் ?" என்று அவர் கைசேதப்பட்டு நின்றார்.

" சேகரிக்க முடியாதல்லவா ? அது போலவேதான், நீங்கள் பிறரைப் பற்றிப் பேசிய அவதூறுகளும் ஜனங்களிடையே பரவிப்போய் விட்டன. அவற்றை எப்படி நிவர்த்திக்க முடியும்...?" என்பதாகக் கேட்டார்கள்.

அப்போது தான், அந்த மனிதருக்கு புறம் பேசுவதால் ஏற்படும் தீங்கு நன்றாக விளங்கியது. புறங்கூறும் புன் செயலை அன்றி விருந்து விட்டொழித்தார்.

கைம்மாறு

★

முஹம்மது ஹஸன்

மாநபியின் மறைவுக்குப் பின் அரபியர் வெளிப்போந்து பல நாடுகளை வெற்றிகொண்டு இஸ்லாமியப் பேரரசை ஸ்தாபித்தார்கள். பக்தாதைத் தலைநகராகக்கொண்டு கலீபாக்கள் அரசோச்சிய காலம் அது. அவர்களுடைய வருவாயில் பெரும் அளவு ஆப்ரிக்காவிலிருந்து வந்து கொண்டிருந்தது.

இன்று போலவே அன்றும் ஆப்ரிக்கப் பகுதி குமுறிக் கொண்டிருந்தது. ஒழுக்க சீலரான கலீபா உமர் இப்னு அப்துல் அஜீஸ் அவர்கள் காலத்தில் அங்கு வாழ்ந்த பெர்பர்கள் அனைவருமே முஸ்லிம்களாக மாறினர். நாளாவட்டத்தில் இவர்கள் மனதிலே மதப்பற்று ஆழ வேரூன்றி விட்டது. அடைந்து கிடந்த மனக் கதவு திறந்து கொண்டது. தங்களின் சுயநிர்ணய உரிமையை நிலைநாட்ட பெருமுயற்சிகள் செய்தனர்.

கலீபாவாக அப்போது ஹிஷாம் ஆண்டு வந்தார். ஆப்ரிக்காவின் வருவாயில் கண்ணாக இருந்த அவர் அதற்குத் தகுந்தவராக உபைதுல்லா என்பவரை கி. பி. 734-ல் ஆப்ரிக்கா நாட்டின் அதிபராக நியமனம் செய்தார்.

உபைதுல்லாவின் பாட்டனார் அடிமையாக இருந்தவர். என்றாலும் குலப் பெருமையிலேயே அதிகம் கருத்து வைக்கும் அரபியர்கள் கூட அவரிடம் பெரும் மதிப்பு வைத்திருந்தனர். அவர் சிறந்த கல்வியறிவு பெற்றிருந்தார். அரபிக் கவிதைகளிலும் பழம் பாடல்களிலும் அவருக்கு நல்ல பாண்டித்யம் இருந்தது. அவர் அரசு தொடங்கிய காலத்தில் ஆப்ரிக்காவில் பனூகைஸ் கூட்டத்தார்களில் இரண்டு குடும்பங்களே இருந்தன. பெருமுயற்சி செய்து 1300 எளிய குடும்பங்களை அங்கு கொண்டுவந்து குடியிருத்தி வைத்ததுமன்றி அவர்கள் நல்வாழ்வுக்காக வகை செய்தும் தந்தார் உபைதுல்லா.

தன் பாட்டனாருக்கு விடுதலை தந்த ஹஜ்ஜாஜின் குடும்பத்தாரிடம் அவர் காட்டிய ஆழ்ந்த பற்றும் பரிவும் நெஞ்சைத் தொடுவதாகும். பதவியின் பெருமையிலும் சுகபோக வாழ்விலும் திளைத்து நின்ற அவர், ஹஜ்ஜாஜ் செய்த நன்றியை மறந்ததே இல்லை. தாம் அவருக்கு எவ்வளவு கடமைப் பட்டவர் என்பதை எடுத்து இயம்பவும் தவறுவதில்லை.

கைரவான் நகரைத் தலை நகராகக் கொண்டு ஆப்பிரிக்கா நாட்டை ஆண்டு வந்தபோது உக்பா என்னும் அரபியர் அங்கு வந்திருந்தார். இவர் ஹஜ்ஜாஜின் மகன். உபைதுல்லாவும் அவரை வரவேற்றுத் தன் அரியணையின் ஒரு பக்கலிலே சரிசமானமாக அமர்த்தி அன்போடு உரையாடிக் கொண்டிருந்தார். இதைக் கண்ணுற்ற உபைதுல்லாவின் மைந்தர்கள் பெருஞ் சீற்ற மடைந்தனர்.

தங்கள் தந்தையைத் தனிமையில் கண்டதும், புது வாழ்வுக்காரனைப் போல் பொங்கி எழுந்து " தந்தையே! இந்தக் காட்டு அரபியை குறைஷிகளும் பிரதானிகளும் நிறைந்த சபையிலே உங்கள் அருகிலே அமர்த்திக்கொண்டீர்கள். இந்த அவமானத்தால் மனக் கொதிப்படைந்த அவர்கள் நமக்கு நிச்சயம் கேடு தேடுவர். வயதான உங்களிடம் தங்கள் உள்ளக் கொதிப்பை ஒருவேளை அவர்கள் மறைத்துவிடலாம்; உங்கள் மரணம் அவர்களின் கோபத்திலிருந்து உங்களை காப்பாற்றியும் விடலாம். ஆனால் எங்கள் நிலை—இன்றைய நிகழ்ச்சியால் ஏற்பட்ட அவமானம் எங்கள்மீது திரும்பிப் பாய்வது திண்ணம். இது கலீபாவின் காதுக்கு எட்டினால் நமக்குப் பெரும் கேடுதான்." என்று குதித்தெழுந்து கூக்குரலிட்டனர்.

உபைதுல்லாவுக்கு என்ன பதில் கூறுவதென்றே தோன்றவில்லை. "நீங்கள் சொல்வதிலும் நியாயம் இருக்கிறது. நீங்கள் இதே குறையை மீண்டும் சொல்லும்படி இனி நான் நடந்துகொள்ள மாட்டேன்" என்று பதில் கூறிவிட்டார்.

மறுநாள் சபை கூட்டப்பட்டது. அமைச்சர்களும், அறிஞர்களும், வர்த்தகச் சீமான்களும், பெருங்குடி மக்கள் அனைவரும் ஆங்கு குழுமியிருந்தனர். உக்பா இப்னு ஹஜ்ஜாஜும் அழைக்கப்பட்டிருந்தார். உபைதுல்லா எல்லோரிடமும் அன்னியோன்னியமாகப் பழகிய போதிலும் இப்னு ஹஜ்ஜாஜை உயர்ந்த ஆசனத்தில் அமர்த்தி அவரின் காலடியில் உட்கார்ந்துகொண்டு தம் மைந்தர்களை அழைக்கும்படி ஆக்ஞாபித்தார். உள்ளே நுழைந்த அவர்கள் இப்னு ஹஜ்ஜாஜ் உயர்ந்த ஆசனத்தில் இருப்பதையும் தங்கள் தந்தையார்—ஆப்ரிக்காவின் அதிபர்—அவர் பாதத்தின் அருகே அமர்ந்திருப்பதையும் கண்டு பிரமித்து நின்று விட்டனர்.

உபைதுல்லா எழுந்து நின்றார். வல்ல நாயனை வாழ்த்திவிட்டு, அங்கு குழுமியிருந்த பெரு மக்களிடம் தம் மைந்தர்கள் தம்மிடம் முந்தியநாள் கூறிய தனைத்தையும் எடுத்துச் சொன்னார். உணர்ச்சி மிகுதியால் நாத்தழுதழுக்க அவர்களை நோக்கி "ஆண்டவன் சாட்சியாகவும் உங்கள் சாட்சியாகவும் இங்கு இருக்கும் உக்பா என்பவர், என் பாட்டனாரின் அடிமைத்தளையை அறுத்து எறிந்த வள்ளல் ஹஜ்ஜாஜின் மகன் என்று நான் உறுதி சொல்கிறேன். ஆனால் என் மக்கள் இப்லீஸால் வழி கேட்டில் இழுக்கப்பட்டு விட்டனர். அகங்காரமும் ஆணவமும் கொண்டு நிற்கும் அவர்கள் முன்னிலும் நான் நன்றி கொன்ற பாதகன் இல்லை என்பதை மறுபடியும் உறுதிப் படுத்துகிறேன். இவருக்கு நான் எவ்வகையில் கடமைப்பட்டுள்ளேன் என்பதை நன்கறிவேன். எங்கே என் மைந்தர்கள் அதை மறந்து விடுவார்களோ அல்லது மறுத்து விடுவார்களோ என்று அஞ்சியே உங்கள் எல்லோர் முன்னிலையிலும் இந்த விஷயத்தை வெளிப்படுத்துகிறேன். நபிகள் நாயகம் அவர்களும் "தனக்கு உறவு இல்லாத கிளையில் தான் பிறந்ததாகப் பேசுபவனும் பாவி. தனக்குதவி செய்தவனை மறந்தவனும் பாவியே" என்று கூறியுள்ளார்கள். ஹலரத் அபூபக்கர் (ரலி) அவர்களும் "தூர பந்துவானாலும் அவன் உறவை மறப்பதும் தனக்குச் சொந்தமில்லாத குடும்பத்தில் தான் பிறந்ததாகச் சொல்லித் திரிவதும் ஆண்டவனின் நன்றியை மறப்பதாகும்" என்று கூறியதாகக் கேட்டுள்ளேன். என் அருமை மைந்தர்களே உங்கள் மீது நான் கொண்டுள்ள அளவற்ற அன்பினால் தான் உங்களை இறைவனின் கோபப் பார்வையினின்றும் மனிதரின் இகழ்ச்சியினின்றும் காப்பாற்ற எண்ணினேன். நான் செய்தது கலீபாவுக்குத் தெரிந்தால் பெருங் கேடு சூழும் என்று எச்சரித்தீர்கள். மிகவும் பெருந்தன்மையுள்ளவர் கலீபா. ஆண்டவன் அவருக்கு நீண்ட ஆயுளை அளிக்கட்டும். என் நண்பர்களுக்கு நான் செய்ய வேண்டிய கடமைகளை நிறைவேற்றினால் ஒரு நாளும் அவர் மன வருத்தம் கொள்ளார். அதற்கு மாறாக என் செய்கையை நிச்சயம் ஆதரிக்கவே செய்வார். அது பற்றி உங்களுக்கு சிறிதும் கவலை வேண்டாம்" என்று கூறி முடித்தார்.

சபையினர் அனைவரும் "அதுவே சரி. வாழ்க உபைதுல்லா!" என்று குரல் எழுப்பி வாழ்த்தினர். ஆனால் அவர் மைந்தர்களோ தங்களுக்கு ஏற்பட்ட அவமானத்தால் மனம் ஒடிந்து முகங் கருகி நின்றனர்.

அரியணைமீது அமர்ந்திருந்த உக்பா இப்னு ஹஜ்ஜாஜை நோக்கி "பிரபுவே! தங்கள் கட்டளைகளை நிறைவேற்றக் காத்திருக்கிறேன். கலீபா என் ஆதிக்கத்தில் பெரும் நிலப்பரப்பைத் தந்துள்ளார்கள். அதில் தங்களுக்கு எப் பகுதி தேவையானாலும் எடுத்துக் கொள்ளுங்கள்" என்று வேண்டி நின்றார் உபைதுல்லா.

புனிதப் போர்களிலே பங்கு பெற விரும்பிய உக்பா ஸ்பெயின் பிரதேசத்தின் ஆட்சிப் பொறுப்பைக் கோரி, அதனைப் பெற்றுக் கொண்டார். ★

புனிதமான நோன்புப் பெருநாளை யொட்டி வாழ்த்துரைகள் அனுப்பிய அன்பர்கள் அனைவர்க்கும் எம் உளங்கனிந்த நன்றி உரித்தாகுக.

—ஆசிரியர்.

எறும்பு

அ. அப்துர் ரஹீம்

❊

சென்ற ஆண்டு ஆரம்பத்தில் அமெரிக்கப் பத்திரிகைகளில் ஓர் அரிய செய்தியொன்று வெளியாயிற்று. ஓடிக்கொண்டிருக்கும் புகை வண்டிகளையும் பிற வாகனங்களையும் சில எறும்புகள் சேர்ந்து நிறுத்திவிட்டன என்பதே அச் செய்தி!

வாகனங்களின் போக்குவரத்தைக் கட்டுப்படுத்தும் பச்சை சிவப்பு விளக்குகளுக்கு மின்சாரத்தைக் கொண்டு செல்லும் கம்பிகள் ஒரு வகை பிளாஸ்டிக்கால் போர்த்தப்பட்டிருந்தன. இந்த பிளாஸ்டிக், எறும்புகளுக்குப் பிடித்தமான ஆகாரமாகிவிட்டது. எனவே அந்த பிளாஸ்டிக் உரைகளை எறும்புகள் அரித்துவிட்டன. அதனால் மின்கம்பிகள் ஒன்றுடன் ஒன்று உராய்ந்து மின்னோட்டம் தடைபட்டு, போக்குவரத்து அடையாளக் கருவிகள் இயங்க மறுத்துவிட்டன.

இவ்வாறு பல இடங்களில் அடிக்கடி நிகழ்ந்து போக்கு வரத்துக்குத் தடையேற்பட்டதால், தற்போது பூமிக்குள் பதிக்கப்பட்ட மின்கம்பிகளின் மீது எறும்புகளை விரட்டும் விஷ மருந்தைப் பூசுகின்றனர்.

அமெரிக்காவில் எறும்பின் தொல்லை மீண்டும் துவங்கி யிருக்கிறது. ஆனால் இப் புதிய தொல்லையைத் தொலைக்க வழியே இல்லை என்ற முடிவுக்கு வந்து விட்டனர். 'கொசுக்களுக்குப் பயந்து ஊரை விட்டா ஓடுவார்கள்?' என்று ஒரு பழமொழியுண்டு. ஆனால் எறும்பின் தொல்லை தாங்காமல் மனிதர்கள் ஊரை விட்டே ஓடும் நிலைமை அங்கே ஏற்பட்டு இருக்கிறது.

முன்பு அடிமை வியாபாரத்தால் துன்புற்ற அமெரிக்க ஐக்கிய நாட்டின் தென்பகுதி தற்போது ஒருவித சிவப்பு எறும்புகளின் படையெடுப்புக்கும் ஆக்கிரமிப்புக்கும் உட்பட்டிருக்கிறது.

உணவுப் பயிர்கள் நிறைந்த தென் பகுதியில் இவ் வெறும்புகள் தானியங்களையும் கிழங்குகளையும் உண்டு அழித்துவிடுவதைக்கூட அவர்கள் பொருட்படுத்தவில்லை. ஆனால் அவர்களால் எறும்புகளின் கடியைத் தாங்க முடியவில்லை. இவ் வெறும்புகள் கடித்தால் தேள் கொட்டியதுபோன்ற வலி ஏற்படுகிறது

எறும்புக்கடியால் ஆடு, மாடு, போன்ற கால் நடைகளும் கஷ்டப்படுகின்றன. எறும்புகள் சிறு குழந்தைகளைக் கொன்றே விடுகின்றன. அழித்தொழிக்க முடியாத அளவுக்கு இவ் வெறும்புகள் பரவி வருகின்றன. தென் பகுதியை விட்டு வட பகுதிக்குச் சென்று குடியேறுவதை விட அங்குள்ள மக்களுக்கு வேறு வழியொன்றும் தென்படவில்லை. ஆனால் இவ் வெறும்புகளும் தெற்கிலிருந்து வடக்கு நோக்கிப் பரவிக் கொண்டிருக்கின்றன. அணு ஆயுதங்களால் உலகைப் பயமுறுத்திக் கொண்டிருக்கும் அமெரிக்கா இன்று இவ் வெறும்புகளைக் கண்டு பயந்து கொண்டிருக்கிறது!

இயற்கைச் சக்திகளை அடக்கியாண்டு தன் தேவைக்கேற்ப அவற்றை ஆட்டிக் கொண்டிருக்கிறான் மனிதன். ஆனால் அச் சக்திகள் வெகுண்டெழுந்து புயலாகவோ வெள்ளமாகவோ கிளம்பி விட்டால், இச் சக்திகளின் கோரச் செயலைக்கண்டு மனிதன் தன் கைகட்டி வாய் பொத்தி பார்த்துக்கொண்டே இருக்கிறான்! அல்லது வெகுண்டெழுந்த சக்திகளை அடக்கும்படி இறைவனிடம் பிரார்த்திக்கிறான். இவற்றைத் தவிர வேறெந்தப் பரிகாரமும் செய்ய மனிதனால் முடியவில்லை.

மனிதர்களுக் கெதிராக இறைவன் புயல், வெள்ளம் போன்ற பெரும் பூதங்களை ஏவி விட வேண்டியதில்லை மனிதன் சுண்டு விரலால் நசுக்கித் தேய்க்கக் கூடிய சிறு பூச்சிகளைக் கொண்டே மனிதனை அழித்துவிட முடியும். சிறு குருவிப்படைகள், புனித கஅபாவைத் தரை மட்டமாக்கப் படை யெடுத்து

வந்த அப்ரஹாமின் யானைப் படைகளை யானை மென்று துப்பிய வைக்கோலைப் போன்று சிதறச் செய்த செய்தியை திருமறையின் 105-ம் அத்தியாயம் கூறுகிறதல்லவா?

சாதாரண தேனீக்களில் ஒரு சிறு கூட்டம் சேர்ந்தால் மனிதனைக் கொன்றுவிடும். விஷமற்ற பூச்சியான வெட்டுக்கிளி சில இடங்களில் கோடிக் கணக்கில் படை யெடுத்து விடுகின்றன. அப்போது மனிதர்கள் அறையினுள் ஒளிந்துகொண்டு கதவுகளை மூடிக் கொண்டோ, அல்லது கம்பளித் துணியால் உடலைப் போர்த்திப் படுத்துக் கொண்டோ தங்கள் தங்கள் உயிர்களைக் காப்பாற்றிக் கொள்கின்றனர். வெட்டுக்கிளிகள் அட்டகாசம் செய்து விட்டுச் சென்றபின் தான் வெளியே கைப் பார்க்கின்றனர். அப்போது பல நூறு மைல்கள் பரவி இருந்த உணவுப் பயிர்கள் அழிந்து சிதறிக் கிடப்பதைக் காணுகின்றனர்.

கண்களுக்குப் புலனாகாத அளவுக்கு மிகச் சிறிய கிருமிகள் மக்களைக் கூட்டம் கூட்டமாக அழிக்கவல்லவை. இயற்கைச் சக்திகளைப் போன்றே, பிற உயிர்ச் சக்திகளையும் மனிதன் ஓரளவு தான் அடக்கியாள முடியும். இச் சக்திகள் வெகுண்டெழுந்து படையெடுத்துவிட்டால் மனிதன் புயலில் சிக்கிய தூசியாகின்றான். இந்தப் பழைய உண்மையை மீண்டும் போதிக்க வந்திருக்கிறது அமெரிக்காவின் சிவப்பு எறும்புக் கூட்டம்!

நேர்த்தியான தோற்றத்திற்கும், நீடித்த உழைப்பிற்கும், நியாயமான விலைக்கும்,

ராஜாளி மார்க்கு

கைலிகளையே உபயோகியுங்கள்

ரிஜிஸ்டர்ட் டிரேட் மார்க் நெ 169403

37.C.MANNADY ST., MADRAS-1.

ராஜாளி மார்க் கைக்குட்டைகள் எங்கள் விசேஷ தயாரிப்பு

வி. எம். முஹம்மது யூசுப்,

37—சி. மண்ணடி தெரு, சென்னை—1.

கந்தல் உடையில் காவலன்!

★

ஒரு தினம் இப்ராஹீம் இப்னு அத்ஹம் (ரஹ்) அவர்கள் கடற்கரையிலமர்ந்து பழந்துணி யொன்றைத் தைத்துக் கொண்டிருந்தார்கள். பல்கு நாட்டு அதிபரை பஞ்சைக் கோலத்துடன், செங்கோல் தாங்கிய செம்மலின் கரத்தை சேலை தைக்கும் ஊசியுடன் கண்ணுற்ற வழிப் போக்கர் ஒருவருக்கு, அந்த மாஜி அரசர் மீது அனுதாபம் ஏற்பட்டது. அரண்மனை வாழ்வும், அரசபோகமும் வாய்க்கப் பெற்ற இக் காவலன் திடீரென்று அத்தனையும் துறந்துவிட்டு இங்ஙனம் கந்தல் உடையில் காட்சியளிப்பதேன் என்ற கேள்வி அவர் உள்ளத்திலே உதயமாயிற்று.

"மணிமுடி தரித்திருந்த மன்னவ! இறைவன் தன் அருட்பாக்கியங்கள் அத்தனையும் தங்கள் பால் சொரிந்து தங்களை ஒரு பாதுஷாவாக ஆக்கியிருந்தும், தாங்கள் அதனைத் துறந்து விட்டு பிடி உணவிற்கும், இடைத்துணிக்கும் வகையில்லாது ஏழையாக படுக்க இடமில்லாப் பரதேசியாக வாழ உங்கள் உள்ளம் எங்ஙனம் ஒப்பியது அரசே'" என்று வினவி நின்றார்.

ஆன்றோரின் அந்தரங்கத்தை உணர முடியாத இந்த அப்பாவி வழிப்போக்கரின் வாயிலிருந்து கிளம்பிய இவ் வார்த்தைகளைச் செவியுற்ற சக்கரவர்த்தியின் வரண்ட இதழ்களில் புன்முறுவல் பளிச்சிட்டு மறைந்தது. ஆனால் பக்குவம் அடைந்திருந்த அப் பேரரசரின் உள்ளப் பிரதிபலிப்பு அவர் முகத்திலே ஒளி விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்தது.

காவலர் கூறலானார்.

"தோழரே! நீர் தப்புக் கணக்குப் போட்டு விட்டீர். நீர், பெறற்கரிய தாகக் கருதும் அரச போகங்களெல்லாம் வெளிப்படையில் உண்மையாயிருக்கலாம். ஆனால், அந்தரங்கத்தில் எனக்கு அவை யெல்லாம் என் முதுகிலேற்றப்பட்ட பெரும் சுமைகளாகவே தோன்றின. எனவே அவற்றை உதறித் தள்ளி விட்டேன். இல்லை; தாங்க முடியாத அப் பெரும் பளுவிலிருந்து எனக்கு நானே விடுதலை வழங்கிக் கொண்டேன். எனினும், இப்பொழுது நானிருக்கும் நிலை எத்துணை மகத்தானது தெரியுமா?" என்று வழிப்போக்கரை நோக்கி எதிர்க்கேள்வி போட்டு விட்டு தம் கரத்திலிருந்த ஊசியைக் கடலில் எறிந்தார் கொற்றவர். மன்னவரின் இச் செய்கை அவ் வழிப் போக்கருக்கு வியப்பை மூட்டியது. "அந்த ஊசியைக் கொண்டுவா" என கடலை நோக்கிப் பணித்தார், பல்கு நாட்டு மன்னர். அங்கே அடுக்கடுக்காய் ஆர்ப்பரித்துக் கொண்டு வரும் அலைகளைத் தவிர பிறிதெவரும் தென்பட்டனரில்லை "அப்படியானால் அரசரிடும் ஆணை யாருக்கு?" என்று தன்னைத் தானே வினவிக்கொண்டார் வழிப் போக்கர். இதற்குள் சற்று முன்னர் எறிந்த அந்த ஊசி ஒரு மச்சத்தின் வாயிலாக அந்த ஆத்ம ஞானிக்குக் கிடைக்குமாறு ஆண்டவன் துணை செய்தான்.

உடனே அதனைத் தன் கரத்திலெடுத்துக்கொண்ட அக் காவலர் "நண்பரே! கவனித்தீரா நடந்ததை?—நீர், மன்னனென்றும், அரசனென்றும் அழைப்பதற்கு நான் அருகதை இருந்த அக் காலத்திலெல்லாம் என் அதிகாரம் செல்வது, ஜனங்கள் வரையில் தான். இப்பொழுதோ வெனில், இம்மா பெரும் ஆழியில் வசிக்கும் மச்சங்கள் வரை எனக்கடிபணிகின்றன. புறத்தில் பஞ்சையாக—பரதேசியாக நான் தோற்றமளித்தாலும் உண்மையில் நான் பழைய நிலையைக் காட்டிலும் பன் மடங்கு பாக்கியம் பெற்றவனாகத் தான் இருக்கிறேன்" என்பதைச் சுட்டிக்காட்டிவிட்டு, "இதற்கெல்லாம் மூலகாரணம் இறைவனுக்கு எவரேனும் பூரணமாகக் கட்டுப்பட்டு நடந்தால், அவனுக்கு அவ் விறைவனின் சர்வ சிருஷ்டிகளும் அடிபணிகின்றன எனும் பேருண்மை தான்" என்று விளக்கினார்கள் இப்ராஹீம் இப்னு அத்ஹம் (ரஹ.)

மூலம்: ஹிகாயாத்து ஸ்ஸாலிஹீன்.

தமிழாக்கம்: மௌலவி ஜைனுல் ஆபிதீன் (பாகவீ.)

★

தம் உள்ளத்திலே ஊறும் கருத்துக்களை எழுத்துருவிலே வடிக்க வேண்டும்; அவறைப் பிறர் படித்து மகிழ வேண்டும் என்று துடி துடிக்கும் இளைஞர்கள் எண்ணற்றோர் இருக்கிறார்கள். அவர்கள் நமக்கு எழுதி யனுப்பும் கதைகள், கவிதைகள், கட்டுரைகள், கடிதங்கள் ஆகியவற்றில் இந்த ஆர்வம் தெளிவாகப் பிரதிபலிக்கிறது. எழுத்தாற்றலும், கருத்துச் செறிவும் கொண்ட இத்தகைய ஆரம்ப எழுத்தாளர்களுக்கும் அவ்வப்போது ஒரு சில பக்கங்கள் பிறையிலே ஒதுக்கவேண்டும் என்று எண்ணுகிறோம்.

இப்பகுதிக்கு கதை. கட்டுரை அனுப்ப விரும்பும் அன்பர்கள் காகிதத்தில் ஒரே பக்கத்தில் மையினால் தெளிவாக எழுதியனுப்ப வேண்டும். எழுத்தோவியங்களுடன் கடிதங்கள் வைத்து அனுப்பத் தேவையில்லை; பெயரும் விலாசமும் மட்டும் இருந்தால் போதும் பிரசுரிக்க முடியாதவற்றைத் திரும்பப் பெற விரும்புவோர் போதிய தபால் தலை சேர்த்தனுப்ப வேண்டும்.

சுருக்கமாக, இலக்கண சுத்தமாக இருக்கும் எழுத்தோவியங்கள் முதலில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

இவ்வரிசையிலே முதல் கட்டுரையாக திருக் குர்ஆனைப் பற்றி எழுதும் ஜனாப் டி. எம். பீர்முஹம்மதின் கட்டுரை இடம் பெறுகிறது.

—ஆசிரியர்.

சீர்திருத்தப் பொக்கிஷம்

டி. எம். பீர் முஹம்மது

★

படைப்புக்களி லெல்லாம் உன்னத, உயரிய படைப்பாக இறைவன் மனிதனை மாத்திரமே படைத்தான். பகுத்தறியும் திறனை அவனுக்குக் கொடுத்தான். ஆனால் அனாச்சாரத்தையும், அக்கிரமத்தையும். வஞ்சத்தையுமே உயிரும் உணவுமாகக் கொண்டு வாழ்ந்துவரலானான் மனிதன். ஆணவத்தால் அறிவிழந்து, பொறாமை, பூசல்—இவற்றிடையே உழன்று அவதிப்பட்டுக் கொண்டிருந்தான். இறப்பின் பின் பரலோகம் இல்லை என இறுமாப்புக் கொண்டிருந்தான்: நடுக் கடலிலே சிக்கித் தத்தளித்துக் கொண்டிருக்கும் நாவாய்போல் ஊசலாடிக் கொண்டிருந்த இத்தகைய மக்களின் நல் வாழ்வுக்காக இறைவன் தனது இறுதி நபியாம் நாயகம் (ஸல்) அவர்கள் மூலமாகத் திருமறையை இறக்கினான். எக்காலத்திற்கும் பொருந்தும் திருக்குர்ஆன் நீதி நேர்மை, நேரிய வாழ்வு ஆகியவற்றை போதிக்கும் ஒரு புனித நூலாகும். எந்த மதநூலிலும் திருமறையைப் போன்ற உயரிய கருத்துக்களைக் காண முடியாது என திருமதி சரோஜினி தேவி கூறினார்.

புவன முழுமைக்கும் திருமறை ஒன்றேதான். அலஹாபாதிலும் சரி, அரேபியாவிலும் சரி, அபிசீனியாவிலும் சரி, அமெரிக்காவிலும் சரி—எங்கும் ஒரே திருமறைதான், இதை வில்லியம் மூர் என்பவர் 'லைப் ஆப் முஹம்மத்' என்ற நூலில் எடுத்துக் காட்டுகிறார்.

இறைவன் தன் திருமறையைப்பற்றி சத்தியவாக்கு, மனத்தின் மாசைப் போக்கும் மாமருந்து' என்று வர்ணிக்கின்றான்.

"நீரளவே யாகுமாம் நீராம்பல்தான் கற்ற நூலளவே யாகுமாம் நுண்ணறிவு" என்பதற்கேற்ப திருமறையை ஓதும் தோறும் புத்தம் புதுக் கருத்துக்கள் உதயமாகும்.

திருமறை வேற்றுமையை வேரறுத்து ஒற்றுமையை நிலை நிறுத்தும், மக்களிடையே அன்புணர்ச்சியைக் குடி கொள்ளச் செய்யும்; நெறி தவறிச் செல்வோருக்கு நேரிய வழி காட்டும்; நீதிக்குப் புறம்பாக எதையும் காண முடியாத பரிசுத்த வேதவாக்கு. சத்தியத்தையும், சன்மார்க்க நெறியையும் அடிப்படையாகக் கொண்ட சீர்திருத்தப் பொக்கிஷம். திருமறைக்கு பிறரைக் கவர்ச்சிக்கும் அற்புதசக்தி உண்டென்று கெத்தே என்ற ஜெர்மானியக் கவிஞன் கூறுகின்றான். பணக்காரன், பஞ்சை என்ற பாகுபாடின்றி, வலியார்க்கும், எளியார்க்கும் ஒரே நீதியைக் கைக்கொண்டது—கைக் கொள்கிறது திருமறை. கல்வியின் சிறப்பு, மங்கையரின் மாண்பு, தானத்தின் மேம்பாடு ஆகியவை பற்றி எடுத்துரைக்கும் வேத நூல் திருக்குர்ஆன்.

இத்தகைய சீருஞ் சிறப்பும் பெற்ற திருக்குர் ஆனின் கருத்துக்களை தம் குழந்தைகளுக்கு போதிப்பதில் தாய்மார்கள் மிகவும் கவனம் செலுத்த வேண்டும். அருங்குழந்தைச் செல்வத்தை யுடைய அன்னைமார்கள் தம் குழந்தைகள் மழலை மொழி பேசு முன்னரே, பாலோடு, அமுதமாம் மாமறையையும் சேர்த்து ஊட்ட வேண்டும். அப்பொழுதுதான் வேதத்தைப் பற்றிய ஆழ்ந்த அறிவு அவர்கள் இதயத்தில் பசுமரத்தாணி போல் பதியும்.

"நிச்சயமாக இந்த குர்ஆன் உங்களுக்கு நேர்மையானவற்றை அறிவித்துக் கொண்டிருக்கிறது. இதனை விசுவாசம் கொண்டு நற்காரியங்களைச் செய்வோர்க்கு திட்டமாக மிகப் பெரிய கூலி உண்டு என்ற நல் வாக்கையும் கூறிக் கொண்டிருக்கிறது" (குர்ஆன் 17:9.)

"வார்த்தையிலே சிறந்தது அல்லாஹ்வின் வேதமும், நடத்தையிலே சிறந்தது என்னுடைய நடத்தையுமாகும்" என நபிபிரான் நவின்றிருக்கின்றார்கள். எனவே நாம், சீர்திருத்தப் பொக்கிஷமாம் மாமறையை ஊன்றிக் கற்கவேண்டும். கற்றபின் அதற்குத்தக்க நின்று, அதன் கருத்தை "யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற நோக்கோடு பிறருக்கும் படித்துக் காட்ட வேண்டும். "திருமறையின் அருங் கருத்தை பிறருக்கு ஓதிக் காண்பிப்பவர் சிறந்தவர்" என்ற இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களின் நல் வாக்கு நமக்கு வழி காட்டியாக அமையவேண்டும். ★

'பாபு' பற்பொடி

டிரேட் மார்க்

உங்கள் வாய் துர்நாற்றத்தை நீக்கி, உங்கள் பற்களை சுத்தம் செய்து ஈறுகளை பலப்படுத்துகிறது.

தயாரிப்பவர்கள் :

பாபு கம்பெனி,

16, பூந்தோட்டம் தெரு,

ராமநாதபுரம் ரோடு, மதுரை.

ஏஜண்டுகள் இல்லாத ஊர்களில் ஏஜண்டுகள் தேவை

புத்தக விமர்சனம்

தஃலீமுத்தீன் என்னும் நன் மார்க்க நடைகள்.

(மௌலானா முஹம்மது அஷ்ரப் அலீ தானவீ (ரஹ்) அவர்களின் உர்தூ நூலை மௌலவீ அ. மு. அப்துல் ஜப்பார் (பாக்கவீ) மொழி பெயர்த்தது. பக்: 128. விலை 0-15-0 பிரசுரம்: குர்ஆனிய்யா புக் டிப்போ 56, தாசில்தார் பள்ளிவாசல் தெரு, மதுரை.)

மார்க்க அறிவும், உர்தூ, அரபி ஆகிய மொழிகளில் புலமையும் ஒருங்கே பெற்றிருந்தவர்கள் மௌலானா அஷ்ரப் அலீ தானவீ. அன்னார் வரைந்த தஃலீமுத்தீன் என்ற உர்தூ நூலின் தமிழாக்கம் இரண்டாம் பதிப்பாக வெளி வந்திருக்கிறது. வழி தவறிச் செல்லும் பல பிரிவினர்க்கு நல்லறிவு போதிக்கும் சீரிய நூலாக இப்பிரசுரம் விளங்குகிறது. வணக்கத்தில் இணை வைத்தல், பழக்க வழகத்திலுள்ள சடங்குகள், தொழுகை, அன்பளிப்பு. சபையின் ஒழுக்கம் நாவைப் பேணல் போன்ற ஐப்பது தலைப்புக்களில் அரிய பல போதனைகள் தொகுத்துத் தரப் பட்டுள்ளன. குறைந்த விலையில் நிறைந்த பொருளைக் கொண்டு விளங்கும் இப்புத்தகம் பயனுள்ளது.

"எம். ஏ."

மான்குட்டி

[மூலம்: மார்ஜோரி கின்னன் ராலிங். தமிழாக்கம்: காளிதாசன். வெளியீடு; ஜோதி நிலையம், திருவல்லிக்கேணி, சென்னை, 5. பக்கம் 155. விலை ரூபாய் 1—8—0.]

வனத்தில் வாழும் பொன்னன் பத்தரின் மகன் ஜோதிக்கு விலங்குகளின் மீது அன்புண்டு. அன்னை பொன்னியோ அவனுக்கு நேர்முரண். வேட்டையில் பத்தரின் காலில் பாம்பு கடித்து விட்டது. விஷத்திற்குப் பரிகாரம் செய்ய, மான் ஒன்றைச் சுட்டு, அதன் ஈரலை. எடுத்தார் பத்தர். இறந்துபோன மானின் குட்டியை, தனக்குள்ள பாலையும் கொடுத்து, வளர்த்து வந்தான் ஜோதி. இருவரும் இணைபிரியாதவர்களாகி விட்டார்கள். மான்குட்டி பயிர்களை ஓயாது அழிக்கவே, அதைச் சுட்டு விடும்படி ஜோதிக்கு ஏவினார் பத்தர். ஜோதியோ அதை வெளியூரில் விற்றுவரப் போனான். அங்கு அவன் தூங்கிக் கொண்டிருக்கும்போது, மான் குட்டி வீடு திரும்பி, பயிர்களையும் நாசம் செய்கிறது. எனவே பொன்னியே அதைச் சுட்டாள். அதைக்கண்டு ஜோதி துடித்துவிட்டான். முடமான மான் குட்டியை அவனே சுட்டுக் கொன்றான். மானைப் பிரிந்த வேதனையால், வீடு திரும்ப மனமில்லாமல், பசியோடு அலைந்தான் ஜோதி. தன் பிரிவால் தந்தையும், செத்துப் போவாரோ என்ற திகிலில் வீடு திரும்பினான். 'வாழ்க்கை எல்லோரையுமே சோதனை செய்கிறது———வாழ்விலே ஓரே விதி, "போரிடு" என்பதுதான். இவையே திரும்பிய மகனுக்கு பத்தர் கூறும் புத்திமதிகள்!

தன் பெற்றோரிடமிருந்து மான் குட்டியைக் காப்பாற்றப் போரிடும் ஜோதியின் உணர்ச்சிகள் உள்ளத்தைத் தொடுகின்றன. மனிதர்களின் கொடுமைகளுக்கஞ்சி, காட்டில் குடியேறிய பத்தரும் பொன்னியும், 'சுபாவமான' மான் குட்டியின் குறும்புகளைப் பொறுக்கத் தயாராக இல்லாத நிலையினைச் சித்தரிக்கப்பட்டுள்ளது. ஆசிரியர் கையாண்டுள்ள நடை ஆங்காங்கே கடினமாக இருக்கின்றது. (2-ம்) 'நிமிளைத் தேனடைகள் நிரம்பிய மர முழைவை (பக்-6) அலையலைத்து நுரை கொதிக்கும் நுண் சிறகணைத்த பிரிமணைப் பிணையல்களென வெண் மேகங்கள் (பக்—12) இவற்றுக்கிடையில், 'நீர்ச்சுழலொன்று வட்டமிடுகின்றது. அதில் மணற்துண்டுகள் வேகும் அரிசி மணிகள் போல் மேலும் கீழுமாய் விளையாடுகின்றன (பக் 8,) வெந்துபோன எலும்பைப் போல் உலகம் வெளிறிக் கிடந்தது (பக் 101,) வெள்ளங் கீறி புண்பட்ட உலகம். (பக் 110)' என்பன போன்ற அழகு தமிழையும் மொழி பெயர்ப்பிலும் காணலாம், மான்குட்டி வாசிக்கவேண்டிய நாவல்களில் ஒன்றாகும்.

'மருதாம்'

சிந்தனையும், மின்னொளியும், (மூலம்: அரவிந்தர். தமிழாக்கம் ப. கோதண்டராமன் எம். ஏ. பி. எல். பக்; சிறு அளவில் 44 விலை: எட்டணா. பிரசுரம்: அரவிந்த ஆசிரமம். புதுச்சேரி.)

அரவிந்தரின் சிந்தனையிலும், அனுபத்திலும் முதிர்ந்த அரிய பொன் மொழிகளைக் கொண்ட இப் பிரசுரம் இரண்டாம் பதிப்பாக வெளிவந்திருக்கிறது. "காலமும், உயிரும், உலகும் நாம் செயல்புரிவதற்குரிய களங்களாக அளிக்கப்பட்டுள்ளன." "தன் அறிவாகிய அச்சின்மீது சுற்றுவதொன்றே மானிட ஜீவனுக்குரிய இயக்கமன்று" போன்ற அறிவுரைகள் சிந்தனைக் குரியவை.

ஹலோ! போலீஸ் ஸ்டேஷனா?

(ஆசிரியர் :— ஆர். எஸ்: மணி, வெளியீடு : — "லிப்கோ" மதராஸ் 17. விலை :- ரூபாய். 1-0-0. பக்கங்கள் 96.)

ஆரம்ப முதல் கடைசி வரையிலும் யாருமே சந்தேகப்பட முடியாத ஒருவர் குற்றவாளியாக வரும் சம்பவத்தை மிக எளிய அழகிய முறையில் ஆசிரியர் எழுதியிருப்பது பாராட்டத் தக்கது. ஆனால் துப்பறியும் துளசிங்கம் ஒவ்வொருவரையும் குற்றவாளிய

மதிப்புரைக்குப் புத்தகம் அனுப்புவோர் இரண்டு பிரதிகள் அனுப்ப வேண்டும்.

எனச் சந்தேகிப்பதைத் தானே வாய்விட்டுச் சொல்லாத முறையில்—இன்ஸ்பெக்டர் சங்கரனே சந்தேகப்பட்டுச் சொல்வது போல எழுதியிருந்தால் இன்னும் நன்றாக இருக்கும்.

—ஓ. எம். எஸ். அப்துல் காதர்.

காதில் விழுந்தது

(ஆசிரியர் ஆர். எஸ். மணி

விலை ரூ ஒன்று. வெளியீடு : லிப்கோ-

தி: லிட்டில் பிளவர்கம்பெனி,

தி. நகர், சென்னை 17.)

இந்த நவீனத்தில் ஒரு கொலையின் மர்மத்தைக் கண்டுபிடிக்க, இன்ஸ்பெக்டர், ஆறு நபர்களைக்கொண்ட துப்பறியும் கழகத்தின் உதவியை நாடுகிறார். ஒவ்வொரு துப்பறிபவரும் ஒவ்வொரு கோணத்திலிருந்து கொலையின் காரணத்தை அறிந்து அதை மற்றவர்களின் முன்னால் விளக்குகிறார். கடைசி

ஸ்ரீ முருகன் நிலையம்.

ஆராத புண்களை ஆற்றும் அய்யம்பாளையம்

ஆண்டியப்பசாமி அருள்ஜோதி களிம்பு

வெட்டுக்காயம், சிலந்தி, அரையாப்பு, ராஜபிளவை, பக்கப் பிளவை, மார் ஆணி, கம்புக்கூடு சிலந்தி, கன்னப்புத்து, கண் ஓசை, கண்டமாலை, முகப்பரு, வேனற்கட்டி, அடிபட்ட வீக்கம், கட்டை, சிராய் இரும்பு, தகரம் குத்தி உள்ளிருந்தாலும் இந்தக் களிம்பைத் துணியில் தளமாக ஒட்டிக் கட்டக்கூடிய இடமாக இருந்தால் கட்டிவிடலாம் அல்லது ஒட்டி விட்டால் வலி வீக்கங்களை குறைத்துச் சீயையும் அதிலுள்ள வஸ்துக்களையும் 4, 5 தினத்தில் வெளியேற்றி ஆற்றிவிடும். கட்டி, சிலந்தி உடைந்தவுடன் அதே களிம்பைத் துணியில் கண்விடாமல் தடவி ஒட்டவும். ஒட்டி விட்டால் சலத்தையும் வெளியேற்றி ஆற்றிவிடும். சாம்பிள் டப்பி 1-க்கு ரூ. 0 4 0.

தயாரிப்பவர் :—

ஆண்டியப்பசாமி குமாரர், A. மலையப்பசாமி,
43, மேலமாசி வீதி. மதுரை.

யில் குற்றவாளி அறுவரில் ஒருவர் என்ற நிலை ஏற்படுகிறது. கதைகளினூடே சிற்சில இடங்களில் முரண்பாடுகள் தென்படினும் துப்பறியும் வாசகர்களுக்கு இந் நவீனம் திருப்தியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. அச்சும் அமைப்பும் அழகாக இருக்கின்றன.

—மு. கா. முஸ்தபா.

மலர்கள்.

பிறைக் கொடி.

[பெருநாள் மலர். பெரிய அளவில் 24 பக்கங்கள். விலை (சிங்கையில்) ஐம்பது காசு. பிரசுரம்: கிரஸண்ட் பப்ளிஷர்ஸ். 939, சிராங்கூன் ரோடு, சிங்கப்பூர் (12).]

அருட் கொடைகள் என்ற இபுனு ஜமாலுத்தீனின் கவிதையோடு துவங்கும் அரிய மலர், பொருள் செறிவுள்ள பல எழுத்தோவியங்களைத் தாங்கி வெளிவந்துள்ளது. எம். அப்துல் வஹ்ஹாப் எம்.ஏ.பி டி.எச். அவர்களின் "புகழ் சேர்க்கும் பெருநாள்", அறிஞர் மு. கறீம் கனீயின் "சிங்கப்பூரிலிருந்து ஜிப்ரால்டர் வரை" 'ஹஸனி'ன் "ஒரு சொல் போதும்" ஆகிய கட்டுரைகள் கருத்து நிறைந்தவை. பெருமானாரின் அழகிய முன்மாதிரியைப் படம் பிடித்துக் காட்டுகிறது துபாஷின் கட்டுரை. 'சதா உழைக்க வேண்டும்; இதுவே இயற்கைச் சட்டம்' என்பதை அழகுபடக் கூறுகிறார் ஜே. எம். ஹுஸைன் பி.ஏ. இன்னும் எம்.ஏ.எம். ஸாலிஹ் எம்.ஏ., கே. எம். அப்துல் காதிர் பி. ஏ. ஆகியோரின் மொழி பெயர்ப்புக் கட்டுரைகள் நல்ல பொருள்களை நயம்பட உரைக்கின்றன. மஹதீயின் நீதி வேந்தன்' பஹ்மனீ ஸுல்தான் பைரோஸ் ஷாவின் நேர்மையுள்ளத்தை நெஞ்சு குளிரக் கூறுகிறது. வீர மன்னன் தைமூரின் வாழ்விலே நிகழ்ந்த சுவையுள்ள ஒரு சம்பவத்தை விறுவிறுப்போடு விளக்கும் ஹுஸைனின் "பெண்களுக்கே பெருமை!" சிறந்த நாடகமாக அமைந்துள்ளது.

ஸூஃபியின் நன்மொழி...

என் இளம்பிராயத்திலே மதரஸாவில் படித்துக்கொண்டிருந்த காலம். என் நண்பர்களும் என்னுடன் தங்கி பாடங்கள் படித்துவர வசதி செய்திருந்தார்கள்.

ஓர் இரவு நான் தொழுகையை குறைவற முடித்து இறைவனின் திருநாமங்களை விதித்த முறைப்படி சொல்லிவிட்டு மிகவும் பக்தியோடு இருந்தேன். என் தந்தையாரும் என்னுடன் இருந்தார்கள். தூக்கமுமின்றி துணையுமின்றி நான் விழித்திருந்து திருமறையை கைகளிலே அணைத்தவாறு ஓதிக்கொண்டிருந்தேன். என் மற்ற நண்பர்கள் எல்லோருமே தூக்கத்தில் ஆழ்ந்து கிடந்தனர்.

ஒழுக்கத்தில் நானே சிறந்தவன் என்ற எண்ணம் என் உள்ளத்தில் மேலோங்கியது. என் தந்தையாரை நோக்கி "அப்பா! ஓதுவதை விட்டு ஒழுக்கம் இன்றி மரக்கட்டைகள் போல இவர்கள் உறங்குவதைப் பாருங்கள்" என்று கூறினேன்.

என் தந்தையின் நெற்றியில் துயரின் ரேகை சிறிது படருவதைக் கண்டேன். அவர்கள் என்னை நோக்கி "மற்றவர்களின் குற்றங் குறைகளைக் கண்டு, எடுத்து விளம்புவதை விட நீயும் அவர்களைப் போல் தூங்கி விடுவது கூட மேலானது. பெருமையடித்துக் கொள்பவன் தன்னைத்தவிர யாரையுமே காண்பதில்லை. அவன் கண்களின் முன்னால் ஆணவம் திரையிட்டுவிடுகிறது. அவனது பார்வை இறைவனின் நேர் வழியில் உண்மையிலே ஊன்றி இருந்தால், மற்றவர் எவருமே அவனுக்குக் குறைவானவர்களாகத் தோன்ற மாட்டார்கள்" என்று எனக்கு அறிவுறுத்தினார்.

நானும் என் பேதைமையை எண்ணி வெட்கித் தலை குனிந்து நின்றேன்.

இக்பால் நினைவு மலர். பக்: 62. விலை (சிங்கையில்) 75 காசு. பிரசுரம்: ஸல்மா பப்ளிகேஷன்ஸ். 436, சிராங்கூன் ரோடு, சிங்கப்பூர்.

காலஞ் சென்ற அமரகவி அல்லாமா இக்பால் (ரஹ்) அவர்களின் நினைவிலே வெளியாகியிருக்கும் "இக்பால் நினைவு மலர்" அரிய பல கட்டுரைகளும், இரு கவிதைகளும் கொண்ட கவினுறு சிறப்பிதழாக வெளிவந்துள்ளது. அமர கவியின் பெருமையை அழகுற எடுத்துரைக்கிறார் ஜே. எம். ஹுஸைன் பி. ஏ. கவிஞர் கண்ட கார்டோவாவுக்கு நம்மை அழைத்துச் செல்கிறார் காரை அலீ. பெண்மைக்கு மதிப்புத் தந்த கவிஞரின் பெருமையை எம். ஏ. ஜைனப் எழுதுவது பொருத்தமுடைத்து. அமர கவியின் கவிதைகளிலே காணும் அழகுணர்வைக் கலையுணர்வோடு, காவிய உணர்வோடு நம்மை ரசிக்கச் செய்கிறார் கே. எஸ். மகுதூம் முஹைதீன் பி. ஏ. 'வாழவைக்கும் வளமார் கவிஞர்' எம். அப்துல் வஹ்ஹாப் எம். ஏ. பி. டி. எச். அவர்களின் நீண்ட ஆய்வுக் கட்டுரை; தன்னுணர்வும், செயலாற்றும் திறமையும், இறைக்கு மட்டும் அடிபணியும் தன்மையும் கொண்ட மனிதன் எந்தச் சக்திக்கும் அசைந்து கொடுக்காதவன் என்ற இக்பாலின் தத்துவத்தை இக்கட்டுரை இனிதுற விளக்குகிறது. இத்தகைய சிறப்பு மலரில் கட்டுரை தரா எழுத்தாளர்களையும், விளம்பரம் தரா வியாபாரிகளையும் ஆசிரியர் குறை கூறியிருப்பது சிறப்புடையதாகத் தோன்றவில்லை.

மாணவர் இதயம்: ஈத் மலர். பக்: 52. விலை (பர்மாவில்) அறுபது பியா. பிரசுரம்: சோலியா முஸ்லிம் மாணவர் சங்கம். ரங்கூன்.

கடல் கடந்து வாழும் நம் மாணவர்கள் இத்தகைய ஓர் அழகிய மலரை வெளியிட்டிருப்பது பாராட்டத் தக்கது. சுவர்க்கம், நரகம் பற்றிய பிரச்சினையைச் சுவை பட விளக்கியிருக்கிறார் அ. க. ரிபாயீ பி. ஏ. "பெண்" இலக்கிய நயம் கொண்ட இனியதொரு கட்டுரை. சிறு கதை மன்னர்களான 'ஜேயெம்', 'துபாஷ்' ஆகியோரின் சிறு கதைகள் மலருக்கு மணமூட்டுகின்றன. கண் கவரும் அமைப்போடு விளங்கும் "மாணவர் இதயம்" நம் இதயத்தையும் தொடுவதில் ஆச்சரியமில்லை.

எம். ஏ.

தமிழரசு: மாதம் இருமுறை, பெரிய அளவில் 8 பக்கங்கள். விலை (இலங்கையில்) பத்து சதம். பிரசுரம்; யாழ்ப்பாணம். இலங்கை.

இலங்கை வாழ் தமிழர்களின் நலனுக்காகப் பாடுபடும் 'தமிழரசு' பத்திரிகையின் முதல் இதழ் வரப்பெற்றோம். அரசியல் கட்டுரைகளோடு, இரு கவிதைகளும் ஒரு நாடகமும் முதல் இதழில் இடம் பெற்றுள்ளன. எழுத்திலே வேகமிருக்கிறது.

தாஜ் டியூட்டோரியல் இன்ஸ்டிட்டியூட்
மேலமாசி வீதி, மதுரை.

எஸ். எஸ். எல். சி.
அக்டோபர் & மார்ச்
இ. எஸ். எல். சி.
மார்ச்

T
T
I

மெட்ரூஸ் பப்ளிக்
சர்விஸ் கமிஷன்
அக்டோபர்
வகுப்புகள்

ஆரம்பம் ஜூன் 10-ம் தேதி

கே: அ. நூர்முஹம்மது,
சென்னை 2.

சில ஊர்களில் ஜும்ஆ தொழுகையின்போது குத்பாவை அரபி மொழியில் ஓதி வருகிறார்கள். அரபி மொழியில் ஓதுவதினால் பெரும்பாலான மக்கள் புரியாத நிலையில் இருந்து வருகிறார்கள். ஆகவே ஜும்ஆ குத்பாவை அரபியில் ஓதி பின் அதை மொழி பெயர்ப்பதில் ஏதும் தவறுண்டா? அல்லது அரபியில் தான் ஓத வேண்டும் என்று மார்க்கம் தீர்ப்பளித்திருக்கிறதா?

டி. எம். எம். தாஜுத்தீன்,
அபிவிர்த்தீஸ்வரம்

ஜும் ஆவில் ஆற்றப்படும் சொற்பொழிவு யார் காலத்தில் முதன் முதலில் துவக்கப்பட்டது?

ப: 'குத்பா'வைப் பற்றிய இம்மாதிரி சந்தேகங்கள் பத்திரிகைகளில் பல தடவைகள் கேட்கப்படுகின்றன. ஆகவே இவற்றிற்குச் சற்று விரிவாகவே பதில் கொடுக்க விரும்புகிறோம்.

'குத்பா' என்னும் அரபிச் சொல்லுக்கு பிரசங்கம், சொற் பொழிவு என்று பொருள்படும். குத்பாவைப் பற்றித் திருக்குர்ஆனில் எங்கும் சொல்லப்படவில்லை. ஜும்ஆவைப் பற்றிக் குறிப்பிடும் திருமறையின் 62-ம் அத்தியாயத்தில் கூட. "இதா நூதிய லிஸ்ஸலாத்தி மின் யவ்மில் ஜும்அதி" வெள்ளிக்கிழமையன்று (ஜும்ஆத்) தொழுகைக்காக நீங்கள் அழைக்கப்பட்டால்..........." என்று சொல்லப் பட்டிருக்கிறது; அதாவது 'ஸலாத்' (தொழுகையைப்) பற்றிக் குறிப்பிடப் பட்டிருக்கிறது; குத்பாவைப் பற்றிக் கூறப்படவில்லை. இதை அடிப்படையாக வைத்துக் கொண்டு, ஜும்ஆத் தொழுகைக்கு முன்னால் இப்பொழுது உள்ளது போன்ற குத்பா உமைய்யாக்கள் கலீபாக்களாக ஆட்சி செய்ய ஆரம்பித்த காலத்திலேதான் பழக்கத்திற்கு வந்தது; தங்கள் குடும்பநலனைப் பாதுகாக்க விரும்பிய உமைய்யாக்கள் தங்கள் வம்சப் பெருமையை 'குத்பாவில்' பேசச் செய்தார்கள் என்று சிலர் முடிவு காண்கின்றனர். ஆனால் 'குத்பா' ஓதும் வழக்கம் நாயகம் காலத்திலேயிருந்தது என்பதற்கு 'ஹதீது' தொகுப்பு நூற்களில் தகுந்த ஆதாரம் உளது.

வெள்ளிக்கிழமை ஜும்ஆவிலும் பெருநாள் தொழுகைகளிலும், தவிரது 'குத்பா' ஓதப்படுகின்றது. கிரகணங்கள் ஏற்படும் போதும், நிலம் வரண்டு மழையின்றி மக்கள் தவிக்கும் போதும் குத்பா ஓதப்படுவதுண்டு. குத்பாவின் நோக்கம் இறைவனை வணங்குவது, அதன் பின்னர் நாட்டு நடப்புகளைச் சொல்லி மக்களுக்கு அறவுரை வழங்குவது, தொழ வருபவர்களுக்கு போதனை செய்யும்போது, அவர்களுக்குப் புரியும் மொழியிலே போதனை செய்வது தானே அறிவுடைமை. குத்பாவிலே மத விஷயங்கள் தவிர, நாட்டு நடப்புகள் பொருளாதாரச் செய்திகள் ஆகியவை கூட அக் காலத்தில் பேசப்பட்டதாகச் சரித்திரச் சான்றுகள் கூறுகின்றன.

உமைய்யா—கலீபா அப்துல் மலிக் காலத்தில் கூபாநகரில் கலகமேற்படுகிறது. இரக்கமற்ற ஹஜ்ஜாஜ் இப்னு யூஸுப் அதை அடக்க அனுப்பப்படுகிறார். பன்னிரண்டு ஒட்டகை வீரர்களுடன் கூபா சென்ற ஹஜ்ஜாஜ், பிரசித் பெற்ற அந் நகரின் ஜாமிஆப் பள்ளிக்கு நேரே விரைந்து செல்கிறார். தலைப்பாகையின் துணியால் அவர் முகம் மறைந்திருக்கிறது. மின்பரில் ஏறிய ஹஜ்ஜாஜ் பழங் கவிஞர் ஒருவரின் கவிதையோடு தம் குத்பாவை ஆரம்பிக்கிறார்.

"இருளை விரட்டும் இளவல் நான், மலை உச்சியை மிதிக்கும் மனிதன் நான் இத் தலைப்பாகையை உயர்த்தினால் நான் யாரென்று தெரியும் உங்களுக்கு" என்று கூறிக்கொண்டே விருட்டென்று தம் முகத்தை மறைத்திருந்த துணியை விலக்கினார். மக்கள் வெருண்டனர்.

"கூபா மக்களே! வெட்டுவதற்காக முதிர்ந்திருக்கும் தங்களைக் காண்கிறேன். அவற்றைச் செய்பவனும் நானே..........." என்று தம் குத்பாவைத் தொடர்கிறார்.

இராக் நாட்டை இப்படிச் சீரழிக்கும் இந்த உமைய்யா வம்சத்தை ஆண்டவன் அழிக்க என்று மக்கள் முணுமுணுக்கின்றனர். இந்தச் சம்பவத்தை "காமிலுல் முபாரத்" என்னும் அரபி இலக்கிய—இலக்கண நூல் சுவைபடக் கூறுகிறது. (காமிலுல் முபாரத், முதல் பாகம். ஹி; 1855-ம் ஆண்டுப் பதிப்பு. பக். 223.)

இப்படி நாட்டு நடப்பு பொருளாதாரம் எல்லாம் மின்பரில் பேசப்பட்டது. குத்பாவில் விளக்கப்பட்டது. நபி பெருமானார் அவர்கள் ஒரு தடவை குத்பாப் பிரசங்கம் செய்து கொண்டிருக்கும் பொழுது தோழர் ஒருவர் மழையின்றி மக்கள் தவிப்பதைப்பற்றி நாயகத்துக்கு நினைவூட்டினார். நாயகமவர்கள் நாடு செழிக்க நாயனிடம் வேண்டினார்கள் என்று புகாரி ஷரீபில் வரும் ஹதீது ஒன்று கூறுகிறது. பிறிதொரு தடவை நபிமணியவர்கள் குத்பா பிரசங்கம் செய்து கொண்டிருக்கும்போது தோழர் ஒருவர் ஈமான் பற்றி பூரண விளக்கம் கேட்டார். நாயகம் அவர்கள் அதனைப் பற்றி விளக்கிவிட்டு, தங்கள் குத்பாவைத் தொடர்ந்தார்கள். (ஸஹீஹ் முஸ்லிம்) இன்னும் பெருநாள் குத்பாப் பிரசங்கம் செய்யும்போது தற்காப்புக்கு ஆயத்தம் செய்வதுபற்றி நாயகம் பேசுவார்கள் என்று இமாம் இப்னு கய்யிமின் "ஸல்துல்மஆத்" என்னும் நூல் குறிப்பிடுகிறது.

இச் சான்றுகளிலிருந்து குத்பாவில்

உதவிபுரியுங்கள்.

இஸ்லாமியப் பெரியார்கள், சகோதரர்கள் அனைவருக்கும் எங்களின்
அஸ்ஸலாமு அலைக்கும்

நெல்லை மாவட்டம் கோவில்பட்டி தாலுக்கா விளாத்திகுளத்தில் சுமார் 40 வருடத்திற்குமுன், காலம் சென்ற ஜனாப் காதர்பாஷா சாஹிப் அவர்கள் முயற்சியின் பேரில் சர்க்காரால் கொடுக்கப்பட்ட சுமார் ஒரு ஏக்கர் காலி மனையில் தர்மசீலர்கள் சிலரின் பண உதவியால் ஒரு பள்ளிவாயில் கட்டப்பட்டது.

நாளடைவில் இப் பள்ளிவாசல் கவனிப்பாரில்லாமற் போய்விட்டது. தற்சமயம் சுமார் 15 குடும்பங்கள் ஷெ ஊரில் இருந்து வருகின்றன. ஷெயார்கள் பக்கத்து கிராமங்களுக்கு வெள்ளிக்கிழமை மட்டும் ஜும்ஆ தொழுகைக்குப் போகிறார்கள்.

பல ஊர்களிலிருந்து வியாபாரம் விஷயமாக வருகிற முஸ்லிம்களுக்கும், உள்ளூர் முஸ்லிம்களுக்கும் தொழுகைக்காக வேண்டி கவர்ன்மெண்டு முஸ்லிம் உத்தியோகஸ்தர்கள் பலர் விளாத்திகுளத்தில் அடிக்கடி இருக்கவேண்டியதிருப்பதாலும் இப் பள்ளிவாசலை அபிவிருத்தி செய்ய வேண்டியதிருக்கிறது. அல்லாஹ்வின் திருவீடான இம்மஸ்ஜித், சிறந்துவிளங்கவும் மஸ்ஜிதில் எப்போதும் மக்கள் தொழுது கொண்டு வரவும் தாங்கள் தங்களாலான பொருளுதவி செய்வதுடன் தாங்கள் முயற்சித்தும் மற்றும் பெரியார்களிடம் வசூல்செய்தும் இப் புண்ணிய காரியம் பூர்த்தியாக உதவி செய்யும்படிவேண்டிக்கொள்கிறோம்.

[அரியநாயகிபுரம் முஸ்லிம் ஜமா அத்தார்கள் சார்பாக]

அ. அ. முஹம்மது தாஜுத்தீன்,
தலைவர்: முஸ்லிம் அபிவிருத்தி வாலிபர் சங்கம்,
அரியநாயகிபுரம் P. O.
[விளாத்திகுளம் மார்க்கம்]
திருநெல்வேலி ஜில்லா.

தபால், பணம் அனுப்புவோர் மேலேகண்ட விலாசத்திற்கு அனுப்ப வேண்டுகிறோம்.

குணமும், குறையும்

ஆயிரம் நற்குணங்கள் குடிகொண்டிருக்கும் ஒருவனிடம், நாலிரண்டு குறைகள் இருக்கின்றன வென்ற காரணத்திற்காக அவனைக் குறை சொல்லுதல் கூடாது.

வண்ணமயிலின் கால்கள் குச்சி போல அவலட்சணமாக இருக்கின்றன வென்பதற்காக அதன் வடிவழகைப் பழித்துப் பேச முடியுமா?

[உர்தூ கவிஞர் ஹாலீ]

மக்களுக்கு அவ்வப்போது அவசியமுள்ள விஷயங்கள், அவ்வப்போது அவர்களை பாதிக்கும் விஷயங்கள் பற்றி உத்தமத் திருநபி காலத்திலிருந்தே பேசப்பட்டு வந்தன என்பது புலனாகும்.

நாளா வட்டத்தில் இம்முறை சீர் கேடடைந்து வந்தது. தங்கள் மொழி வன்மையையும், இலக்கிய மேதையையும் வெளிப்படுத்துவதற்காகவே 'குத்பா' ஓதலாயினர். எதுகை—மோனை அடுக்கு மொழிகள் ஆகியவை பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே 'குத்பா' ஓதுதலில் புகுந்து விட்டன. ஹலரத் அலீ (ரலி) அவர்கள் எழுதி வைத்ததாகச் சொல்லப்படும் ஒரு குத்பாவில் 'அலிப்' என்னும் எழுத்தே ஆரம்ப முதல் இறுதி வரை வருவதில்லையாம். அலீ (ரலி) அவர்கள் எழுதியதுதானா இது என்ற இன்னும் பூரணமாக ஆராயப்படவில்லை. கைபெழுத்துப் பிரதியாகவே இது இன்னும் பெர்லினில் இருக்கிறது.

சிறிது காலஞ் சுழித்து இலக்கிய நயங்கொண்ட குத்பாவை உருவாக்குவதிலும் கதிப் பேஷ் இமாம் ஆகியோரின் ஆர்வம் குறைந்தது. இன்னின்ன 'குத்பா'வை ஓதிக் கடமையைக் கழித்துக் கொள்ளலாம் என்ற அளவில் எழுதி வைத்துக் கொண்டார்கள். அதை[illegible] படித்து விடுகிறார் [illegible] இடையே தமிழ் பெயர்த் [illegible] சாதாரணமாக ஓதப் [illegible] இறை புகழும், நாயக வாழ்த்தும் தானே இது என்று மக்கள் உள் விஷயத்தை அறியாமல் கொண்டார்கள்......?

ஆனால் முஸ்லிம்களின் அறிவுத் தாகமும், ஆத்ம பக்குவமும் அதிகரிக்க அதிகரிக்க அவர்கள் தாய் மொழியிலேயே ஓதுபவரின் அறிவுரையைக் கேட்க ஆசைப் படுகிறார்கள். இமாம் கஸ்ஸாலீ (ரஹ்) அவர்கள் காலத்திலேயே குத்பா பார்ஸீ மொழியில் ஓதப்பட்டு வந்தது. ஆனால் இன்னும் உண்மையிலேயே இஸ்லாமிய முன்னேற்றம் காண விரும்பாத சிலர் குத்பாவைத் தமிழில் ஓதுவதை எதிர்க்கிறார்கள். பள்ளிகளில் மின் விசிறி வைப்பதையும், ஒலி பெருக்கி வைப்பதை எதிர்ப்பவர்கள் தாமே இவர்கள்!

"குத்பா அரபியல்லாத பாஷையைக் கொண்டதாயிருக்கிறது ஆகும்; எங்கிலும் உம்ததுல் ரிஆயாவில் பவ்லவீ அப்துல் ஹை லக்னவீ (ரஹ்) மக்ரூஹ் என்று சொல்கிறார்கள்" என்று "மஜ்இலத்துல் குத்பா" என்னும் நூலின் அரபுத்—தமிழ் மொழிபெயர்ப்பாசிரியர் கூறுகிறார் (பக் : 20) பின்னர் இவ்வாசிரியரே இமாமுல் அஃலம் அபூஹனீபா (ரஹ்) அவர்கள் சொல்படி அரபியல்லாத பிறமொழிகளில் குத்பா ஓதுவது 'ஜாயிஸ்' (அனுமதிக்கப்பட்டது.) என்று வரைந்திருக்கிறார் (பக் : 25.)

இன்று வட இந்தியா முழுவதிலும் உர்தூ மொழியிலும், கிழக்கு பாக்கிஸ்தானில் வங்காளியிலும், இரானில் பார்ஸியிலும், துருக்கியில் துருக்கி மொழியிலும் குத்பா ஓதப்பட்டு, அதன் மூலம் மக்கள் பயனடைந்து வரும் பொழுது, தமிழ்நாட்டில் மட்டும் தாய் மொழியில் குத்பா ஓதுவதைத் தடை செய்ய முயல்வது சிறப்புடைய செய்கையல்ல.

[குறிப்பு: அடுத்த மாதம் ஹஜ் மலரில் "ஆலப்கீர்" கேள்வி பதில் பகுதிக்காக இன்னும் ஓரிரு பக்கங்கள் அதிகமாக ஒதுக்கப்படும். இம் மாதம் பரிசு எதுவும் கொடுக்கப்படவில்லை, அடுத்த மாதம் மட்டும் இப் பகுதிக்காக மூன்று பரிசுகள் வழங்கப்பெறும்; அதற்குப் பின்னர் வழக்கம்போல் இரு பரிசுகள் வழங்கப் பெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

—ஆசிரியர்.

Edited and Published by A. M. Meeran 192, Angappa Naick Street, Madras-1,
Printed by P. S. Venugopalasamy Naidu, at Vinodan Press, Madras-1
TAMIL NAD.

தரத்திலும் தயாரிப்பிலும்

சிறந்தது

★

சென்னை ஏஜெண்டுகள் :

ராயல் டிரேடிங் கம்பெனி

69, அரண்மனைக்காரன் தெரு

சென்னை-1